விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378


# வலம்புரி
Valampurii


E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk



கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி;
யாழ்ப்பாணம்.
Email: Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே



சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 வைகாசி 01 புதன்கிழமை (15.05.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 147


# வன்முறைகள் மேலும் தீவிரமடையலாம்

## இலங்கைக்கு ஐ.நா. எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் தற்போதைய நிலவரத்தை உரிய முறையில் கையாளாவிட்டால் வன்முறைகள் மேலும் தீவிரமடையலாம் என ஐ.நா. எச்சரித்துள்ளது.

இலங்கையில் சிறுபான்மை மதத்தவர்களிற்கு எதிராக இடம்பெறும் தாக்குதல்கள் குறித்தும் ஐ.நா. கவலை வெளியிட்டுள்ளது. (03ஆம் பக்கம் பார்க்க)

---

புலிகளோ, இராணுவமோ

## பயன்படுத்தாத வெடிபொருள்

ஈஸ்டர் தாக்குதலுக்கு பயன்பாடு ஆய்வுகளில் கண்டறிவு

(கொழும்பு)

ஈஸ்டர் ஞாயிறு தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களுக்குப் பயன்படுத்தப்பட்ட குண்டுகள் அனைத்துமே மிகவும் திறமையான 23☛

---

ஊரடங்கு அமுலில்

## கொடிகாமத்தில் வாள்வெட்டு

நால்வர் படுகாயம்

(கொடிகாமம்)

கொடிகாமம் கெற்பேலி பாலாவியில் குழுக்களிடையே இடம்பெற்ற வாள்வெட்டில் நால் 23☛

---

பாதுகாப்பு தொடர்பில்

## மாகாண மட்டத்தில் விசேட வேலைத்திட்டம்

ஜனாதிபதி ஆளுநருக்கு பணிப்பு

(கொழும்பு)

மாகாண சபைகள் கலைக்கப்பட்டிருந்தாலும் முன்னாள் முதலமைச்சர்களின் பங்களிப்புடன் அனைத்து மாகாண சபைகளையும் மீள அழைக்கப்பட்டு அந்தந்த மாகாணங்களின்பாதுகாப்பு வேலைத்திட்டங்கள் தொடர்பில் 23☛

---

முஸ்லிம்களை பயங்கரவாதிகளாக சித்திரித்து

## அவர்களின் அரசியல், பொருளாதாரத்தை அரசு மழுங்கடிக்கின்றது - விக்னேஸ்வரன்

(கொழும்பு)

முஸ்லிம் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் 1983 ஆம் ஆண்டு தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட அரச பயங்கரவாதத்தை ஞாபகப்படுத்து



வதாக வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தமிழ் மக்களை பயங்கரவாதிகளாக சித்திரித்து அவர்களின் உரிமைக் 24☛

---

மௌலவி மீது தாக்குதல்

## கல்முனையில் குழப்பநிலை

இராணுவம் குவிப்பு

(கொழும்பு)

கல்முனையில் நேற்று மௌலவி ஒருவர் அப்பகுதி இளைஞர்களால் தாக்கப்பட்டதையடுத்து அங்கு பதற்றமான சூழல் தோன்றியுள்ளது. இதன் காரணமாக 23☛

---

## பயங்கரவாதத்தை ஒழிக்க உதவிகள் வழங்க தயார்



சீன ஜனாதிபதி மைத்திரியிடம் உறுதி

(பீஜிங்)

இலங்கையிலிருந்து பயங்கரவாதத்தை வேரறுத்து, தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதற்காக அனைத்து வழிகளிலும் இலங்கைக்கு உதவத் தயாரென சீன ஜனாதிபதி சீ ஜின்பிங் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 23☛

---

யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்றலில்

## மாணவர்களின் விடுதலை கோரி இன்று கவனயீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர், செயலாளர் மற்றும் மருத்துவ பீட சிற்றுண்டிச்சாலை நடத்துநர் ஆகிய மூவரையும் விடுவிக்கக் கோரி மாணவர்கள் இன்று கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். யாழ்ப்பாணப் பல்கலைக் 23☛

---

## வன்முறையுடன் தொடர்புடைய 74 பேர் கைது

பொலிஸார் தெரிவிப்பு

(கொழும்பு)

வடமேல் மாகாணத்தின் மினுவாங்கொட பகுதியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என 23☛

---

## அப்பாவி முஸ்லிம்கள் மீது தாக்குதல்கள் வேண்டாம்

சபாநாயகர் வேண்டுகோள்

(கொழும்பு)

நாட்டின் எதிர்கால நலனை கருத்திற்கொண்டு மோதல்கள் ஏற்படாதவாறு செயற்படுமாறும், அப்பாவிகளான முஸ்லிம் மக்கள் மீது தாக்குதல்களை மேற்கொள்ள வேண்டாம் என்றும், இதனால் எமது நாட்டிற்கு வரக்கூடிய அவதூறுகளை நினைவில் கொண்டு பொறுமையுடன் செயற்படுமாறும் 24☛

---

தொடர்ந்து பதற்றம்

## நாடு முழுவதும் இன்று காலைவரை ஊரடங்கு

(கொழும்பு)

இலங்கையில் பதற்ற நிலை நீடித்து வருவதால் நாடு முழுவதும் இரவு 9.00 மணி தொடக்கம் இன்று அதிகாலை 4.00 மணி வரை பொலிஸ் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படும் என்று பொலிஸ் ஊட 24☛

---

பல்கலை மாணவர்கள் தொடர்பில்

## சட்டமா அதிபர் திணைக்களம் இந்தவாரம் முடிவெடுக்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் தொடர்பான முடிவை சட்ட மா அதிபர் திணைக்களம் இந்த வாரத்தில் முடிவு எடுக்கும் என அரச சட்டவாதி யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றுக்கு அறிவித்தார்.

அதனால் மாணவர்கள் இருவர் சார்பில் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் வழங்கிய 23☛

---

## காணாமல் போன 35 தமிழர்களின் உடல்கள் மட்டக்களப்பில் புதைக்கப்பட்டுள்ளன

தமிழ் உணர்வாளர்கள் அமைப்பின் தலைவர் கணபதிப்பிள்ளை மோகன் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

கடந்த காலங்களில் காணாமல் போன 35 தமிழர்களின் உடல்கள் மட்டக்களப்புப் பகுதியில் புதைக்கப்பட்டுள்ள தகவலை கிழக்கு மாகாண இராணுவக் கட்டளைத்தளபதி மேஜர் ஜென்றல் கே.பிஏ.ஜயசேகர ஊடாக இலங்கை இராணுவத் தளபதிக்கு ஒரு தகவலை அனுப்பியுள்ளோம் என தமிழ் உணர்வாளர்கள் அமைப்பின் தலைவர் கணபதிப்பிள்ளை மோகன் தெரிவித்துள்ளார்.

நேற்று மட்டக்களப்பு கல்லடியில் இடம்பெற்ற ஊடகவிய 23☛


நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இலங்கை நிர்வாக சேவை பரீட்சையில் தேசிய ரீதியில் முதலிடத்தில் சித்தி



(யாழ்ப்பாணம்)

இலங்கை நிர்வாக சேவை தரம் IIIக்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் மண்டைதீவு எட்டாம் வட்டாரத்தைச் சேர்ந்த இராசரத்தினம் பரணீகரன் தேசிய ரீதியில் முதலாமிடத்தில் சித்தியடைந்து தெரிவாகியுள்ளார்.

அகில இலங்கை ரீதியில் முதலாமிடத்தில் சித்தியடைந்த இ.பரணீகரன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை நிறைவு செய்தவர் என்பதுடன், தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கை நிர்வாக சேவை தரம் மூன்று மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களில் நாடளாவிய ரீதியில் 46 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் இவர்களுக்கான நியமனம் இன்று வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# நாட்டில் இராணுவ ஆட்சியை ஏற்படுத்த முயற்சி - பந்துல

(கொழும்பு)

சர்வதேச இராணுவத்தை நாட்டிற்குள் வரவழைத்து, இராணுவ ஆட்சியொன்றை ஏற்படுத்துவதற்கான முயற்சியே முன்னெடுக்கப்பட்டு வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை குறிப்பிட்டார். அங்கு தொடர்ந்து தெரிவித்த அவர்.

அரசாங்கம் அல்லது அதனுடன் தொடர்புடைய குண்டர்களை ஈடுபடுத்தி 1983ஆம் ஆண்டு கறுப்பு யூலை போன்று நிராயுத, அப்பாவி முஸ்லிம் மக்கள் மீது தாக்குதல் நடத்தி அவர்களின் சொத்துக்களை சூறையாடும் முயற்சியே முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அவசரகால நிலை, ஊரடங்கு உத்தரவு என்பவற்றுக்கு அப்பால் சர்வதேச இராணுவத்தை நாட்டிற்குள் வரவழைத்து, எவ்வித தேர்தல்களையும் நடத்தாது இராணுவ ஆட்சியொன்றை ஏற்படுத்துவதற்கான முயற்சியே முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

ஏனெனில் கறுப்பு யூலை உள்ளிட்ட மூன்று தசாப்தகால யுத்தத்தை எதிர்கொண்டுள்ளோம். கறுப்பு யூலை கலவரத்தின் மூலம் விடுதலைப் புலிகள் அமைப்பு பலமடைந்தது. இதன்மூலம் விலைமதிப்பற்ற பல உயிர்களை நாம் இழந்தோம். இறுதியாக இந்திய இராணுவம் நாட்டிற்குள் அனுமதிக்கப்பட்டது. பின்னர் இந்திய இராணுவத்தை நாட்டிலிருந்து வெளியேற்றுவதற்காக 60 ஆயிரத்திற்கும் அதிகமான இளைஞர்களின் உயிர்களை இழக்க நேரிட்டது எனத் தெரிவித்தார். (ம-3)

# வெசாக் தினத்தை குழப்ப இடமளிக்க முடியாது

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

குளியாபிட்டிய பகுதிக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங், நாட்டில் சமாதானத்தை உறுதிப்படுத்தி முன்னெடுக்கப்பட வேண்டிய வேலைத்திட்டங்கள் குறித்து மகாசங்க தேரர்கள், அரசியல்வாதிகள் மற்றும் பிரதேச மக்கள் என அனைத்து தரப்பினரையும் சந்தித்து கலந்துரையாடினார்.

பயங்கரவாதிகளின் செயற்பாடுகளினால் உயிர்த்த ஞாயிறன்று பேராபத்து இடம்பெற்றது. ஆனால் வெசாக் தினத்தை குழப்புவதற்கு இடமளிக்க முடியாது. எனவே பாதுகாப்பை உறுதிப்படுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளும் அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் மற்றும் முப்படைகளுக்கும் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளது. அப்பாவி மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தி வெசாக் தினத்தை குழப்பியடிக்க இடமளிக்க போவதில்லை. தேவையான பாதுகாப்பை ஏற்படுத்தி அமைதியான முறையில் வெசாக் தின கொண்டாட்டங்கள் இடம்பெற வழிவகுக்கப்படும்.

அதற்காக ஒத்துழைப்புகளை பாதுகாப்பு துறைக்கு வழங்குமாறு பொதுமக்களை கேட்டுக்கொள்கின்றேன். இங்கு இடம்பெற்ற சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இதன்போது பிரதமர் ஊடகங்களுக்கு தெளிவுபடுத்தினார். (ம-3)

# தேர்தலை பிற்போடும் நோக்கில் நாட்டினுள் மோதல் தோற்றுவிப்பு

## வாசுதேவ நாணயக்கார குற்றச்சாட்டு

(கொழும்பு)

தேர்தலை பிற்போடும் நோக்கில் அரசாங்கம் நாட்டினுள் மோதலை தோற்றுவித்து வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார குற்றம் சுமத்தியுள்ளார்.

எதிர்க்கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சித் தலைவர்களின் கூட்டம் எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது, நாட்டில் நிலவும் தற்போதைய பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பில் அதிக அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.



இந்த சந்திப்பின் பின்னர், ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட போதே பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார இதனைக் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

# பொறுப்பில்லாதவர்களை நீக்கிவிட்டு புதிய பயணத்தை தொடருவோம்!

## அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் பயங்கரவாதத்தை ஒழிக்க ஆட்சியாளர்கள் எவரேனும் தடையாக இருந்தாலோ அல்லது பொறுப்பில்லாது செயற்பட்டாலோ அவர்களை நீக்கிவிட்டு புதிய பயணத்தை ஆரம்பிப்போம்.

சகல கட்சிகளில் உள்ள மிகச்சரியான நபர்கள் ஒன்றிணைந்து அடுத்த ஜனாதிபதி தேர்தலில் மக்களால் சுயாதீனமாக ஒருவரை தெரிவு செய்யும் சூழலை உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற தேசத்திற்கான வழி மாநாட்டில் விசேட உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,

அன்று 1971 ஏப்ரல் 5ம் திகதி ஜே.வி.பி கலவரம் உருவாகிய போது நான் முதலில் ஊரடங்கு சட்டம் குறித்து அறிந்துகொண்டேன்.

இன்றும் அதே நிலைமை என்னால் அவதானிக்க முடிகின்றது. இன்றும் ஐம்பது



ஆண்டுகளாக இந்த நாட்டில் இரத்தம், சண்டை, அவசரகால சட்டம், ஊரடங்கு சட்டம் என்பன இருந்துகொண்டுதான் உள்ளது.

இவை இல்லாத ஒரு நாடு எப்போது உருவாகப்போகிறது என்ற கேள்வி இன்றும் எம் மத்தியில் உள்ளது என அவர் தெரிவித்தார். (ம-3)

# பருத்தித்துறையில் பொலிஸார் சோதனை

## 11 வர்த்தகர்கள் கைது

(கரவெட்டி)

பருத்தித்துறை நகரப் பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது இராணுவ சீருடையை ஒத்த சீருடையினை புடவை நிலையங்களில் வைத்திருந்த இரண்டு தமிழ் வர்த்தகர்கள் உட்பட பதினொரு வர்த்தகர்கள் பருத்தித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை மாலை பருத்தித்துறை நகரப் பகுதியில் உள்ள புடவை நிலையங்களில் பருத்தித்துறை பொலிஸார் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதில் பருத்தித்துறை நகரப் பகுதியினைச் சேர்ந்த இரண்டு தமிழ் வர்த்தகர்களும் ஒன்பது முஸ்லிம் வர்த்தகர்களுமாக பதினொரு பேர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இராணுவ சீருடையினை ஒத்த சீருடைகளை வைத்திருப்போர் அதனை பொலிஸ் நிலையங்களில் ஒப்படைக்குமாறு பொலிஸார் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-60)

# இன்றைய தினமும் வெப்பமான காலநிலையே நிலவும்

கிழக்கு மாகாணத்திலும் வவுனியா, முல்லைத்தீவு மற்றும் பொலன்நறுவை மாவட்டங்களின் பல பகுதிகளிலும் இன்றைய தினம் வெப்பமான காலநிலை நிலவக்கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள செய்திக் குறிப்பொன்றில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்காரணமாக, நீர்வெளியேறுதல், அதிக களைப்பு, உடற்சோர்வு என்பன ஏற்படக் கூடும் என அந்த திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

இதேவேளை, மேல், சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி, மாத்தறை மாவட்டங்களிலும் 100 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகக்கூடும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. (ம-3)


WESTERN UNION WU

moving money for better

உலகெங்குமுள்ள நாடுகளில் இருந்து உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள

Authorised Agent

SRI MURUGAN

TELE COMMUNICATION & AGENCY POST OFFICE

# 3B, K.K.S.ROAD, JAFFNA.

TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214

E-mail: srimurugan03@gmail.com, E-mail: srimurugan09@gmail.com

தவறிவிட்டது

திருநெல்வேலியை வசிப்பிடமாகக் கொண்ட மகேந்திரராசா கவின்மாறன் என்பவரது 200220700250 எனும் இலக்கமுடைய அடையாள அட்டை மற்றும் தனியார் கல்வி நிறுவன அனுமதி அட்டை அடங்கிய பேர்ஸ் 06.05.2019 அன்று கே.கே.எஸ் வீதிக்கும் திருநெல்வேலிக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 0773549643 (8779)

தவறிவிட்டது

242/5 மானிப்பாய் வீதி, ஓட்டுமடத்தைச் சேர்ந்த மார்க்கண்டு வேதநாயகம் (550392623V) ஆகிய எனது தேசிய அடையாள அட்டை, கல்வித் திணைக்கள வேலை அடையாள அட்டை மற்றும் செலின்கோ காப்புறுதிப் பத்திரம் என்பன யாழ்ப்பாணம் ஐந்து சந்திக்கும் வைத்தீஸ்வரா வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தந்துதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(8773) தொடர்பு: 0764602826

Golden Eagle.K.T.(Pvt) Ltd

பதவி வெற்றிடங்கள்

01. கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் - ஆண் (JSO)

02. பெண் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் (LSO)

வயதெல்லை : 21 - 55 (நல்ல கண்பார்வையும் தேக ஆரோக்கியமும் இருத்தல் வேண்டும்.)

நேர்முகத் தேர்வு : 17.05.2019 மற்றும் 18.05.2019

ஆவணங்கள் : கிராம அதிகாரியின் நற்சான்று, பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், க.பொ.த (சா/த), தே.அ.அ.

தொடர்பு: 7/58, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(C-6376)

# ஆயுத மோதல் அதிர்ச்சியிலிருந்து மீள முன்

# மீண்டும் அபாய கட்டத்தில் இலங்கை!

## ஐ.நாவின் சிறப்பு ஆலோசகர்கள் அறிக்கையில் சுட்டிக்காட்டு



(ஜெனிவா)

**இனவாத ஆயுத மோதலின் அதிர்ச்சியிலிருந்து மீள முயற்சித்துவரும் இலங்கையை தற்போதைய தாக்குதல்கள் மீண்டும் பின்னோக்கி நகர்த்தி வருவதாக ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு ஆலோசகர்கள் விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

இனப்படுகொலைகளைத் தடுப்பதற்கான ஐ.நாவின் சிறப்பு ஆலோசகர் அதாமா டெய்ங் மற்றும் இலங்கையின் மத சிறுபான்மையினருக்கு எதிரான தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பதற்கான ஐ.நா. சிறப்பு ஆலோசகர் கறென் ஸ்மித் ஆகியோர் கூட்டாக வெளியிட்ட அறிக்கையொன்றிலேயே மேற்கண்டவாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"இலங்கையின் அண்மைக்கால வன்முறைகள் ஆசிய பிராந்தியத்தில் தேசியவாத மற்றும் தீவிரவாதக் கருத்துக்களை அதிகரிக்கச் செய்துள்ளதுடன், மதச் சிறுபான்மையினரை ஆபத்தில் தள்ளியுள்ளது.

இந்நிலையில், இந்த வெறுக்கத்தக்க தாக்குதல்களைத் தடுத்து நிறுத்துவதற்கு பொருத்தமான மற்றும் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள இலங்கை அரசாங்கம், எதிர்க்கட்சி, சிவில் சமூகம் மற்றும் பாதுகாப்புத் தரப்பினர் ஆகியோர் ஒன்றிணைந்து ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும்.

இனவாத ஆயுத மோதலை நோக்கி நாடு நகர்ந்து வருகிறது. இது நாட்டின் வளர்ச்சியை பின்னோக்கி தள்ளும். எனவே, இதனைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படாவிடின் நிலைமை மோசமடையும் சாத்தியம் காணப்படுகிறது.

எவ்வாறாயினும் இவ்விடயத்தில் அரசாங்கத்தின் துரித நடவடிக்கை பாராட்டத்தக்கது. இந்நிலையில், இனங்களுக்கிடையே சமாதானத்தையும் மத நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளுக்கு அரசாங்கத்திற்கு ஐ.நா. ஆதரவு வழங்கும்.

நாட்டின் அரசியலமைப்பில் அங்கீகரிக்கப்பட்டதற்கமைய தமது மதத்தை சுதந்திரமாக வெளிப்படுத்துவதற்கு அனைத்துச் சமூகத்தினருக்கும் உரிமையுண்டு.

அதற்கமைய இலங்கையர் என்ற அடிப்படையில் அனைவரும் ஒருவருக்கொருவர் மரியாதையுடன் நடத்தப்பட வேண்டும்" என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

---

### ஒட்டகங்களால் வழிநடத்தப்படும்

## சிங்கங்களின் இராணுவம் தோல்வியடையும்

### பீல்ட் மார்ஷல் பொன்சேகா



(கொழும்பு)

இலங்கையில் காணப்படும் பாதுகாப்பு நிலவரம் குறித்து கடும் அதிருப்தியடைந்துள்ளதாக முன்னாள் இராணுவத்தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னர் நாட்டில் ஏற்பட்டுள்ள சூழ்நிலைக்கு கூடிய விரைவில் தீர்வைக் காணலாம் என எவராவது கருதுவார்கள் என்றால் அவர்கள் மனோநிலை பாதிக்கப்பட்டவர்களே எனவும் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

உரிய முறையில் திட்டமிட்டு செயற்பட்டால் பாரிய பயங்கரவாத அமைப்பை அழிப்பதற்கு இரண்டு வருடங்கள் தேவைப்படலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு வெளிநாட்டு படைகளோ உதவியோ தேவையில்லை. இலங்கையிடம் போதியளவு ஆயுதங்கள் உள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஒட்டகங்களால் வழிநடத்தப்படும் சிங்கங்களின் இராணுவம் தோல்வியடையும் எனவும் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.(7-9)

---

## அவசர நிலைமைகளில் பயன்படுத்த பொலிஸாருக்கு வாகனம் வழங்க வடமாகாண ஆளுநர் நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)

நாட்டின் தற்போதைய அவசரகால நிலைமையைக் கருத்திற் கொண்டு வடமாகாணத்திலுள்ள பொலிஸாருக்கு அவசர நிலைமைகளில் பயன்படுத்துவதற்கு 10 வாகனங்களை தற்காலிகமாக வழங்குவதற்கு வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரொஷான் பெர்னாண்டோவுடன் நேற்றுக் காலை இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஆளுநர், பொலிஸாரின் தேவைக்கு தற்காலிகமாக வாகனங்களை வழங்கும் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

இதன்படி வடமாகாணத்தின் ஒவ்வொரு மாவட்ட செயலகங்களிலும் இரண்டு வாகனங்கள் அவசர நிலைமையில் பொலிஸார் பயன்படுத்துவதற்குத் தயார் நிலையில் காணப்படுவதுடன் அதற்கு மேலதிகமாக வடமாகாண சபைக்குச் சொந்தமான மூன்று வாகனங்களும் பொலிஸாரின் அவசரத் தேவைகளுக்காக தற்காலிகமாக வழங்கப்படவுள்ளன.

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரணமான சூழ்நிலையைக் கவனத்தில் கொண்டு வடமாகாணத்தில் வாழும் அனைத்து மக்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்காக பொலிஸார் மற்றும் முப்படையினருடன் இணைந்து மேற்கொள்ளக் கூடிய பாதுகாப்பு நடவடிக்கைகளை ஆளுநர் மேற்கொண்டுள்ளதுடன் பாதுகாப்புத் தரப்பினரின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்புக்களை வழங்குமாறு வடமாகாணத்திலுள்ள அனைத்து பொது மக்களையும் ஆளுநர் கேட்டுக் கொண்டுள்ளார். (இ-5-101)

---

## விடுதலைப்புலிகள் அமைப்பு மீதான தடையை நீடிக்க இந்தியா தீர்மானம்

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு மீது விதிக்கப்பட்டுள்ள தடையை மேலும் 5 வருடத்துக்கு நீடிக்க இந்திய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்தியாவின் இறையாண்மைக்குப் பாதிப்பை ஏற்படுத்தியமை, இந்தியாவுக்கு எதிராக வன்முறைகளை ஆரம்பித்தமை உள்ளிட்ட பல காரணங்களை அடிப்படையாகக் கொண்டு, இந்திய உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு 2014ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் அமைப்பு சட்டவிரோத அமைப்பாக அறிவிக்கப்பட்டு தடை செய்யப்பட்டது.

இவ்வாறு விதிக்கப்பட்டுள்ள தடையுத்தரவையே மேலும் 5 வருடங்களுக்கு நீடிக்க உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு தீர்மானித்துள்ளது. (இ-7)

---

## எந்தவிதமான பயங்கரவாதத்திற்கும் இந்த நாட்டிலே இடமிருக்கக்கூடாது

### காடையர்களின் தாக்குதல்களால் கூட்டமைப்பு கவலை

கடந்த இரண்டு நாட்களாக முஸ்லிம் மக்களின் வீடுகள், வியாபார ஸ்தலங்கள், பள்ளிவாசல்கள் காடையர் தாக்குதலுக்குள்ளாகிற செய்திகளால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிகுந்த கவலையடைகிறது. ஊரடங்குச்சட்ட நேரத்திலும் பாதுகாப்பு படையினர் இந்த வன்செயல்களைத் தடுப்பதற்கு உகந்த நடவடிக்கை எடுக்காமலிருப்பது கண்டனத்துக்குரியது. வன்முறையாளருக்கெதிராக உடனடியானதும் கடுமையானதுமான நடவடிக்கைகளை அதிகாரத்திலுள்ளோர் எடுக்க வேண்டும்என்று கோருகின்றோம். அரசாங்கம் தம்மைப் பாதுகாக்கத் தவறுகிறது என்று மக்கள் நினைத்தால் அவர்கள் தம்மைத்தாமே பாதுகாக்கத் தலைப்படுவார்கள். இப்படியான சூழ்நிலையை அனுமதிக்க வேண்டாம் என்று நாம் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கின்றோம்.

இந்த நாட்டில்தான் சுயமாக வாழ்வதற்கு போராட்டத்தை கையிலெடுக்க வேண்டும் என்று இன்னுமொரு சமூகத்தையும் நினைக்கத்தூண்டாதீர்கள். கிறிஸ்தவ ஆலயங்களைத் தாக்குகின்ற பயங்கரவாதம் என்றாலும் சரி, பள்ளிவாசல்களைத் தாக்குகின்ற பயங்கரவாதம் என்றாலும் சரி - எவ்விதமான பயங்கரவாதத்திற்கும் இந்த நாட்டிலே இடமிருக்கக்கூடாது என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-7)

# தவானுக்கு இராசியான ஐ.சி.சி., தொடர்



ஷிகர் தவான்

நெருக்கடி கிடையாது

இது குறித்து ஷிகர் தவான் கூறியதாவது, சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) தொடர்களில் எனது செயற்பாடு குறித்து ரசிகர்கள் பெருமையுடன் விவாதிக்கின்றனர்.

எந்த தொடர் என்றாலும், 100 சதவீத திறமையை வெளிப்படுத்த முயற்சிப்பேன். இதேபோலத்தான், ஐ.சி.சி., தொடர்களில் செயற்படுகிறேன். இந்த விளாசல், எதிர் வரும் உலக கிண்ணத்திலும் அரங்கேறும் என நம்புகிறேன். இதற்காக, என் மீதான நெருக்கடி அதிகரிக்கவில்லை. இப்படிப்பட்ட விடயத்தை நான் மனதில் ஏற்றிக்கொள்ள மாட்டேன். ஒருவேளை, 5 முதல் 10 போட்டி வரை ஜொலிக்கவில்லை என்றாலும், எல் லாம் முடிந்தது என எண்ண மாட்டேன். எனது திறமையை நன்றாக அறிவேன்.

**விமர்சனம் இருக்குமா?**

துடுப்பாட்டத்தில் செய்யும் தவறு குறித்து கேள்வி எழுப்புகின்றனர். இந்த விமர்சனங்கள் எனக்கு பாதிப்பை தர வாய்ப்பில்லை. விமர்சனம் செய்வது சிலரின் வேலை. அதை பொருட்படுத்த தேவை இல்லை. எதிர் மறையான எண்ணத்திற்கு எனது வாழ்வில் என்றும் இடம் கிடையாது என்றார் தவான்

"என் மீதான எவ்வித விமர்சனத்தையும் கண்டுகொள்வது இல்லை. வழக்கம் போல, ஐ.சி.சி. தொடரான உலகக் கிண்ணத்தில் சாதிப்பேன் என நம்புகிறேன்," என்றார்.

ஐ.பி.எல் கிரிக்கெட் தொடர் முடிந்துவிட்டதால், ரசிகர்களின் பார்வை ஐ.சி.சி., உலகக் கிண்ணம் மீது திரும்பி உள்ளது. இந்திய அணியில் இடம்பெற்றுள்ள ஆரம்ப துடுப்பாட்ட வீரர் தவான் மீது எதிர்பார்ப்பு அதிகமாக உள்ளது. இதற்கு முந்தைய சம்பியன்ஸ் டிரொபியில் அதிக ஓட்டங்கள் குவித்தவராக (2013-363 ஓட்., 2017-338 ஓட்..) தவான் வலம் வந்தார்.

கடந்த உலக கிண்ணத் தொடரிலும் (2015-412 ஓட்..) அதிக ஓட்டங்கள் குவித்த இந்திய வீரராக ஜொலித்தார். சமீபத்திய, 12 வது ஐ.பி.எல்., கிரிக்கெட் சீசனிலும் 16 போட்டிகளில் 521 ஓட்டங்கள் (டில்லி அணி) குவித்தார். இந்த செயற்பாட்டை மீண்டும் இவர் வெளிப்படுத்த வேண்டுமென ரசிகர்கள் விரும்புகின்றனர்.

# மே.தீவுகளை வீழ்த்தியது பங்களாதேஷ்

மே. தீவுகள் அணிக்கு எதிரான முத்தரப்பு லீக் போட்டியில் அசத்திய பங்களாதேஷ் அணி 5 விக்கெட் டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இரு அணிகளும் இறுதிப் போட்டிக்கு முன்னேறின.

அயர்லாந்து மண்ணில் அந்நாட்டு அணியுடன் மே.தீவுகள், பங்களாதேஷ், அணிகள் மோதும் முத்தரப்பு ஒரு நாள் தொடர் நடக்கிறது.

டப்ளினில் நடந்த ஐந்தாவது லீக் போட்டியில் மே.தீவுகள், பங்களாதேஷ் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற மே.தீவுகள் அணி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

**ஹோப் விளாசல்**

மே.தீவுகள் அணிக்கு சுனில் அம்ப்ரிஸ் (23), டேரன் பிராவோ (6) ஏமாற்றினர். இதன்பின், முஸ்டபிஷுர் ரஹ்மான் 'வேகத்தில்' மிரட்டி னார். இவரது பந்துவீச்சில் ரோஸ்டன் சேஸ் (19), கார்டர் (3) ஆட்டமிழந்தனர். பொறுப்புடன் விளையாடிய ஷாய் ஹோப் (87), அணித் தலைவர் ஹோல்டர் (62) அரைச்சதம் கடந்தனர்.

50 ஓவர்கள் நிறைவில் மே.தீவுகள் அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 247 ஓட்டங்களை எடுத்தது.

பந்துவீச்சில் பங்களாதேஷ் அணி சார்பில் அதிகபட்சமாக முஸ்டபிஷுர் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

**முஷ்பிகுர் அரைச் சதம்**

பங்களாதேஷ் அணிக்கு தமிம் இக்பால் (21), சகிப் அல் ஹசன் (29) சொதப்பினர். சௌமியா சர்கார் (54), முஷ்பிகுர் ரஹிம் (63) அரை சதம் விளாச வெற்றி எளிதானது. ஹோல்டர் பந்தில் மிதுன் (43) ஆட்டமிழந்தார்.

பங்களாதேஷ் அணி 47.2 ஓவரில் 5 விக்கெட்டுக்களை இழந்து 248 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. மகமுதுல்லா (30) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இது வரை நடந்த ஐந்து லீக் போட்டியில் தலா 2 வெற்றியுடன், புள்ளிப்பட்டியலில் முதலிரண்டு இடம் பிடித்த பங்களாதேஷ் (10 புள்ளி), மே. தீவுகள் (9) அணிகள் இறுதிப் போட்டிக்கு (மே 17, டப்ளின்) முன்னேறின. அயர்லாந்து அணி சொந்த மண்ணில் ஏமாற்றியது. இன்று நடக்கவுள்ள கடைசி லீக் போட்டியில் பங்களாதேஷ் - அயர்லாந்து அணிகள் மோதவுள்ளன.



87 ஓட்டங்கள் எடுத்த மே.தீவுகளின் சாய் ஹோப்




# ஷாக் கொடுத்த கென்யா

சர்வதேச கிரிக்கெட்டில் 'கத்துக்குட்டி' அணியாக கருதப்படும் கென்ய அணி, உலக கிண்ண அரங்கில் அவ்வப்போது அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியது.

கடந்த 1996ல் நடந்த லீக் போட்டியில் இரண்டு முறை சம்பியனான மே.தீவுகளை வீழ்த்தியது. பின், 2003ல் இந்திய அணியின் முன்னாள் வீரர் சந்தீப் படேல் பயிற்சியில் கென்யா மாபெரும் எழுச்சி கண்டது. நைரோபியில் நடந்த மிக முக்கியமான லீக் போட்டியில் முன்னாள் சம்பியான் இலங்கை அணிக்கு 'ஷாக்' கொடுத்தது. இப்போட்டியில் முதலில் 'துடுப்பாட்டம்' செய்த கென்யாவுக்கு, ஆரம்ப வீரரான கென்னடி ஒட்டியானோ கைகொடுத்தார். இவர், 60 ஓட்டங்கள் விளாச, 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 210 ஓட்டங்கள் எடுத்தது.



பின் வெற்றி இலக்கை இலங்கை அணி மிகச் சுலபமாக எட்டி விடும் என, தோன்றியது. ஆனால் நிலைமை தலைகீழாக மாறியது. ஜெயசூர்யா 3 ஓட்டங்களுடன் ஆரம்பத்திலேயே ஆட்டமிழக்க, சிக்கல் ஆரம்ப மானது. இதற்கு பின் கென்ய வீரர் கொலின்ஸ் ஒபுயா 'சுழல் சூறாவளியாக' உருவெடுத்தார். இவரது பந்துவீச்சில் திலகரத்ன (23), அரவிந்த டி சில்வா (41), ஜெயவர்தனா (5), சங்கக்கார (5), வாஸ் (4) ஆகியோர் வெளியேற, இலங்கை அணி 45 ஓவரில் 157 ஓட்டங் களுக்கு 'சகல விக்கெட்டுக்களையும் இழந்து' படுமோசமான தோல்வியை சந்தித்தது. 53 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்ற கென்ய அணி, புதிய வரலாறு படைத்தது. 10 ஓவர்களில், 24 ஓட்டங்கள் மட்டும் கொடுத்து 5 விக்கெட் வீழ்த்திய ஒபுயா, ஆட்ட நாயகனாக ஜொலித்தார்.

டெஸ்ட் அந்தஸ்து பெறாத கென்ய அணி, இத்தொடரின் அரையிறுதிக்கு முன்னேறி அசத்தியது. இதில், இந்தியாவிடம் தோல்வி அடைந்து வெளியேறியது. ஆனாலும் தங்களின் 'சுப்பர்' ஆட்டத்தால், தொடரின் எழுச்சி நாயகர்களாக கென்ய வீரர்கள் ஜொலித்தனர்.

**தெரியுமா?**

ஐந்து முறை (1996, 99, 2003, 2007, 2011) உலக கிண்ணத் தொடரில் பங்கேற்றுள்ள கென்ய அணி, 29 போட்டிகளில், 6 வெற்றி, 22 தோல்வியை பதிவு செய்துள்ளது. ஒரு போட்டிக்கு முடிவு இல்லை. இதில், 2003ல் அதிகபட்சமாக அரையிறுதி வரை சென்றது கென்யாவின் சிறந்த செயற்பாடாக உள்ளது. மற்றைய 4 தொடர்களில் லீக்சுற்றோடு வெளியேறியது.

# மும்பை வீரர்கள் கொண்டாட்டம் திறந்த பஸ்ஸில் ஊர்வலம்

ஐ.பி.எல்., தொடரில் நான்காவது முறையாக கிண்ணம் வென்ற மும்பை அணி வீரர்கள் திறந்தவெளி பஸ்ஸில் ஊர்வலமாக 6 கி.மீ., தூரம் அழைத்துச் செல்லப்பட்டனர்.

இந்தியாவில் ஐ.பி.எல்., தொடரின் 12வது சீசன் 'ரி20' கிரிக்கெட் தொடர் நடந் தது. ஹைதராபாத்தில் நடந்த இறுதிப் போட்டியில் சென்னை அணியை ஒரு ஓட்டத்தால் வீழ்த்திய மும்பை அணி, நான்காவது முறையாக கிண்ணத்தை கைப்பற்றியது.

வெற்றி உற்சாகத்தில் ரோகித் சர்மா தலைமையிலான மும்பை அணி வீரர்கள் 13ஆம் திகதி மாலை மும்பை வந்தடைந்த னர். விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு தரப்பட்டது. பின் மும்பை அணி உரிமையாளர் நீட்டா அம்பானி இல்லம் அமைந்துள்ள அன்டில்லா சென்றனர்.

அங்கிருந்து தெற்கு மும்பை பகுதியில் மும்பை அணி வீரர்கள் தங்கியிருந்த டிரிடென்ட் ஹோட்டல் வரை திறந்தவெளி பஸ்ஸில் ஊர்வலம் சென்றனர். ரசிகர்கள் இருசக்கர வாகனத்தில் முன் செல்ல, இந்த ஊர்வலம் 6 கி.மீ., தூரம் சென்றது. சாலையில் இரு பக்கங்களிலும் மும்பை அணி ரசிகர்கள் திரண்டு, வீரர்களுக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

அணி உரிமையாளர் நீட்டா அம்பானியும் பஸ்சில், வீரர்களுடன் சென்றார். யுவராஜ் சிங், ஹர்திக் பாண்ட்யா, மலிங்க, ஜெயவர்தன என பலரும் ஐ.பி.எல்., கிண்ணத்தை ஏந்தி மகிழ்ந்தனர். ரசிகர்கள் எழுப்பிய 'பும்ரா... பும்ரா' சத்தம் நீண்ட நேரமாக ஒலித்துக் கொண்டிருந்தது.


# ஜோகோவிச் சம்பியன்

மட்ரிட் ஓபன் டென்னிஸ் ஒற்றையர் பிரிவில் செர்பிய வீரர் நோவக் ஜோகோவிச் சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார். இறுதிப் போட்டியில் 6-3, 6-4 என, கிரீஸ் வீரர் டிசிட்சிபாசை தோற்கடித்தார்.

ஸ்பெயினில், மாட்ரிட் ஓபன் மாஸ்டர்ஸ் டென்னிஸ் தொடர் நடந்தது. இதன் ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் செர்பியாவின் நோவக் ஜோகோவிச், கிரீசின் ஸ்டெபானஸ் டிசிட்சிபாஸ் மோதினர். முதல் செட்டை 6-3 எனக் கைப்பற்றிய ஜோகோவிச், 2வது செட்டை 6-4 என தன்வசப்படுத்தினார்.

முடிவில் ஜோகோவிச் 6-3, 6-4 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று, இத்தொடரில் 3வது முறையாக சம்பியன் பட்டம் வென்றார். இதற்கு முன், 2011, 2016ல் கிண்ணம் வென்றிருந்தார். இது, இவரது 33வது மாஸ்டர்ஸ் பட்டம்.

இதன்மூலம் மாஸ்டர்ஸ் அந்தஸ்து பெற்ற தொடரில் அதிக முறை கிண்ணம் வென்ற வீரர்கள் பட்டியலில் முதலிடத்தை ஸ்பெயினின் நடாலுடன் (33 முறை) பகிர்ந்து கொண்டார். மூன்றாவது இடத்தில் சுவிட்சர் லாந்தின் ரோஜர் பெடரர் (28 முறை) உள்ளார்.



ஜோகோவிச்

# காத்தான்குடியில் நேற்றும் ஆயுதங்கள், வாள்கள் மீட்பு



(காத்தான்குடி)

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கர்பலா கிராமத்தில் கைவிடப்பட்ட நிலையில் ரி-56 ரக துப்பாக்கி, மகஸின், துப்பாக்கி ரவைகள் கைக்குண்டு வாள், கத்திகள், தொலைநோக்கு கருவி ஆகியன நேற்று செவ்வாய்க் கிழமை இராணுவத்தினரால் மீட்கப்பட்டு செயலிழக்கப்பட்டன.

இராணுவத்தினருக்கு கிடைத்த தகவல் ஒன்றையடுத்து காத்தான்குடி முதலாம் பிரிவு வாவிக் கரை வீதியில் எள்ள களப்பு பகுதியை சோதனையிட்டபோது அங்கிருந்து ரி-56 ரக துப்பாக்கி ஒன்றும் 5 மகசின் துப்பாக்கி ரவைகள், கைக்குண்டு ஒன்று, வாள் 2, கத்திகள், தொலை நோக்கு கருவி ஒன்று உள்ளிட்டவற்றை மீட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி பொலிஸ் பிரிவுக் குட்பட்ட கர்பலா கிராமத்தில் ஒரு துப்பாக்கி மற்றும் ரவைகள், கத்தி போன்றவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன் கைவிடப்பட்ட நிலையில் இருந்த இரண்டு கைக்குண்டுகள் மீட்கப்பட்டு செயலிழக்கச்செய்யப்பட்டன. (இ-7)

## பிரதேச சபைக்குள்

# வாளுடன் வந்த பெண் அரசியல்வாதி



காலியில் பிரதேச சபைக்குள் வாளுடன் வந்த பெண் அரசியல்வாதியால் பெரும் சர்ச்சை நிலை ஏற்பட்டுள்ளது.

இமதுவ பிரதேச சபை நேற்று கூடிய வேளையில், பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த ரேணுகா சஞ்ஜீவனி என்ற பெண் உறுப்பினரே வாளொன்றுடன் உள் நுழைந்தார். வாளுடன் உரையாற்ற முயற்சித்த போது, அதற்கு ஏனைய கட்சி உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

பெண்களை பாதுகாத்துக் கொள்ள வாள்கள் வைத்திருக்கலாம் என சொல்லப்படுகிறது. இதன் காரணமாக தனது பாதுகாப்பிற்காக வாளுடன் வந்ததாக அவர் தெரிவித்தார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் சபையில் இருந்த ஆளும் கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எதிர்ப்பு வெளியிட்டமையால் சபையில் குழப்ப நிலை ஏற்பட்டது.

இதனையடுத்து சபைத் தவிசாளர் அந்த வாளை பெற்று வெளியில் எடுத்துச் செல்ல பணித்தார். இதனையடுத்து சபை நடவடிக்கைகள் சுமுகமாக நடைபெற்றன. (இ-7)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கு முக்கிய உதவிகளை வழங்கிய மென்பொறியியலாளர்

## திடுக்கிடும் தகவல்கள் வெளியீடு

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களில் ஈடுபட்டவர்களுக்கு முக்கிய உதவிகளை வழங்கினார் என சந்தேகிக்கப்படும் இலங்கையின் மென்பொருள் பொறியியலாளரை இந்தியா மூன்று வருடங்களாக கண்காணித்து வந்தது என ரொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது. ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்புடன் குறித்த இளைஞருக்கு உள்ள தொடர்பு குறித்து இந்தியா கண்காணித்து வந்தது.

கிறிஸ்தவ தேவாலயங்களிலும் ஹோட்டல்களிலும் தாக்குதல்களை மேற்கொண்ட குழுக்களுக்கு மத்தியிலான தொடர்பாளராக 24 வயதுடைய ஆதில் அனீஸ் செயற்பட்டு வந்தார் என சந்தேகிப்பதாக விசாரணையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த மென்பொறியியலாளர் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளார். எனினும் இது குறித்த தகவல்களை இலங்கை அதிகாரிகள் பகிரங்கப்படுத்தவில்லை என ரொய்ட்டர் தெரிவித்துள்ளது. எனினும் பொலிஸ் பேச்சாளர் இதனை உறுதி செய்துள்ளார். ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார் எனவும் ரொய்ட்டர் தெரிவித்துள்ளது. எனினும் அவர் மேலதிக தகவல்களை வழங்க மறுத்துள்ளார்.

இந்தியாவின் தேசிய புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த அதிகாரியொருவரும் குஜராத்தை சேர்ந்த அதிகாரியொருவரும் இந்த நபர் குறித்து இலங்கைக்கு தகவல்களை வழங்கியுள்ளதாக தெரிவித்துள்ளனர். கைதுசெய்யப்பட்டுள்ள நபர் பிரித்தானிய பல்கலைக்கழகத்தில் அரசியல் பயின்று, பின்னர் கணனித்துறையில் பட்டமேற்படிப்பை பூர்த்தி செய்தவர் என ரொய்ட்டர் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையின் அவசரகால சட்டங்களின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார் நபர் சட்டத்தரணியொருவரின் உதவியை பெறமுடியாது என்பதால் அவரை தொடர்புகொள்ள முடியவில்லை என ரொய்ட்டர் தெரிவித்துள்ளது. எனினும் குறிப்பிட்ட நபரின் தந்தை அனீஸ் - தன்மகனுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிராகரித்துள்ளார்.

2006 ஆம் ஆண்டு முதல் இந்த நபரைக் கண்காணித்து வந்துள்ளோம் எனத் தெரிவித்துள்ள இந்தியப் புலனாய்வு பிரிவினர் இவர் ஐ.எஸ். அமைப்பின் ஆதரவாளர் என இந்திய நீதிமன்றில் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

எனினும் இந்த நபர் குறித்து இந்தியா இலங்கைக்கு தகவல்களை வழங்கியதா என்பதை உறுதி செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது என ரொய்ட்டர் தெரிவித்துள்ளது. இந்தியா குறிப்பிட்ட மென்பொறியியலாளருக்கு எதிரான விசாரணைகள் முடிவடைந்த பின்னரும் அவரை கண்காணிப்பின் கீழ் வைத்திருந்தது என்பதை இந்திய அதிகாரிகள் தெரிவிக்க மறுத்துள்ளனர்.

இதேவேளை ஆதில் தேசிய தௌஹீத் ஜமாத்திற்கும் ஜமாதி மிலாத் இப்ராஹிம் என்ற அமைப்பிற்கும் இடையிலான தொடர்புகளை ஏற்படுத்திக்கொடுத்தார் என இலங்கையின் சி.ஐ.டியினரும் படைத்தரப்பினரும் தெரிவித்துள்ளனர். இரு தரப்பினரும் டாக் வெப்பினையும் வட்ஸ் அப்பினையும் பயன்படுத்தினர் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். எனினும் ஆதில் குண்டுத் தாக்குதல்களுக்கு உதவினாரா? அல்லது தாக்குதல்களை திட்டமிட்டு வழிநடத்தியவர்களில் ஒருவரா? என்பது தெரியவில்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வாரம் வேர்த்துசா அலுவலகத்தில் சோதனையிட்ட பொலிஸார் அங்கு பணியாற்றும் ஒருவரை கைதுசெய்துள்ளனர்.

ஆதில் 2013 இல் அங்கு பணியாற்றியவர் என அவர்கள் தெரிவித்துள்ளனர். இலங்கையர் ஒருவருக்கும் இந்தியர்கள் இருவருக்கும் இடையிலான இணைய உரையாடல்கள் 2016 இல் ஆரம்பித்து 2017 வரை நீடித்தமையை உறுதி செய்யும் நீதிமன்ற ஆவணங்களை பார்வையிட்டுள்ளதாக தெரிவித்துள்ள ரொய்ட்டர் இந்தியர்கள் இருவரும் கைதுசெய்யப்படும் வரை இந்த உரையாடல்கள் இடம்பெற்றன எனவும் குறிப்பிட்டுள்ளது. ஆதில் எக்ஸ் என தன்னை அழைத்துக்கொள்ளும் நபர் இலங்கையில் பெரும்பான்மை இனத்தவர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளும் அநீதிகள் குறித்து அறிந்துள்ளீர்களா? என இந்தியர்களிடம் கேள்வி எழுப்பியுள்ளார் என ரொய்ட்டர் தெரிவித்துள்ளது.

அதன் பின்னர் அவர் தனது அனுபவங்கள் குறித்து தெரிவித்துள்ளார். தான் சிறையிலிருந்தது, அவ்வாறு தாக்கப்பட்டது போன்ற அனுபவங்களை விபரித்துள்ளமை நீதிமன்ற ஆவணங்கள் மூலம் தெரியவந்துள்ளது என ரொய்ட்டர் தெரிவித்துள்ளது.

இலங்கை இந்திய விசாரணையாளர்கள் அவர் தெரிவித்தது எதுவும் உண்மையில்லை எனக் குறிப்பிட்டுள்ளனர். இதே வேளை தான் பத்திரிகையாளர் எனவும் கலாநிதி பட்டம் பெற்றவர் எனவும் சில இடங்களில் அவர் குறிப்பிட்டுள்ளமை பொய் என விசாரணையாளர்கள் தெரிவித்துள்ளனர். ஆதில் தனது வீட்டிலிருந்து செயற்பட்டார். அவர் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களில் முக்கிய பங்காற்றினார் தொழில்நுட்ப மற்றும் பயிற்சிகளில் முக்கிய பங்களிப்பை வழங்கினார் என விசாரணையாளர்கள் தெரிவித்துள்ளனர். அவரே தாக்குதல்களை மேற்கொண்டவர்களின் முக்கிய தொழில்நுட்பவியலாளர் என விசாரணையில் ஈடுபட்டுள்ள சி.ஐ.டி அதிகாரியொருவர் ரொய்ட்டருக்கு தெரிவித்துள்ளார்.

தெஹிவளையில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் கொல்லப்பட்ட அப்துல் லத்தீவ் முகமட் ஜமீலிற்கு ஆதிலே உதவினார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தாக்குதலுக்கு ஒரு வாரத்திற்கு முன்னர் ஆதில் சஹ்ரான் ஹாசிமையும் வேறு இரண்டு தற்கொலை குண்டுதாரிகளையும் சந்தித்தார் எனத் தெரிவித்துள்ள அதிகாரிகள் அவரது வீட்டை நாங்கள் சோதனையிட்டவேளை அனைத்து ஆவணங்களும் அழிக்கப்பட்டிருந்தன என தெரிவித்துள்ளனர். ஆதில் தாக்குதல்களை மேற்கொண்டவர்களிற்கு தொடர்பாடல்களில் உதவிகளை வழங்கியுள்ளதுடன் சந்திப்புக்கள் மற்றும் பயிற்சிகளுக்கான உதவிகளையும் வழங்கியுள்ளார் என பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்துள்ளனர். (இ-7)

## இராசி பலன்

**மீனம்:** நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறலாம், சொந்த பந்தங்களின் வருகையால் சிந்தை மகிழ்வீர்கள், நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும்.

**மேடம்:** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், உடல் நலனில் முன்னேற்றமுண்டு.

**இடபம்:** அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் மேலோங்கும், பாராட்டும் புகழும் கூடும் நாள், தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

**மிதுனம்:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், சுப செலவுகள் கூடும் நாள்.

**கும்பம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், நிதானத்துடன் நடந்து நிம்மதி காண வேண்டிய நாள், மருந்துவச் செலவுகள் ஏற்படலாம்.

**கடகம்:** ஆதரவு தருபவர்களின் எண்ணிக்கை கூடும், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பயணங்களால் பலனுண்டு, போசன சுகமுண்டு.

**மகரம்:** குறை சொல்லியவர்கள் பாராட்டும் நாள், அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், திடீர் பயணங்கள் இடம்பெறலாம்.

**சிம்மம்:** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**தனுசு:** குடும்ப ஒற்றுமை கூடும், கௌரவம், அந்தஸ்து உயரும் நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, உறவினர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர்.

**விருச்சிகம்:** வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், புகழ் பெற்றவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**துலாம்:** நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைத்த வேண்டிய நாள், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கலாம், சயனசுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**கன்னி:** விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கிச் சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| சுக் | புத சூரி | ராகு செவ் | |
| | | | |
| சனி குரு கேது | | சந் | |

சந்திராஷ்டமம் பூரட்டாதி

15.05.2019

வைகாசி 01, புதன்கிழமை

சூரிய உதயம் காலை 6.07 மணிக்கு

ஏகாதசி முற்பகல் 9.48 மணிவரை

உத்தரம் காலை 6.30 மணிவரை

அத்தம் பின்னிரவு 5.10 மணிவரை

சுபநேரம் 4.23-5.53 மணிவரை

இராகுகாலம் 11.53-1.23 மணிவரை

ஏகாதசி விரதம், அமிர்த சித்தம்

வளவன்

# சீரான போக்குவரத்துச்சேவை நடத்துமாறு மக்கள் கோரிக்கை

(பொற்பதி)

பருத்தித்துறையிலிருந்து வடமராட்சி கிழக்கு கேவில் வரைக்கும் பயணிகள் பேருந்து சேவையினை மேற்கொள்ளும் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்துகள் மிகப் பழைமையானதாக உள்ளதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

பருத்தித்துறை தொடக்கம் கேவில் வரைக்குமாக காலையில் முதல் சேவையில் ஈடுபடுவது இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்தே ஆகும். இதனை நம்பியே வடமராட்சி கிழக்கிலிருந்து பாடசாலை மாணவர்கள், அரச, தனியார் உத்தியோகத்தர்கள், வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளர்கள் மற்றும் ஏனைய பல தேவைக்காகச் செல்வோர் இப் பேருந்தையே பயன்படுத்துகின்றனர்.

இந்தப் பேருந்துகள் அடிக்கடி பழுதாகி இடை நடுவில் நிற்பதாக மக்கள் குறை கூறுகின்றனர். இதேபோன்றே மாலையிலும் கடைசியாக வடமராட்சி கிழக்கிற்கு வரும் பயணிகள் பேருந்து இதுவாகவே இருக்கின்றது.

எனவே இந்தப் பேருந்தை நம்பி பயணத்தில் ஈடுபடும் மக்களுக்கு சிறந்த சேவையை வழங்க சாலைக்குப் பொறுப்பானவர்கள் முன்வர வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இவ்வாறு பழுதடைவது கிழமைக்கு இரண்டு அல்லது மூன்று தடவைகள் இடம்பெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (5-64)

# பட்டப்பகலில் பல இலட்சம் பெறுமதியான மின்சாதனப் பொருட்கள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புங்கன்குளம் பகுதியில் பட்டப்பகலில் வீடுடைத்து பல இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுபதிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் புங்கன்குளம் வீதி பாசையூர் அந்தோனியார் ஆலயத்திற்கு அண்மித்த பகுதியிலுள்ள வீடொன்றிலேயே நேற்று முன்தினம் இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கணவன்-மனைவி இருவரும் ஆசிரியர்கள். நேற்று முன்தினம் இருவரும் வீட்டைப் பூட்டிவிட்டுப் பாடசாலைக்குச் சென்ற நேரத்தில் வீட்டின் கதவு உடைக்கப்பட்டு, வீட்டிலிருந்த மின் சாதனங்கள், மடிக்கணனி உள்ளிட்ட பல இலட்சம் ரூபாய் பெறுமதியான இலத்திரனியல் பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

பாடசாலை நிறைவடைந்ததும் கணவன்-மனைவி இருவரும் வீட்டை வந்து பார்த்த போது, வீட்டின் முன் வாயில் கதவு உடைக்கப்பட்டுள்ளதை அவதானித்தவர்கள், வீட்டிற்குள் சென்று பார்த்த போது, வீட்டிலிருந்த இலத்திரனியல் பொருட்கள் திருடப்பட்டுள்ளதை அவதானித்துள்ளனர் திருட்டுச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்ததுடன், பொலிஸார் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (5-101)




# திருட்டிற்கு உதவியவரைத் தாக்கிய குற்றச்சாட்டில் மேலும் இருவர் கைது

திருட்டிற்கு உதவியவரைத் தாக்கிய குற்றச்சாட்டில் மேலும் இருவர் கொடிகாமம் பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

வரணி இயற்றாலைப் பகுதியில் கடந்த ஜனவரி மாதம் இடம்பெற்ற திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவருக்கு உதவினார் எனக் குற்றம் சாட்டப்பட்டு நபர் ஒருவரை அப் பகுதி மக்கள் பிடித்தனர்.

பிடிக்கப்பட்ட நபரை மோசமாகத் தாக்கினார்கள் எனக் குற்றம் சாட்டப்பட்ட நபர்களைத் தேடிக் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வந்தனர்.

இந்நிலையில் அண்மையில் ஒருவர் கைது செய்யப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் மேலும் இருவரை கொடிகாமம் பொலிஸார் கைது செய்தனர். (இ-10-114)

# வலி.கிழக்கு சபையின் விசேட அமர்வு நாளை

வலி.கிழக்குப் பிரதேச சபையின் விசேட அமர்வு நாளை 16 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணியளவில் புத்தூரில் உள்ள தலைமைச் செயலக மண்டபத்தில் தவிசாளர் எஸ். நிரோஷ் தலைமையில் இடம் பெறும்.

இந் நிகழ்வில் மக்கள் பங்களிப்புடனான அபிவிருத்தித் திட்டங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் தீர்மானம் இடம்பெறுவதோடு 2019 ஆம் ஆண்டுக்கான இரண்டாம் கட்ட கம்பரெலிய மற்றும் சனசமூக நிலைய அபிவிருத்தி தொடர்பான தீர்மானங்களும் எடுக்கப்படவுள்ளன. (5-10-134)

# பாவனையாளர் சட்டங்களை மீறிய வர்த்தகர்களுக்கு 37 ஆயிரம் அபராதம்

(யாழ்ப்பாணம்)

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் சட்டங்களை மீறிய வர்த்தகர்களுக்கெதிராக கடந்த 10 ஆம் திகதி பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் 37 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றி வளைப்பின் போது பாவனையாளர் சட்டங்களை மீறும் வகையில் செயற்பட்ட பருத்தித்துறை, நெல்லியடி வர்த்தக நிலைய உரிமையாளர்கள், 9 பேருக்கு எதிராக நீதிமன்றத்தால் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (10)

# சட்டங்களை மீறிய வர்த்தகர்களுக்கு ஒன்பதாயிரம் ரூபாய் அபராதம் விதிப்பு

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் சட்டங்களை மீறிய 8 வர்த்தகர்களுக்கு கடந்த 10 ஆம் திகதி மல்லாக நீதவான் ஒப்பதாயிரம் ரூபாய் அபராதம் விதித்துள்ளார்.

மல்லாக நீதவான் நீதிமன்றுக்கு உட்பட்ட பகுதிகளில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றி வளைப்பின் போது பாவனையாளர் சட்டங்களை மீறிய வர்த்தகர்களுக்கே இவ்வாறு நீதி மன்றத்தால் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (5-10)

# சத்துணவுத் திட்டம் ஆரம்பம்



நல்லூர் பிரதேச சபையால் முன்பள்ளி மாணவர்களுக்குச் சத்துணவு வழங்கும் திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்றுக் காலை சபைக் கலாசார மண்டபத்தில் தவிசாளர் த. தியாகமூர்த்தி தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் விருந்தினராக வடமாகாண ஆரம்பப் பிள்ளைப் பருவ முன்பள்ளிகளின் உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.கணேசலிங்கம் கலந்துகொண்டார். (இ-10-272)

# கலாபூஷணம் விருதுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் 2019 ஆம் ஆண்டிற்கான கலாபூஷண விருதுக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளன. எனவே 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 60 வயதிற்கு மேற்பட்ட, கலாபூஷண விருதுக்கு விண்ணப்பிக்க விரும்பும் பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த கலைஞர்கள் பருத்தித்துறை பிரதேச செயலக கலாசார கிளையில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக் கொண்டு எதிர்வரும் 2019.06.05 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறு பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி கேட்டுக் கொண்டுள்ளார்.

தனிப்பட்ட முறையில் கலாபூஷண விருது விண்ணப்பங்கள் கோரல் நடைபெறமாட்டாது என்பதுடன் கடந்த வருடங்களில் கலைஞர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2019 ஆம் ஆண்டிற்கோ அல்லது எதிர்வரும் வருடங்களுக்கோ செல்லுபடியாகாது என மேலும் அறிவித்துள்ளார். (5)

# பெருந்திருவிழா

இருபாலை தென்கோவைக் கற்பகப் பிள்ளையார் தேவஸ்தானப் பெருந்திருவிழா நாளை 16 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 15 தினங்கள் நடைபெறும். இவ் உற்சவத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (5-10-134)

# கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பரீட்சை

இரண்டாம் வருட மாணவர்களுக்கான கற்பித்தல் தேசிய டிப்ளோமா பரீட்சை எதிர்வரும் 21.03.2019 அன்று காலை ஆரம்பமாகவுள்ளது.

இப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் கல்வி அமைச்சின் ஆசிரிய கல்விக்கான பிரதம ஆணையாளரின் அறிவுறுத்த லுக்கமைய நாளை 16.05.2019 வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கும் மாலை 5 மணிக்கும் இடையில் கல்லூரியில் தங்குவதற்கான ஏற்பாடுகளுடன் சமுகமளிக்குமாறு பீடாதிபதி சுப்பிரமணியம் பரமானந்தம் கேட்டுக் கொண்டுள்ளார். (இ)

# முகநூலால் பிடிபட்டது களவு பெண் உட்பட மூவர் கைது



(யாழ்ப்பாணம்)

கடந்த 7 ஆம் திகதி மந்துவில் மேற்கில் களவாடப்பட்ட ஆடு முகநூலில் விற்பனைக்காகக் காட்சிப்படுத்தப்பட்ட போது பொலிஸாரால் பெண் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மந்துவில் மேற்கில் கடந்த 7 ஆம் திகதி தோட்டத்தில் கட்டப்பட்ட ஆடு களவாடப்பட்டுள்ளது. ஆட்டைத் திருடியவர் சாவகச்சேரி நபர் ஊடாக மானிப்பாய் நபருக்கு விற்பனை செய்துள்ளார்.

ஆட்டை வாங்கிய நபர் முக நூல் ஊடாக விற்பனைக்குக் காட்சிப்படுத்திய போதே ஆட்டின் உரிமையாளரால் கொடிகாமம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளதுடன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (114-10)

# பொதுக் கூட்டம்

வலி.கிழக்குத் தென்பகுதி ப.நோ.கூ. சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் தலைவர் ந. சுந்தரலிங்கம் தலைமையில் இடம்பெறும்.(5-10-134)

# அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம் திருவெண்ணை நகர், கில்னர் ஒழுங்கை அருள்மிகு மகாமாரி அம்பாள் திருக்கோவில் அலங்கார உற்சவம் நாளை மறுதினம் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி 15 நாட்கள் நடைபெறும்.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி பிற்பகல் 4 மணியளவில் தேர்த் திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (5)

# தமிழினப் படுகொலை வாரம் செம்மணியில் நேற்று அனுஷ்டிப்பு





(யாழ்ப்பாணம்)

தமிழினப்படுகொலை வாரம் யாழில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தலைமையில் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் யாழ்ப்பாணம் செம்மணிப் பகுதியில் இந்த அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

தமிழினப்படுகொலை வாரம் கடந்த 12 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு எதிர்வரும் 18 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்நிலையில், 1996 ஆம் ஆண்டு ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா பண்டாரநாயக்கவின் ஆட்சிக் காலத்தின் போது, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருஷாந்தி குமாரசுவாமி உட்பட பலர் இராணுவத்தினரால் செம்மணியில் வைத்து படுகொலை செய்யப்பட்டனர். இவர்களுக்கு நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த அஞ்சலி நிகழ்வில், பொது ஈகச் சுடரினை மாநகர பிரதி முதல்வர். து.ஈசன் ஏற்றிவைத்தார்.

அதனைத்தொடர்ந்து, வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம்மற்றும்வடமாகாணசபை முன்னாள்உறுப்பினர் பா.கஜதீபன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் க. சுரேஷ்பிரேமச்சந்திரன், உள்ளிட்ட பலர் அஞ்சலி செலுத்தினர். (இ-101)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: சித்திரை 2
கி.பா: 47 செவ் 12 இல்
உயரம்: 176cm
தகைமை/தொழில்: B.Sc பட்டதாரி, உதவி சுங்க அதிகாரி
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/9694

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: உத்தராடம் 1
கி.பா: செவ் 7 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில் Dip.in Management,வங்கி
எதிர்பார்ப்பு: A/L,அரச,தனியார்தொழில்
தொ.இ: B/9695

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: அத்தம் 2
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: O/L,நகைதொழில்
எதிர்பார்ப்பு: படித்தபெண்
தொ.இ: B/9696

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: உத்தராடம் 4
கி.பா: 32 ½ செவ் 7 இல்
உயரம்: 6'
தகைமை/தொழில்: வியாபாரம்
எதிர்பார்ப்பு: படித்தபெண்
தொ.இ: B/9698

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 1
கி.பா: 44 செவ் 8 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில் MAபட்டதாரி, விரிவுரையாளர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி, அரசதொழில்
தொ.இ: G/4749

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 2
கி.பா: 36 ½ செவ் 8 இல்
உயரம்: 170cm
தகைமை/தொழில்:B.Sc, M.Sc ,Chemist
எதிர்பார்ப்பு: Ms.c பட்டதாரி, Doctor, Engineer, Accountant, Lecturer, Banker
தொ.இ: G/4751

பிறப்பு: 1980 கிறிஸ்தவம்
நட்சத்திரம்: சித்திரை 4
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: BA பட்டதாரி, அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: அரச, தனியார் தொழில்
தொ.இ: G/4753

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி 4
கி.பா: 19 செவ் 4 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:A/L, CBF, Ass.Manager
எதிர்பார்ப்பு: Professional Qualified
தொ.இ: G/4769

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


# முஸ்லிம் மக்கள் அனைவரையும் சந்தேகக்கண்ணுடன் பார்ப்பது தவறு

## மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்

நாங்கள் நீண்ட காலம் முஸ்லிம் மக்களுடன் மிகுந்த நட்புறவுடன் வாழ்ந்து வருகின்றோம். ஒரு சிலர் செய்த தீவிரவாத நடவடிக்கையினால் ஒட்டு மொத்த முஸ்லிம் சகோதரர்களையும் நாங்கள் சந்தேகத்துடன் பார்ப்பது தவறு என மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சியந்த பீரிஸ் தெரிவித்தார்.

தேசிய சமாதான பேரவை மற்றும் தொடர்பாடலுக்கான மையம் ஆகியவை இணைந்து மன்னார் மாவட்டத்தில் உள்ள சர்வமத தலைவர்களையும், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் ஒன்றிணைத்து நேற்று செவ்வாய்க்கிழமை மன்னாரில் உள்ள தனியார் விடுதியில் சமய சகவாழ்வு தொடர்பான விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இந்த நாட்டில் கடந்த மாதம் 21 ஆம் திகதி நாங்கள் யாரும் எதிர்பார்க்காத நிலையில் துன்பகரமான சம்பவம் இடம் பெற்றுள்ளது. குறித்த சம்பவத்தில் எல்லா மதத்தைச் சார்ந்தவர்களின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டுள்ளன.

நாங்கள் ஒவ்வொருவரும் கடந்த 30 வருட கால யுத்தத்தினால் பல்வேறு பாதிப்புக்களையும் இன்னல்களையும் சந்தித்தவர்கள். யுத்தத்திற்கு பிற்பாடு நல்லிணக்கத்துடன் சர்வமதங்களுக்கிடை யில், இனங்களுக்கிடையில் ஒற்றுமையுடன் நமது நாட்டில் வாழ்ந்து வந்தோம்.

நல்லிணக்கத்துடனும்,சமாதானத்துடனும்,ஒற்றுமையாகவும் வாழ்ந்து வந்த எம் மக்கள் மத்தியில் குறிப்பிட்ட தீவிரவாத கொள்கையுடைய குறிப்பிட்ட சிலரின் செயற்பாட்டினால் இன்று பிளவுகள் ஆரம்பித்துள்ளன. எனது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள 9 பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. சட்டத்தை மீறி செயற்படுகின்றவர்கள் மாத்திரமே கைது செய்யப்பட வேண்டும்.

நமது நாட்டில் இருக்கக்கூடிய அவசரகால சட்ட நடவடிக்கைகளுக்கு அமைவாக இனம், மதங்களுக்கு இடையில் பிரிவினை வாதங்களையும், குழப்பத்தையும் ஏற்படுத்துகின்றவர்களை கைது செய்து பல வருடங்களுக்கு தடுத்து வைக்கக்கூடிய கடுமையான சட்டங்கள் நடைமுறையில் இருக்கின்றன.

நமது மாவட்டத்தில் ஒற்றுமையினையும், சமாதானத்தையும் சீர்குலைக்கின்ற செயற்றிட்டங்களை யாராவது முன்னெடுத்தால் அவர்களுக்கான சட்ட நடவடிக்கைகளும் மிகக் கடுமையானதாகவே இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (9-285)

# வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.

## சந்தைகள், இறைச்சிக்கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான இடைக்கால கேள்வி அறிவித்தல்-2019

கீழ்க் குறிப்பிடப்படும் சந்தை, இறைச்சிக் கடைகளினை 2019 ஆம் ஆண்டின் குறிக்கப்பட்ட காலத்திற்கு (01.06.2019 - 31.12.2019) குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி: 17.05.2019-27.05.2019 நண்பகல் 12.00 மணிவரை

கேள்வி ஏற்றுக் கொள்ளப்படும் திகதி: 28.05.2019 -பி.ப 02.00 மணிவரை

கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 28.05.2019 பி.ப 02.00 மணி

கேள்விகள் இணைப் பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் "சந்தை, இறைச்சிக்கடை குத்தகை இடைக்கால கேள்வி - 2019"என எழுதி மூலப்பிரதியை "தவிசாளர் / செயலாளர், வலி. கிழக்கு பிரதேசசபை, தலைமை அலுவலகம், புத்தூர்" எனும் முகவரிக்கும், இணைப்பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணைவீதி, யாழ்ப்பாணம்" எனும்முகவரிக்கும் , எதிர்வரும்28.05.2019ஆம்திகதி பி.ப02.00 மணிக்கு முன்னர்கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். மேலும் மீள் கேள்வியை தகுந்த காரணங்களால் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரம் உண்டு. கேள்விப் பத்திரங்கள், நிபந்தனைகளை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

| தொ. இல | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய கேள்வித் தொகை | மாதாந்த வாடகை |
|---|---|---|---|---|---|
| | **அச்சுவேலி உப அலுவலகம்** | | | | |
| 01 | அக்கரை கடற்கரை- வாகன தரிப்பிடமும் சிற்றுண்டிச்சாலை மற்றும் சிறுவர் மகிழ்விடம் | 300.00 | 2000.00 | 34,030.00 | 500.00 |
| 02 | வளலாய் தம்பாலை பொதுச் சந்தை | 300.00 | 3000.00 | 156,360.00 | |
| | **புத்தூர் உப அலுவலகம்** | | | | |
| 01 | புத்தூர் பொதுச் சந்தை | 300.00 | 3000.00 | 192,020.00 | |
| | **உரும்பிராய் உப அலுவலகம்** | | | | |
| 01 | உரும்பிராய் கோழியிறைச்சிகடை | 300.00 | 2000.00 | 242,510.00 | 500.00 |

வலி.கிழக்குபிரதேச சபை,
புத்தூர்.
15.05.2019
தியாகராஜா நிரோஷ்,
தவிசாளர்.
(C-6335)

# வெறுக்கத்தக்க செயற்பாடுகளால் நம் நாட்டை நாம் இழக்க நேரிடும்

(கொழும்பு)

**வன்முறை, இனவாதம் மற்றும் வெறுக்கத்தக்க செயற்பாடுகளால் நம் நாட்டை நாம் இழக்க நேரிடுமென இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்கக்கார கவலை வெளியிட்டுள்ளார்.**



நாட்டின்தற்போதையநிலைமை குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே குமார் சங்கக்கார மேற்கண்டவாறு கவலை தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் பிரிவினைக்கு உட்பட்ட அரசியல் நிகழ்ச்சியில் பங்கேற்காமல் இருப்பது சிறந்ததெனவும் தற்போதைய சூழ்நிலையில் அனைவரும் அமைதியாக இருந்து ஒருவருக்கு ஒருவர் உதவ வேண்டுமெனவும் வலியுறுத்தியதுடன் காயங்களிலிருந்து குணமடைந்து நாம் மீண்டும் எழவேண்டுமெனவும் தெரிவித்துள்ளார். (7)

## இனவெறித் தாக்குதல் ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

முஸ்லிம் சமூகத்தை இலக்குவைத்து நேற்று முன்தினம் தினம் மேற்கொள்ளப்பட்ட இனவெறித் தாக்குதலில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொட்றாமுல்லை ரோபட்வத்தை பிரதேசத்தை சேர்ந்த ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தகவல்களில் தெரியவந்துள்ளது.

சம்பவம் நடைபெறும் போது குறித்த நபர் மாத்திரம் வீட்டில் இருந்ததாகவும் தெரியவந்துள்ளது.

மேலும் வன்முறை சம்பவங்களில் ஒரு உயிரிழப்பு மாத்திரமே உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (7)

## இனவெறிக்கு எதிராக எழுந்து நிற்போம்

### திமுத் கருணாரத்ன அழைப்பு

(கொழும்பு)

இனவெறிக்கு எதிராக எழுந்து நிற்போம் என இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவர் திமுத் கருணாரத்ன தெரிவித்துள்ளார். தனது டுவிட்டர் பக்கத்தின் ஊடாகவே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.


அவர் தனது டுவிட்டர் பக்கத்தில், 'இது எமது நாடு. தயவு செய்து எமது இலங்கையை அழிக்க வேண்டாம்.

ஒவ்வொருவர் மீது வெறுப்புடன் செயற்பட்டால் நாடு என்ற ரீதியில் எப்போதும் அபிவிருத்தி அடைய முடியாமல் போய்விடும்.



உங்கள் குழந்தைகளின் எதிர்காலம் குறித்து சிந்தியுங்கள். எமது எதிர்காலமும் உங்களது தற்போதைய நடவடிக்கையில் தான் இருக்கிறது. அன்பை பரப்புங்கள். இனவெறிக்கு எதிராக எழுந்து நிற்போம்' என மேலும் தெரிவித்துள்ளார். (7)

## குருநாகலில் தொடர் வன்முறை; பாதுகாப்புப் பணியில் படையினர்



(குருநாகல்)

குருநாகல் பகுதியில் இடம்பெற்ற தொடர் வன்முறைச் சம்பவங்களினால் அப்பகுதியில் ஏற்பட்டிருந்த பதற்றமான சூழ்நிலை தற்போது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆனாலும் தொடர் பாதுகாப்புப் பணிகளில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

குருநாகல் - ஹெட்டிபொல நகரில் நேற்று முன்தினம் சில குழுக்கள் மக்களுக்குச் சொந்தமான சொத்துக்களை சேதப்படுத்தியதை தொடர்ந்தே இந்த நாட்டில் பதற்றமான நிலைமை ஏற்பட்டது.

குறித்த பகுதியிலுள்ள பல வணக்கஸ்தலங்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் என்பன தாக்கப்பட்டமையால் அமைதியில்லாத நிலைமை ஏற்பட்டது.

இதனையடுத்து, கொபேகனே, ரஸ்நாயக்கபுர, குளியாப்பிட்டிய, பிங்கிரிய பகுதிகளிலும் மக்களுக்குச் சொந்தமான வர்த்தக நிலையங்கள், வீடுகள், வணக்கஸ்தலங்கள், வாகனங்கள் என்பன சேதப்படுத்தப்பட்டதையடுத்து விசேட அதிரடிப் படையினர் விரைந்து பாதுகாப்பை பலப்படுத்தினர்.


மேலும் விசேட அதிரடிப்படையினர் உள்ளிட்ட பாதுகாப்புத் தரப்பினர் அசம்பாவிதங்கள் ஏற்பட்ட பகுதிகளில் மட்டுமன்றி நாடளாவிய ரீதியாக பாதுகாப்பையும் பலப்படுத்தியுள்ளனர். (7)

## பிரதமருக்கு எதிராக முறைப்பாடு

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது பொறுப்புகளிலிருந்து விலகியுள்ளதாகத் தெரிவித்து, அவருக்கு எதிராக தேசிய சங்க சம்மேளனத்தால், நேற்று பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு ஒன்று செய்யப்பட்டுள்ளது.

தாக்குதல் சம்பவம் தொடர்பில் ஏற்கனவே தெரிந்திருந்தும் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்காமை, அரசாங்கம் என்ற ரீதியில் தமது பொறுப்புகளிலிருந்த விலகியிருந்தமை உள்ளிட்ட பல காரணங்களை முன்வைத்து, தேசிய சங்க சம்மேளனத்தின் தலைவர் ரஜவத்தே வப்ப தேரரால், இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (7)



## ஜோன்ஸ்டனுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு




(கொழும்பு)

முன்னாள் கூட்டுறவு மற்றும் வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட நான்கு பேருக்கு எதிரான வழக்கின் ஆரம்ப ஆட்சேபனை மீதான உத்தரவு எதிர் வரும் ஜூன் மாதம் 7ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு நீதவான் நீதிமன்றில் குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்த போது பிரதான நீதவான் லங்கா ஜயரத்ன இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ அமைச்சராக இருந்த போது தனது சொத்து விபர அறிக்கையை சமர்பிக்காததன் காரணமாக குற்றமிழைத்துள்ளதாக தெரிவித்து இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

## எமது எதிர்கால சந்ததியினருக்கு மோசமான அனுபவங்களை வழங்காதிருப்போம் - சனத்!



(கொழும்பு)

எமது எதிர்கால சந்ததியினருக்கு மோசமான அனுபவங்களை வழங்காதிருப்போம் என இலங்கை அணியின் முன்னாள் வீரர் சனத் ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பல பகுதிகளிலும் நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்கள் குறித்து தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தனது டுவிட்டர் பக்கத்தில், 'கடந்த காலங்களில் நாம் கற்றுக்கொண்ட பாடங்களை எதிர்கால சந்ததியினருக்கு விட்டுவைக்க வேண்டாம்.

எமக்கென்ற ஒரு நாடாக விளங்குவது இச்சிறிய நாடு மாத்திரமே. வன்முறைகளால் இந்நாட்டில் பிரச்சினைகள் ஏற்பட்டால், இலங்கையர்களான எமக்கே அது பலவீனமாகும்.

பல வருடங்களாக பல்வேறு வன்முறைகளுக்கு முகங் கொடுத்து, அதன் ஊடாக படிப்பினைகளைப் பெற்றுக்கொண்ட நாம், எமது எதிர்கால சந்ததியினருக்கு இந்த மோசமான அனுபவங்களை வழங்காதிருப்போம்' என மேலும் குறிப்பிட்டுள்ளார். (7)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை


## நீரிழிவு நோய்க்கு சித்தமருத்துவ சிகிச்சை




டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

சித்தமருத்துவத்தில் மதுமேகம் எனப்படும் நீரிழிவால் கோடிக்கணக்கான மக்கள் பீடிக்கப்பட்டுள்ளனர். இதில் வருத்தத்திற்குரிய விடயம் இதில் பாதிக்கு மேற்பட்டோருக்கு தாம் இவ் வியாதியால் பீடிக்கப்பட்டமை தெரியாது. எவ்வளவுக்கு எவ்வளவு ஆரம்ப கட்டத்திலேயே இவ் வியாதியை கண்டுபிடிக்கிறோமோ அவ்வளவு கட்டுப்படுத்தும் வாய்ப்பும் அதிகமாயிருக்கும். ஆரம்ப நிலையிலேயேநீரிழிவு வியாதி கண்டுபிடிக்கப்பட்டால் உணவு







முறை உடற்பயிற்சியால்இவ்வியாதியை கட்டுப்படுத்த முடியும். எனவே நீரிழிவு நோய் பற்றிய விழிப்புணர்வு மக்களு க்கு அவசியமாகும். ஆண், பெண் இருபாலாருக்குமேஇந்நோய்உண்டாகும்.

எந்த வயதிலும் ஏற்படலாம். பொதுவாக 40-50 இற்கு பின்பே ஏற்படுகின்றது. தாய் அல்லது தகப்பனுக்கு நீரிழிவு இருப்பின் பிள்ளைகளுக்கு ஏற்பட அதிக வாய்ப்புண்டு. உடற்பருமன் அதிகமாக இருப்பவருக்கு இந் நோய் கூடுதலாக ஏற்படும் வாய்ப்புண்டு. நீரிழிவை முற்றாக குணப்படுத்த முடியாது. ஆனால் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியும். சித்த மருத்துவ அடிப்படையில்நீரிழிவு சிகிச்சை ஆனது பத்திய உணவால் மட்டும் கட்டுப்படுத்தப்படும்/பத்திய உணவு, மருந்து ஆகியவற்றால் கட்டுப்படுத்தப்படும்.

நீரிழிவு நோயாளிகள் அதிகரித்த பசி, அதிக தாகம் என்பவற்றை கட்டுப்படுத்தவும் இரத்தத்தில் குளுக்கோசு அளவு அதிகரிக்காமல் இருக்க ஏற்ற உணவை பின்பற்ற வேண்டும். எனவே இவர்கள் ஒரே நேரத்தில் அதிகம் உண்ணாது குறிப்பிட்ட நேரம் இடைவெளி உதாரணமாக 2 மணித்தியால இடைவெளியில் உண்ணல். அடிக்கடி விரதம் இருப்பதை தவிர்ப்பது நல்லது. நீரிழிவு நோயாளிகள் பாவிக்கக்கூடிய உணவாக வரகு, குரக்கன்மா, பச்சை காய்கறி, பாவற்காய், கதலிவாழை, வள்ளல்கீரை, முருங்கை இலை, தவசி முருங்கை, குறிஞ்சா, சிறு மீன், ஆடைநீக்கியபால், சீனியற்ற தேநீர், எலுமிச்சைச்சாறு, மாமைற் ஆகியவற்றை குறிப்பிடலாம்.

கொழுப்புணவு, இறைச்சி வகை, மாப்பொருள், சீனிவகை தவிர்க்கவேண்டும்.நீரிழிவுநோயாளர் முக்கியமாக தமது கால்களை பாதுகாத்தல் அவ சியமாகும்.

நீரிழிவு நோயாளர்களுக்கு உபத்திரவமாக இருதயநோய், இரத்தத்தில் கொலஸ்ரோல் கூடுதல், மாரடைப்பு ஏற்படலாம். எனவே அவர்கள் இரத்தத்தில் சீனியளவை அளவாக வைத்திருத்தல் அவசியமாகும்.

**நீரிழிவு நோயின் தாக்கம் உடையவர்கள்**

● உற்சாகத்தில் சிறுவர்களாக இருக்க வேண்டும்.

● உணவு விடயத்தில் இளம் பெண்ணாக இருக்க வேண்டும்.

● வாழ்க்கைமுறையில்கூலித் தொழிலாளியாகஇருக்கவேண்டும்.

ஏனெனில் சிறுவர்கள் ஓய்திராமல் ஏதாவது செய்து கொண்டு இருப்பார்கள். இதனால் அவர்களின் உடல் ஆரோக்கியமாக இருக்கும். இளம் பெண்கள் தம் கட்டழகை மாறாது பேணுவதற்கு கண்ட உணவை உண்ணாது பார்த்து பார்த்து உண்டு உடலை கச்சிதமாக வைத்துக் கொள்வர்.

கூலித்தொழிலாளி விடிந்தது முதல் இரவு வரை தனது வயிற்றுப்பாட்டிற்காகஉழைத்துக்கொண்டு இருந்தாலும் உடல் முறுக்கேறி காணப்படும். வசதியானவர்களை விட அவர்கள் நோயால் பாதிக்கப்படுவது குறைவு. இப்படி ஒரு முறையான வாழ்க்கை மேற்கொண்டு வந்தால் தொற்றாத நோய் முற்றாக கட்டுப்பட்டுவிடும்.

பரம்பரை திருமணம், சொகுசான வாழ்க்கை, உடற்பயிற்சி இல்லாமை ஆகிய காரணங்களே தொற்றா நோய்க்கு வழிவகுக்கும். அதாவதுஉணவிலுள்ளகலோரியை அடிப்படையாக வைத்து உங்கள் எடை மற்றும் உழைப்







பிற்கேற்ற உணவுத் திட்டத்தை வகுத்துக் கொள்ள வேண்டும். கலோரி குறைவான உணவுகளை தெரிவு செய்வதுடன் உணவு விடயத்தில் சரியாக நடந்து கொள்ள வேண்டும்.

"உடம்பும் இரும்பும் இருக்கக் கெடும்" என்பது முதுமொழி. எம் உடலைப் பேணுவதே ஒரு பிரயாணம் செய்வதற்கு சமனாகும். முயற்சிகள் இன்றி அப்பியாசம் செய்யாது இருப்போமாயின் மிகவும் குறுகிய காலத்தில் நோய் வாய்ப்படலை தவிர்க்க முடியாது. எனவே உடற்பயிற்சி செய்தலை அத்தியாவசியமாக கருத வேண்டும். உடல் ஆரோக்கியமாக வாழ உடல் உழைப்பு அவசியம் ஆகும்.

நார்த்தன்மையான தானிய உணவுகளையும் கீரை வகைகளையும் உணவில் கூடுதலாக சேர்க்க வேண்டும். முழுக் கோதுமைப் பாண், தவிடு நீக்காத அரிசி, திணை, குரக்கன், சாமை, வரகு என்பவற்றில் நார் அதிகமாக இருப்பதால் மெல்லுவதற்கு அதிக நேரம் எடுக்கும். ஆனால் வெண் பாண், கேக், வெள்ளை அரிசியில் தயாரித்த உணவுகளை விக அதிக நேரம் பிடிக்காது.

இதில் இருவகையான நார்ப் பொருட்கள் அடங்குகின்றன.

01. மிக மென்மையான உறிஞ்சும் தன்மையுடைய நார்

அதாவது தானியத்தை வெளியுறையாக மூடியுள்ளது. தவிட்டுப் பகுதியாகும். தானியத்தை சுத்திகரிக்கும் போது/ மினுக்கும் போது தவிடு அகற்றப்படும்.

2. கரடுமுரடான வகை நார் காய்கறி இலை, கீரை, பழம், பணங்கிழங்கு இவற்றில் நார்ப்பொருட்கள் கடினமானவை. இக்கூற்றுகள் சரிவர உலில் போனால் உடற்பருமன், மலச்சிக்கல், தொற்று நோய் என்பன வராது.

தாவர உணவிலுள்ள போசணைக் கூறுகள் யாவும் தடித்த துண் மூடிக்குள் அடைத்து வைக்கப்பட்டுள்ளன. இத்தகைய தாவர மூடிகள் வாயினால் மெல்லுதல், மேலும் வயிற்றிலுள்ள அமிலத் தாக்கத்தினால் உடைக்கப்படுகின்றன. ஆதனால் மிருகங்களினால் உட்கொள்ளப்படும் தாவரங்களிலுள்ள நார்களின் பௌதீக இயல்புகள் காரணமாக உணவில் அவை சமிபாடு அடைவதற்கு கடினத் தன்மையை ஏற்படுத்துவனவாக மிளிர்கின்றன.

தாவர பட்சனியாகிய மிருகங்களும் இரையை மீட்டு அசை போட்டு இத்தகைய முயற்சியை நிறைவாக்கிக் கொள்கின்றன. ஆயினும் மனிதன் ஏனைய விலங்குகளைப் போலல்லாது தனது உணவைப் பதப்படுத்தி உண்ணப் பழகியதால் அவன் உட்கொள்ளும் உணவுக் கூறுகள் அடங்கியுள்ள நார்மூடிகள் அகற்றப்படுகின்றன. இது இன்றைய பிரச்சினைக்குரிய அடிப்படை சிக்கலாக அமைந்து வருகின்றது. இத்தகைய பதப்படுத்தப்பட்ட உணவை தவிர்த்து இயற்கையான பழங்கள், காய்கறிகள், கிழங்குகளை மென்று சாப்பிடல் சிறந்தது ஆகும். ஏனெனில் அவற்றில் அதிக நார்ப் பொருட்கள் உண்டு.

நார்களுக்கு முக்கியமாக 4 செயற்பாடுகள் உள்ளன.

1. உள்ளெடுக்கும் சக்திகளை கட்டுப்படுத்துகின்றது.

2. காபோவைதரேற் உறிஞ்சலையும் இன்சுலின் சுரத்தலையும் கட்டுப்படுத்துகின்றது.

3. கொலஸ்ரோலிலுள்ள நீர்ப்பாய நிலையை குறைக்கும்

4.முக்கியமாக பெருங்குடலின் சுகவாழ்வையும் அதன் செயற்பாட்டையும் ஆளும் முக்கிய காரணியாகும்.

இவற்றால் மலங்கழிதல் இலகுவாகின்றது. உள்ளெடுக்கும் சக்திகளைக் கட்டுப்படுத்தல்.

● ஆரைக்கிரையை தண்டுடன் சேகரித்து நன்கு நிழலில் உலர்த்தி பொடித்து 1-2 கிராம் காலை மாலை உண்ண நீரிழிவு கட்டுப்படும். அல்லது ஆரைக்கீரையை பச்சடி/துவையல் செய்து பருப்புடன் உண்ணலாம். ஆரைக்கீரை ஓர் நீர்த்தாவரம் ஆகும்.

● மண்சட்டியில் வெந்தயம் எடுத்து ஆரைக்கீரைசாறு வெந்தயம் மூழ்கும்வரை விட்டு ஊற விட்டு உலர்த்தி 5 கிராம் காலை, மாலை உண்ண நீரிழிவு கட்டுப் படும்.

● ஆலமரப்பட்டையை பொடித்து நிழலில் உலர்த்தி இடித்து அரித்து வைத்து 1-2 கிராம் ஆடை நீக்கிய பசும்பாலுடன் எடுக்க நீரிழிவு கட்டுப்படும்.

● ஆவாரம் இலை, வேர், பட்டை, கொழுந்து, காய் இவற்றை நிழலில் உலர்த்தி சிறுசிறு துண்டாக நறுக்கி அருவல் நொருவலாக தேயிலை பொடியாக தயாரித்து 1 1/2 தே.க. எடுத்து 200மில்லி லீற்றர் சுடுநீரில் 5 மணி நேரம் ஊற விட்டு காலை, மாலை தேநீர் போல் அருந்தி வர நீரிழிவு கட்டுப் படும்.

● ஆவாரம் பிசின் எடுத்து காயவைத்து பொடித்து தினமும் 2 கிராம் சாப்பிட்டுவர நீரிழிவு கட்டுப்படும்.

● ஆவாரம்பூ, நாவற் கொட்டை, சிறுகுறிஞ்சா சம அளவு எடுத்து உலர்த்தி, பொடித்து தினமும் 2 கிராம் காலை, மாலை உண்டு வர நீரிழிவு கட்டுப்படும்.

● கடுக்காய் தோல் , தான்றி தோல், நெல்லிவற்றல் சமஅளவு எடுத்து பொடித்து 2கிராம் காலை, மாலைஉண்ணநீரிழிவுகட்டுப்படும்.

● எள்ளுப்புண்ணாக்கு 5-8 கிராம் காலை, மாலை உண்டு வர இரத்தத்தில்சீனிஅளவுகட்டுப்படும்.

● கடல் அழிஞ்சில் பட்டையை அருவல் நொருவலாக இடித்து 4 பங்கு நீர்விட்டு 1/4 பங்காக வற்றக் காய்சசி 30-60 மில்லி லீற்றர் சாப்பிடமுன் எடுப்பின் நீரிழிவு கட்டுப்படும்.

● முதிர்ந்த கறிவேப்பி லையை உலர்த்தி பொடித்து 4-8 கிராம் தினமும் காலை, மாலை வெந்நீருடன் எடுக்க இரத்தத்தில் சீனி அளவுகட்டுப்படுத்தப்படும். கறிவேப்பிலையைபச்சடி, துவையல்செய்து சாதத்துடன் உண் ணலாம்.

● குரக்கன் கூழ், கஞ்சி உண்பதனாலும் நீழிவு கட்டு ப்படும்.

● காட்டுக்கொத்தமல்லி இரசம் வைத்து உண்ணலாம்./ காட்டு கொத்தமல்லியை உலர் த்தி 4 பங்கு நீர் விட்டு 1/4 பங்கு வற்றக் காய்ச்சி குடிநீராக எடுக்கலாம்.

● சாத்தாவாரி/ தண்ணீர் விட்டான் கிழங்கை பால்சேர்த்து அரைத்து உலர்த்தி பொடி செய்து தினமும் 2 கிராம் அளவு இரு வேளை உண்ண நீரிழிவு கட்டுப்படும்.

● பாகற்காய், பனி அவரை, குருவித்தலை, பாகல் இவற்றை மாற்றி மாற்றி வாரத்தில் 2 முறை உண்ண நீரிழிவு கட்டுப்படும்.

● திலப்பனைகிழங்கு, வேர்க்கொம்பு அளவு எடுத்து உலர்த்தி பொடித்து 2 கிராம் காலை, மாலை சாப்பிட்ட பின் எடுக்க நீரிழிவு கட்டுப்படும்.

● பிஞ்சு பப்பாசிக்காயை தோலுடன் கழுவி 3 ஆம் தேங்காய்ப்பாலில்வெங்காயம், பச்சை மிளகாய் இட்டு கறிசமைத்து உண்ண நீரிழிவு கட்டுப்படும்.

● கொவ்வை இலையை துவையல் / பச்சடி செய்து சாப்பிடல், கொவ்வைக் காயை இடித்து சாறெடுத்து1தேக்கரண்டிஅளவு காலை, மாலை எடுக்க இரத்தத்தில் சீனி அளவு கட்டுப்படும்.

● அம்பிரலங்காய் தோலுடன் சேர்த்து கப்பிப்பாலில் அவித்து கறிசெய்துஉண்ணல்/காயாகவும் உண்ணநீரிழிவுகட்டுப்படும்.

● மாவின் குருத்தை சேகரித்து உலர்த்தி பொடித்து 1-2 கிராம் தினமும் இருவேளை வெந் நீருடன் உண்ணநீரிழிவுகட்டுப்படும்.

● வீட்டில் சோறு சமைக்கும் போது ஒரு சுண்டு அரிசிக்கு 25 கிராம் கொள்ளு சேர்த்து சமைத்து உண்ணல்.

● பேரிச்சை, சுத்தமான தேன் (காடுகளில் இருந்து சேகரித்த தூய தேன்) நீரிழிவு நோயாளர் பயன்படுத்தலாம். ஏனெனில் பேரிச்சம்பழத்திலும் தேனிலும் எமது உள் உறுப்புக்களுக்கு தேவையான விற்றமின்கள், கனிமங்கள் காணப்படுவதும் நிர்ப்பீடனத்தை அதிகரிக்க தேவையான சத்துக்கள் அடங்கியிருப்பதும் அத்துடன் பேரீச்சை, தேனிலுள்ள சீனிச்சத்தானது லிவுலோஸ் எனும் நிலையில் காணப்படுவதால்சாதாரணகுளுக்கோசை விட 1/8 பங்கு குறைவாகவே அகத்துறிஞ்சப்படும்.

● வெண்கோட்டத்தின் இலையை பச்சடி/ துவையல் செய்து உண்ணலாம். வாரத்தில் 3 நாட்களுக்குவெண்கோட்ட இலையை ஒரு அளவான சிறிய இலை) சப்பிச் சாப்பிடலாம்.

# கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லாவால் மன்னாரில் உள்ள தமிழ் மக்களின் காணி அபகரிப்பு

## அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கிறார்-சாள்ஸ் எம்.பி



(மன்னார்)

மன்னார் ஓலைத்தொடுவாய் உவரி பகுதியில் உள்ள் சுமார் 508 ஏக்கர் காணிகள் கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லாவுக்கு சொந்தமான **SEYLAN Business private limited** நிறுவனத்தினூடாக கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இக் காணிகள் கொள்வனவு தொடர்பாகவும் பெரும் சந்தேகம் இருப்பதாக வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார். குறித்த விடயம் தொடர்பாக மக்களின் முறைப்பாட்டை தொடர்ந்து குறித்த ஓலைத்தொடுவாய் உவரி காணிப்பகுதிக்குச் சென்று பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தம் நிறைவடைந்த பின்னர் குறிப்பாக மன்னார்மாவட்டத்தில்முஸ்லிம்அரசியல் வாதிகள் பலர் பொதுமக்களின் காணிகளை அடாத்தாகவும் அதேநேரத்தில் யுத்தம் காரணமாக இந்தியாவிற்கு இடம்பெயர்ந்த மக்கள் காணிகளில் இல்லாமை காரணமாக அவர்களுடைய காணிகளையும் அடாத்தாக கொள்வனவு செய்து இங்குள்ள முஸ்லிம் நபர்களுடைய பெயர்களில் பெயர் மாற்றம் செய்து பல இடங்களில் பல ஏக்கர் காணிகளை முஸ்லிம் அரசியல் வாதிகள் கொள்வனவு செய்திருக்கின்றனர்.

குறிப்பாக தற்போது கிழக்கில் ஆளுநராக உள்ள ஹிஸ்புல்லா மன்னார் ஓலைத் தொடுவாய் உவரி என்ற பிரதேசத்திலுள்ள 508 ஏக்கர் காணியை செலான் பிஸ்னஸ் பிரைவேட் லிமிட்டட் எனும் பெயரில் கொள்வனவு செய்துள்ளார். அந்த நிறுவனத்தின் இயக்குநராக ஹிஸ்புல்லா இருக்கின்றார். அதன் பெயரில் 508 ஏக்கர் காணிகளை 2013 ஆம் ஆண்டு கொள்வனவு செய்திருக்கின்றார்.

இந்த 508 ஏக்கர் காணிகளை கொள்வனவு செய்வதற்கு குறித்த நிறுவனத்திற்கு நிதி எவ்வாறு கிடைத்தது. குறித்த அரசியல் வாதிக்கு எந்த அரபு நாட்டில் இருந்து எந்த செல்வந்தர் நிதி வழங்கினார் என்பது தொடர்பாக அரசாங்கம் உடனடியாக கவனத்தில் எடுக்க வேண்டும்.

இதேபோன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்கலைக்கழகம் ஒன்று ஜனாதிபதியினால் அரசுடைமையாக்கப்பட்டுள்ளது. அதற்கு சவுதியை சேர்ந்த தனிப்பட்ட நபர் ஒருவர் ஹிஸ்புல்லாவிற்கும் அவருடைய மகனுக்கும் சொந்தமான நிறுவனம் ஒன்றிற்கு பெரும் தொகையான பணம் அனுப்பியிருக்கின்றார். அதன்மூலம் பல்கலைக்கழகம் கட்டப்பட்டுள்ளது.

தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள முஸ்லிம் மத தீவிரவாத அமைப்புக்களால் கத்தோலிக்க மக்களை குறிப்பாக இலக்கு வைத்து தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன.

இந்த உவரிப்பகுதியும் ஒரு கத்தோலிக்க கிராமமாகும். இங்கிருந்த மக்கள் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து இந்தியாவிலும் வேறு பகுதிகளிலும் இருக்கின்றார்கள். ஆரம்பத்தில் இது ஒரு தமிழ் மக்களுடைய கிராமம். அதற்கு அடையாளமாக 500 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட அந்தோனியார் ஆலயம் இங்கு இருக்கின்றது.

ஆக இப்படியான நில ஆக்கிரமிப்புக்களை முஸ்லிம் அரசியல் வாதிகள் அரசாங்கத்தில் அங்கம் வகித்துக்கொண்டு தமிழ் மக்களின் நிலங்களை அபகரித்து அரபு நாடுகளிலுள்ள தனிப்பட்ட நபர்களின் நிதிகளைப் பெற்று தாங்களும் அந்தப் பணத்தில் சுக போகத்தைப் பெற்று இங்குள்ள தமிழ் மக்களின் காணிகலள எந்த அடிப்படையில் கொள்வனவு செய்கின்றார்கள்.

குறிப்பாக இந்த உவரிப்பகுதி காணியை தற்போது கிழக்கு ஆளுநர் எந்த அடிப்படையில் 508 ஏக்கர் கொள்வனவு செய்தார். அவருடைய உள்நோக்கம் என்ன என்பது தொடர்பாக தேசிய புலனாய்வு உடனடியாக விசாரிக்க வேண்டும் என்பதுடன் அதற்குறிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த செலான் நிறுவனத்திற்கு எவ்வாறு இவ்வளவு பணம் கிடைத்தது என்பது தொடர்பாகவும் விசாரித்து இந்த காணிகளை அரச உடைமையாக்கி இப் பிரதேசங்களில் காணி இல்லாத மக்களுக்கு பகிர்ந்தளிக்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

அதேநேரத்தில் 508 ஏக்கர் காணிகள் என்ற போர்வையில் குறித்த பகுதியில் உள்ள 900 ஏக்கர் காணிகளை அடைத்து வைத்துள்ளதாகவும் எனவே உடனடியாக இது தொடர்பான விசாரணகளை முன்னெடுத்து உண்மை நிலையை வெளிக்கொண்டு வருமாறும் மேலும் தெரிவித்தார். (9-285)




## வற்றாப்பளை கண்ணகி அம்மன் வருடாந்த விசாகப் பொங்கல்

(பனிக்கன்குளம்)

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த விசாகப் பொங்கல் உற்சவத்தை முன்னிட்டு இன்று புதன் மடை, 17 ஆம் திகதி வெள்ளி மடை, 19 ஆம் திகதி காட்டாவிநாயகர் ஆலய பொங்கல் உற்சவம் இடம்பெற்று 20 ஆம் திகதி அதிகாலை 3 மணிக்கு மடைப் பண்டம் அம்மன் ஆலயம் எடுத்து செல்லப்படும்.

அன்றைய தினம் வரலாற்றுச் சிறப்புமிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பொங்கல் உற்சவம் இடம்பெற்று நள்ளிரவு 12 மணிக்கு வளர்ந்து வைத்து பொங்கல் இடம்பெறும். 25 ஆம் திகதி பக்தஞானி பொங்கல் (பொங்கல் கிரியை நிறைவு) உடன் பொங்கல் உற்சவம் நிறைவடையவுள்ளது. (9-281)

## வறுமை காரணமாக போசாக்கற்ற நிலையில் சிறுவர்கள் முல்லை.மேழிவனம் கிராமத்தின் பேரவலம்

### பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுமாறு சமூக மட்ட அமைப்புக்கள் கோரிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு மேழிவனம் பகுதியில் குடும்ப வறுமை, தொழில் வாய்ப்பின்மை போன்ற காரணங்களால் அதிகளவான சிறுவர்கள் போசாக்கற்ற நிலையில் காணப்படுவதாக கிராம மட்ட அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள மிகவும் பின்தங்கிய பகுதிகளில் ஒன்றாகக் காணப்படும் மேழிவனம் கிராமத்தில் வாழ்ந்து வரும் 90 வீதமான குடும்பங்கள் தொழில் வாய்ப்பற்ற நிலையில் அன்றாடம் கூலி வேலைசெய்து அதன்மூலம்கிடைக்கும்வரும் வருமானத்தை கொண்டு தமக்கான தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றனர்.

தற்போதைய சூழ்நிலையில் எந்தவித வேலை வாய்ப்புக்களும் இன்றி ஒரு நேர உணவிற்கே பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் கூடுதலான சிறுவர்கள் போதிய போசாக்கு உணவுகள் இன்றி போசக்கற்ற நிலையில் காணப்படுவதாக தெரிவித்துள்ள பொது அமைப்புக்கள் இப்பகுதியில் உள்ள சிறுவர்கள் பாடசாலைகளுக்கு செல்வதில் சொல்லொணாத் துன்பங்கலள எதிர்கொண்டு வருவதாகவும் இவ்வாறு இங்குள்ள சிறுவர்கள் பாடசாலைகளுக்குச் செல்வதற்கான போக்குவரத்து வசதிகள் இன்மை, பொருளாதார வசதிகள் இன்மை போன்ற காரணங்களால் அதிகளவான சிறுவர்கள் பாடசாலைக்கல்வியை இடைநிறுத்திவிட்டு கூலி வேலைகளுக்கு சென்று வருகின்றனர் எனவும் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் பலரது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டபோதும். இதுவரை எந்தவித தீர்வுகளும் கிடைக்கவில்லை என மேற்படி கிராமட்ட அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன. (9-315)

## தீவிரவாதத்துக்கு எதிராக செயற்பட அனைத்து மக்களும் முன்வர வேண்டும்

### சிவமோகன் எம்.பி

(குருமன்காடு)

இன, மத, மொழி பேதமின்றி அனைவரும் தீவிரவாதத்திற்கு எதிராகச் செயற்பட முன்வரவேண்டும் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலைமை தொடர்பில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதில் அளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா நகரின் பாதுகாப்பு நடவடிக்கைகள் அதிகமாகவுள்ளது. இராணுவத்தினரும், பொலிஸாரும் இணைந்து வைத்தியசாலை சுற்று வட்டாரத்தில் தமது பாதுகாப்பை பலப்படுத்தி இருந்தமையை பார்க்க முடிகிறது. உண்மையில் ஒரு இனம் அடக்கு முறைக்கு உட்பட்டிருந்தால் அந்த இனம் தனக்கு நடந்த அநீதிகளை சுட்டிகாட்டி அகிம்சை வழியில் போராட வேண்டிய காலம் இது.

எனவே இந்தக் காலத்தில் அதற்கான உரித்துக்கள் உண்டு. அதை வைத்து அகிம்சை வழியில் போராடுவதே சிறந்தது. அதை விடுத்து தீவிரவாதம் என்ற போர்வையில் அப்பாவி பொதுமக்களை குறி வைத்தல், வைத்தியசாலைகளை குறி வைத்தல், மதத் தலங்களை குறிவைத்தல் என்பவற்றை ஏற்றுக் கொள்ளக்கூடியதொன்றாக நான் கருதவில்லை.

அதேநேரம் இந்த அரசு பாதுகாப்பு நடைமுறைகள் என்ற ரீதியில் வீதிக்கு வீதி சோதனை சாவடிகளை அமைத்து இந்த நடவடிக்கைகளை எடுப்பது எவ்வளவு தூரத்திற்கு வெற்றியளிக்கும் என்பது கூற முடியாது. அவர்கள் மக்களுடன் மக்களாக அனைத்து மக்களையும் இந்த நாட்டின் சொந்த பிரஜைகள் என்ற ரீதியில் நடத்த முற்படுவார்களேயானால் இந்த பாதுகாப்பு பிரச்சினைகள் தானாகவே அகன்று போகும்.

இன, மத, மொழி பேதமின்றி அனைவரும் தீவிரவாதத்திற்கு எதிராக செயற்பட முன்வர வேண்டும். இந்த நாட்டில்ஒரு மதத்திற்கு என தனியான ஒரு இடத்தைக் கொடுத்து ஏனைய மதங்களை அதற்கு கீழே செயற்பட திணிப்பை ஏற்படுத்த முயல்வதை இன்றைய சூழலில் முழுமையாக உணர முடிகிறது.

ஆனால் அனைத்து மதங்களுக்கும், அனைத்து மொழிகளுக்கும், அனைத்து மக்களுக்கும் சமவுரித்து வழங்கக் கூடிய விதத்தில் இந்த அரசு செயற்பட்டு ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு அரசியல் யாப்பில் சகல மக்களுக்குமான உரித்துக்களை வழங்கி கடந்த காலத்தில் நடந்த கசப்புணர்வுகளுக்கு உரிய நியாயங்களை வழங்கி அவர்களுக்கான ஒரு சரியான தீர்வை வழங்கி மீள நிகழாமையை உறுதிப்படுத்தி ஒரு பொறுப்புக் கூறலை செய்ய வேண்டும். இதன் மூலம் அனைத்து இன மக்களும் இந்த தீவில் ஒற்றுமையாகவும், சந்தோசமாகவும் வாழ முடியும் எனத் தெரிவித்தார். (9-250)

## உவரால் ஆக்கிரமிக்கப்பட்ட குஞ்சுக்குளம் பூர்வீக கிராமம்

(கண்டாவளை)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள மிகவும் பழைமை வாய்ந்த குஞ்சுக்குளம் பூர்வீக்க கிராமம் உவரால் ஆக்கிரமிக்கப்பட்டு வருவதனால் இங்குள்ள மக்கள் தொடர்ந்து இடம்பெயரும் அவலம் ஏற்பட்டுள்ளது.

கிளிநொச்சி கரைச்சிப்பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள வன்னேரிக்குளம் குடியேற்றக்கிராமம் 1953 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னரே பூநகரியை அண்மித்த பகுதியில் காணப்படும் மேற்படி குஞ்சுக்குளம் கிராமம் நூற்றாண்டுகளுக்கு மேல் பழைமை வாய்ந்த ஓர் விவசாயக்கிராமமாகக் காணப்பட்டதுடன், சுமார் 1500 ஏக்கருக்கும் மேற்பட்ட வயல் நிலங்களும் 12 வரையான சிறுசிறு குளங்களும் காணப்பட்டது. கடந்த காலயுத்தம் காரணமாக உவர்நீர் தடுப்பணைகள் சேதமடைந்து பூநகரி, பாலாவி போன்ற பகுதியில் கடல் பெருக்கெடுக்கும் போது கடல்நீர் மண்டைக்கல்லாறு வழியாக உவர் நீர் உட்புகுந்து சுமார் 900 ஏக்கர் வரையான விளை நிலங்கள் முழுமையாக உவரடைந்துள்ளன.

ஏனைய நிலங்களும் உவர் பாதிப்புக்களுக்கு உள்ளாகியுள்ளதுடன், நன்னீராகக் காணப்பட்ட சகல கிணறுகளும் உவராகி மாறியுள்ளன. இதனால் இப்பகுதியில் பூர்வீகமாக வாழ்ந்த நூற்றுக்கணக்கான குடும்பங்கள் முழுமையாக இடம்பெயர்ந்து சென்றுள்ளதுடன், இப்பகுதியில் நூற்றாண்டு பழைமை வாய்ந்த குஞ்சுக்குளம் அ.த.க. பாடசாலை, முன்பள்ளி என்பனவும் செயலிழந்துள்ளன.

தற்போது மூன்று வரையான குடும்பங்கள் இங்கு வாழ்ந்து வருகின்ற நிலையில் காட்டு யானைகளின் தொல்லை, குடிநீர் இன்மை போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருவதாகவும் இப்பகுதியில் தங்கியுள்ள மேற்படி குடும்பங்கள் தெரிவித்துள்ளன. (9-315)

## கிளி.காணி மத்தியஸ்த சபை வார இறுதியில் நடைபெறும்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்ட காணி விசேட மத்தியஸ்தசபையின் அமர்வுகள் யாவும் வாரத்தின் இறுதிநாளான ஞாயிற்றுக் கிழமைகளில் நடைபெறும் என அதன் தவிசாளர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட விசேட காணி மத்தியஸ்தசபையானது கடந்த 2018 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வருவதுடன், ஏராளமான காணிப்பிணக்குகள் இணக்கம் காணப்பட்டு முடிவுறுத்தப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டச்செயலகத்தின் பழைய கட்டடத்தில் வாரத்தில் சனிக்கிழமைகளில் இயங்கி வந்த இவ் அமர்வானது வாரத்தின் இறுதிநாளான ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் மாலை ஒரு மணி வரை நடைபெறும் என்று அதன் தவிசாளரான எஸ். தவசீலன் அறிவித்துள்ளார். (9-315)



### கிளி.இரணைமடுக்குளத்தின் கழிவு வாய்க்கால் ஆறுகள்

# சட்டவிரோதமாக மறிப்பு

### குடிநீருக்கு அவதியுறும் கால்நடைகள்

(கண்டாவளை)

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் கீழுள்ள கழிவுவாய்க்கால்கள், ஆறுகள் சட்டவிரோதமான முறையில் மறிக்கப்பட்டுள்ளதால் தட்டுவன்கொட்டி, உமையாள்புரம், கோரக்கன்கட்டு, காஞ்சிபுரம்போன்ற பகுதிகளில் கால்நடைகளுக்கான குடிநீர் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக மேற்படி பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசனக்குளமான இரணைமடுக்குளத்தின் சிறுபோகச்செய்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் இரணைமடுக்குளத்தின் கீழுள்ள கனகராயன் ஆறு, உப்பாறு, கோரக்கன்கட்டு ஆறு, பரந்தன் இரசாயன ஆறு போன்ற ஆறுகள் மறிக்கப்பட்டு அவற்றின் மூலம் செல்கின்ற கழிவுநீரை விவசாயச் செய்கைக்குப் பயன்படுத்துவதனால் இதன் கீழ் பகுதிகளான கோரக்கன்கட்டு, கண்டாவளை, தட்டுவன்கொட்டி, உமையாள்புரம், நாவல்கொட்டியான், காஞ்சிபுரம், செருக்கன் போன்ற பகுதிகளுக்கான கழிவு நீர் துண்டிக்கப்பட்டுள்ளது.

இதனால் இந்தப்பிரதேசங்களில் இருக்கின்ற கால்நடைகள் மற்றும் காட்டு விலங்குகள் தற்போதைய வறட்சி நிலைமையினால் குடிநீர் தேடி அலையும் அவல நிலை காணப்படுகின்றது.

மேற்படி கழிவுவாய்க்கால்கள், ஆறுகளை மறித்து சட்டவிரோத பயிர்ச்செய்கை மேற்கொள்கின்றமை தொடர்பில் நீர்ப்பாசனத்திணைக்களம், கமநலசேவைகள் நிலையம் மற்றும் பிரதேச செயலகம் ஆகியவற்றுக்கு பொதுமக்களால் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. (9-315)

## தொழிற் பயிற்சி நிலையத்தின் கற்கை நெறிகள் ஆரம்பம்

(கண்டாவளை)

கிளிநொச்சி அறிவியல் நகரில் இயங்கி வரும் ஜேர்மன் இலங்கை தொழில்பயிற்சி நிலையத்தின் சகல கற்கை நெறிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதனால் கற்கை நெறி மேற்கொள்ளும் மாணவர்கள் தமது கற்கை நெறிகளில் கலந்து கொள்ளுமாறு அதன் தொழில் பயிற்சி நிலைய அதிபர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி அறிவியல் நகர்ப்பகுதியில் தொழில் பயிற்சியை வழங்கும்நோக்கில் பல்வேறு வகையிலான பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் அண்மையில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாகக் குறித்த கற்கை நெறிகள் நிறுத்தப்பட்டிருந்த நிலையில் தற்போது அவை ஆரம்பிக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தற்போது தொழில்சார் கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் சகல மாணவர்களும் தமது கற்கை நெறிகளில் கலந்து கொள்ளுமாறு தொழில் பயிற்சி நிலையத்தின் அதிபர் கேட்டுள்ளார். (9-315)

### இலங்கை அரசு மீண்டும்

## தமிழ் மக்களை அச்சுறுத்த முற்படுகிறதா?

### சிவாஜிலிங்கம் கேள்வி

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் மற்றும் செயலாளர், சிற்றுண்டிச்சாலை உரிமையாளர் ஆகிய மூவரும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு இன்னமும் விடுதலை செய்யப்படாமல் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளனர். திங்கட்கிழமை சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து இது தொடர்பான விடயம் அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்ட போதும் இதுவரை அறிவிக்கப்படவில்லை.

எனவே இவ்வாறான நிலைமைகளை பயன்படுத்தி இலங்கை அரசாங்கம் ஒட்டுமொத்த தமிழ் சமூகத்தையும் பல்கலைக்கழக மாணவர்களையும் அச்சுறுத்த முற்படுகின்றது என்ற சந்தேகம் எழும்புவதாக முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்

மன்னார் புதிய பேருந்து நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தின் இரண்டாம் நாள் நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதே போன்று அண்மையில் விடுதலைப்புலிகளின் தலைவரின் பிறந்த தினத்தை கொண்டாடியதாகவும் பிறந்த தினத்தின் போது கேக் வெட்டியதாகவும் விடுதலைப் புலிகளின் பனர் வைத்திருந்ததாகவும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் உப விதிகளின் அடிப்படையில் தன் மீதும் வல்வெட்டித்துறை நகர சபை தலைவர் மற்றும் உறுப்பினர் ஒருவர் மீதும் குற்றம் சுமத்தப்பட்டு வருகின்ற மே மாதம் 31 திகதி பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜராகும்படி பணிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் இவ்வாறான வழக்குகளில் பிணை வழங்க நீதிமன்றுக்கு அதிகாரம் இல்லை என்பதால் நாங்கள் பல மாதங்கள் விளக்க மறியலில் தடுத்து வைக்கப்படக்கூடிய ஆபத்து ஏற்பட்டுள்ளது. இவ்வாறான விடயங்கள் ஊடாக தமிழ் மக்களையும் பல்கலைக்கழக மாணவர்களையும் தொடர்ச்சியாக இலங்கை அரசாங்கம் அச்சுறுத்த முற்படுகின்றதா எனக் கேள்வி எழுகிறது.

அதே நேரம் வருகின்ற 16 திகதி பல்கலைக்கழக மாணவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுகின்றபோது பிணைவழங்கப்படாத பட்சத்தில் மக்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களும் எழுச்சியில் திரண்டால் மாத்திரமே தடுக்க முடியும். அவ்வாறு இல்லாவிட்டால் 18 ஆம் திகதி இதற்கான பதிலை முள்ளிவாய்க்கால் மண்ணில் இலங்கை அரசாங்கத்திற்கும் சர்வதேசத்திற்கும் காட்டுவதற்கு பல்கலைக்கழக மாணவர்களும் ஒட்டு மொத்த தமிழ்ச்சமூகமும் ஒன்று திரண்டு அணிதிரளுமாறு கேட்டுக்கொள்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (9-285)

## 2 வாள்களுடன் வர்த்தகர் கைது

(குருமன்காடு)

வவுனியாவில் இரண்டு வாள்களுடன் வர்த்தகர் ஒருவர் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா, ஹொரவப்பொத்தானை வீதியில் உள்ள ஹாட்வெயார் ஒன்று இராணுவத்தினரால் இரண்டு மணித்தியாலம் சோதனையிடப்பட்டது. இதன்போது குறித்த ஹாட்வெயாரில் இருந்து இரண்டு வாள்கள் இராணுவத்தினரால் மீட்கப்பட்டன. இதனையடுத்து குறித்த வர்த்தக நிலைய உரிமையாளர் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (9-250)

### நீர்வாகப் பொதுக்கூட்டம்

கிளிநொச்சி அருள்மிகு கந்த சுவாமி தேவஸ்தானத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 16.05.2019 வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆலய அன்னதான கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆலய அங்கத்தவர்கள், உபயகாரர்கள் மற்றும் அடியவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு நிர்வாக சபையினர் அறிவித்துள்ளனர். (9-254)

### வற்றாப்பளை அம்மனுக்கு

## உப்பு நீரில் விளக்கு எரிய தீர்த்தம் எடுக்கும் உற்சவம்



வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த விசாக பொங்கல் உற்சவம் 2019 இற்கான உப்பு நீரில் விளக்கெரியும் அன்னைக்கு விளக்கேற்ற தீர்த்தம் எடுக்கும் உற்சவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த விசாகப் பொங்கல் உற்சவம் எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை வழமை போன்று சிறப்பாக நடத்த பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைத்துள்ளது என்பதுடன் பாதுகாப்பு ஏற்பாடுகளும் பலப்படுத்தப்பட்டுள்ளன. எனவே அம்மன் அடியவர்கள் தங்கள் நேர்த்தி கடன்களை நிறைவேற்ற முடியும் என அறிவிக்கப்பட்டதோடு பொங்கல் கிரியைகள் சிறப்புற இடம்பெற்று வருகிறது

அந்தவகையில் கடந்த 6 ஆம் திகதி பாக்குத்தெண்டல் உற்சவம் சிறப்புற இடம்பெற்றது. அதனை தொடர்ந்து நேற்று முன்தினம் மாலை காட்டாவிநாயகர் ஆலயத்தில் இருந்து தீர்த்தம் எடுக்கும் புனித நிகழ்விற்காக தீர்த்தக்குடம் புறப்பட்டு மாலை 6 மணிக்கு புனித தீர்த்தக்கரை கடலில் அன்னைக்கு உப்பு நீரில் விளக்கெரிக்கும் தீர்த்தமெடுக்கப்பட்டது. இரவு 11 மணிக்கு காட்டா விநாயகர் ஆலயத்தை தீர்த்தம் வந்தடைந்து நள்ளிரவு 12 மணிக்கு அம்மன் சந்நி தானத்தில் மடை பரப்பி உப்பு நீரில் விளக்கெரித்தல் இடம் பெற்றது. (9-281)

### முல்லையில் குடியேறியுள்ள சிங்களக் குடும்பங்களுக்கு

## அரச காணியில் வீட்டுத்திட்டம்-அரச அதிபர் அனுமதி

முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கொக்கிளாய், முகத்துவாரம் பகுதியில் குடியேறியுள்ள பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த 68 குடும்பங்களுக்கும் அப்பகுதியில் உள்ள அரச காணியில் வீடுகள் அமைத்துக்கொடுப்பதற்கு முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் அனுமதி வழங்கியுள்ளார்.

முகத்துவாரம் பகுதியிலுள்ள தமிழர்களின் காணிகளில் அத்துமீறி குடியேறியுள்ள சிங்கள மக்களுக்காக கடந்த சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்ட வீட்டுத் திட்ட ஆரம்ப வேலைகள், பிரதேச செயலகத்தால் தடுத்து நிறுத்தப்பட்டன. அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக இரண்டு முறை குறித்த மக்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மாவட்ட முகாமையாளர், மேலதிக அரச அதிபர், கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர், காணி உத்தியோகத்தர், நில அளவை திணைக்கள உத்தியோகத்தர் ஆகியோருடன் சம்பவ இடத்துக்குச் சென்ற முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர், குறித்த பகுதியிலுள்ள மக்களின் வாழ்விடங்களைப் பார்வையிட்டு அப்பகுதியிலுள்ள அரச காணிகளை அடையாளப்படுத்தி சுமார் 3 ஏக்கர் காணியில் ஒருவருக்கு தலா 6 பேச் காணியில் 62 வீடுகள் அமைக்க மக்களது சம்மதத்துடன் அனுமதி அளித்துள்ளார். (9-281)

## பூநகரி பேருந்து சேவையை சீரமைக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை

பூநகரி பிரதேசத்திலிருந்து காலையில் புறப்படும் பேருந்து சேவை காலதாமதமாவதால் பாடசாலை மாணவர்கள், அரச அலுவலர்கள் மற்றும் ஏனைய பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாக விசனம் தெரிவித்துள்ளனர்.

காலை 7.15 இற்கு பூநகரி வாடியடிப்பகுதிக்கு வரவேண்டிய பேருந்து தாமதமாக வருவதால் தூரப்பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்கள் மற்றும் அரச அலுவலர்கள் உரிய நேரத்திற்கு செல்ல இயலாதுள்ளது.

அத்துடன் பிற்பகலில் பரந்தனில் இருந்து பூநகரிக்குச் செல்லும் பேருந்து மாலை 5.05 இற்கு புறப்பட்ட பின்னர் போக்குவரத்திற்கான வேறு பேருந்து எதுவும் இல்லாத நிலையில் பயணிகள் பெரிதும் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இப்பகுதிக்கான பேருந்து போக்குவரத்தை சீரான முறையில் ஒழுங்கு செய்து தமது நலனுக்கு உதவுமாறு பாடசாலை மாணவர்களாலும் அரச அலுவலர்களாலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (9-254)

# பாரதம்

## ஐக்கிய அரபு அமீரகத்தில் சவுதி கப்பல்கள் மீது தாக்குதல்



(அபுதாபி)

புஜைரா துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருந்த 4 வெளிநாட்டுக் கப்பல்கள் மீது நாசகாரத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக ஐக்கிய அரபு அமீரகம் தெரிவித்தது.

ஐக்கிய அரபு அமீரகத்தில் ஓமன் வளைகுடா பகுதியில் புஜைரா துறைமுகம் அமைந்துள்ளது. அந்நாட்டின் மிகப் பெரிய துறைமுகமான இங்கு, பல்வேறு நாடுகளைச் சேர்ந்த சரக்குக் கப்பல்கள் வந்து செல்கின்றன. இந்த துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருந்த 4 வெளிநாட்டு கப்பல்கள் மீது நேற்று முன்தினம் காலையில் நாசகாரத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக ஐக்கிய அரபு அமீரகம் தெரிவித்தது. ஆனால் தாக்குதல் நடத்தப்பட்ட விதம், தாக்குதலுக்குள்ளான கப்பல்கள் எந்த நாடுகளை சேர்ந்தவை போன்ற கூடுதல் தகவல்களை வெளியிடவில்லை. அதே சமயம் இந்த தாக்குதலில் உயிரிழப்போ அல்லது யாருக்கும் காயமோ ஏற்படவில்லை என தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில், புஜைரா துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருந்த தங்கள் நாட்டின் 2 சரக்குக் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அதில் கப்பல்கள் சேதம் அடைந்ததாகவும் சவுதி அரேபியா நேற்று தெரிவித்தது.

இதுகுறித்து அந்நாட்டின் எரிசக்தித்துறை அமைச்சர் காலித் அல் பாலிக் கூறுகையில், "ஐக்கிய அரபு அமீரகத்தின் பிரத்தியேக பொருளாதார மண்டலமான புஜைரா துறைமுகத்தில் சவுதி அரேபியாவின் 2 எண்ணெய்க் கப்பல்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று சவுதி அரேபியாவின் கச்சாய் எண்ணெயை அமெரிக்காவுக்கு எடுத்து செல்லும் வழியில் தாக்குதலுக்கு உள்ளாகி இருக்கிறது" எனத் தெரிவித்தார்.

ஈரானை எச்சரிக்கும் விதமாக அமெரிக்க போர்க் கப்பல்கள். போர் விமானங்கள் மற்றும் தளபாடங்களை மத்திய கிழக்கு பகுதிக்கு அனுப்பி இருக்கும் சூழலில் ஐக்கிய அரபு அமீரகத்தின் துறைமுகத்தில் சவுதி அரேபியா உட்பட அயல்நாடுகளின் சரக்குக் கப்பல்கள் சேதப்படுத்தப்பட்டிருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (7)

## பாரிய பொருளாதார சிக்கலை எதிர்நோக்கிய பாகிஸ்தான்

### சர்வதேச நாணய நிதியம் உதவி

உயர் பணவீக்கம் மற்றும் அதிகப்படியான கடன் போன்ற காரணங்களால் பாகிஸ்தானின் பொருளாதாரம் வீழ்ச்சியை எதிர்நோக்கியுள்ளது.

பாகிஸ்தானில் எப்பொழுதும் இல்லாத அளவுக்கு வேகமாக பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து வருகிறது.

இதனால் நாட்டின் பொருளாதார நிலைமையை கையாளுவது பிரதமர் இம்ரான்கானின் அரசுக்கு பெரும் சவாலாக உள்ளது.

எனவே நாட்டை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்பதற்கு, சர்வதேச நிதியத்தின் உதவியை பாகிஸ்தான் நாடியுள்ளது.

இது தொடர்பாக பாகிஸ்தான் அரசுக்கும், சர்வதேச நாணய நிதியத்துக்கும் இடையே பல மாதங்களாக பல்வேறு கட்ட பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வந்தன.

இந்த நிலையில், வெளிநாட்டு கடன் சுமைகளை குறைப்பதற்காக பாகிஸ்தானுக்கு அடுத்த 3 ஆண்டுகளில் 6 பில்லியன் டொலர்களை வழங்க சர்வதேச நாணய நிதியம் முன்வந்துள்ளது.

இது தொடர்பாக பாகிஸ்தான் அரசு அதிகாரிகள் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் இடையே ஒப்பந்தமாகியுள்ளது. (7)

## எமது கப்பலை அமெரிக்கா கைப்பற்றியமை சட்டவிரோத செயலாகும் - வடகொரியா

(பியாங்யாங்)

தமது சரக்கு கப்பலை அமெரிக்கா கைப்பற்றியமையானது ஒரு சட்டவிரோத செயல் எனவும், அதனை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வடகொரியா தெரிவித்துள்ளது.

வடகொரிய வெளியுறவுத் துறை அமைச்சினால் நேற்று செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்ட அறிக்கையொன்றிலேயே மேற்படி விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமது சரக்குக் கப்பலை கைப்பற்றியதன் மூலம் அமெரிக்கா ஒரு சட்டவிரோதமான மற்றும் மூர்க்கத்தனமான செயலை செய்திருப்பதாக வடகொரியா விமர்சித்துள்ளது.



வடகொரியாவின் சரக்குக் கப்பலொன்றை கைப்பற்றியதாக அமெரிக்கா அண்மையில் அறிவித்திருந்ததுடன் சர்வதேச தடைகளை மீறி சட்டவிரோதமாக நிலக்கரி எடுத்து சென்ற நிலையில் குறித்த சரக்கு கப்பல் கைப்பற்றப்பட்டதாக அமெரிக்க நீதித் துறை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (7)

## பாலகோட் தாக்குதல் எ

## அதிநவீன ஆயுத வாக

## குவித்த பாகிஸ்தான் இ

(இஸ்லாமாபாத்)

**பா**லகோட் விமானப்படைத் தாக்குதலை அ
பாகிஸ்தான் இராணுவம் அதி நவீன ஆயுத வா
துள்ளது என தகவல் வெளியாகியுள்ளது.

புல்வாமா தாக்குதலுக்கு பதிலடியாக இந்திய விமானப்படை விமானங்கள் பெப்ரவரி இறுதியில் பாகிஸ்தானின் பாலகோட் பகுதியில் பயங்கரவாத முகாம்களை குறிவைத்து தாக்குதல் நடத்தியது. இதில் பாகிஸ்தான் பயங்கரவாதிகளுக்கு பெரும் இழப்பு நேரிட்டதாக கூறப்பட்டது. ஆனால் பாகிஸ்தான் எங்களுக்கு எந்த ஒரு பாதிப்பும் கிடையாது என கூறிவருகிறது. இதற்கிடையே இந்திய விமானப்படை தாக்குதலை

## இரு கடல் விமானங்க

## நால்வர் பலி; இருவ



(ஜூனோ)

தென்கிழக்கு அலாஸ்காவில் சுற்றுலாப் பயணிகளுடன் பயணித்த இரு கடல் விமானங்கள் ஒன்றுட

## தரையிறங்கும் போது

## தலைகுப்புற கவிழ்ந்த

(லண்டன்)

இங்கிலாந்தில் நிலைதடுமாறிய விமானம் வீதியில் தலைகுப்புற கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. விமானம் விழுந்தபோது வீதியில் வாகனங்கள் ஏதும் வராததால் பெரிய அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது.

இங்கிலாந்தின் சவுத் வேல்ஸ் பிராந்தியத்தில் உள்ள மான்மவுத்ஷைர் நகரில் இருந்து, சிறிய ரக விமானம் ஒன்று புறப்பட்டுச் சென்றது.

இதில் ஒரு விமானியும் ஒரு பெண் உட்பட 2 பயணிகளும் இருந்தனர். விமானம் பறக்கத் தொடங்கிய சில நிமிடங்களில் அதன் இயந்திரத்தில் திடீர் கோளாறு ஏற்பட்டது. இதனால் தாழ்வாக பறந்த விமானம் மின் கம்பிகளின் மீது உரசியது.

இதையடுத்து, விமானத்தை அருகில் உள்ள இருவழி பாதையில் அவசரமாக தரையிறக்க விமானி முயற்சித்தார். ஆனால்



நிலைதடுமாறிய விமானம் வீதியில் தலைகுப்புற கவிழ்ந்தது.

இதற்கிடையில், அந்த வழியாக காரில் வந்த இராணுவ வெடிகுண்டு செயலிழப்புப் பிரிவின் முன்னாள் அதிகாரி ஜோயல் ஸ்நார் என்பவர் விமானம் விழுந்து கிடப்பதை கண்டு அதிர்ச்சியடைந்தார். இதையடுத்து, அவர் சற்றும் தாமதிக்காமல் விரைந்து செயற்பட்டு, விமானத்துக்குள் சிக்கி






ல் எதிரொலி

ாகனங்களை

் இராணுவம்

ல அடுத்து எல்லையில்
த வாகனங்களை குவித்

அடுத்து எல்லையில் பாகிஸ்தான் இராணுவம் இவ்வாறு அதிநவீன ஆயுத வாகனங்களை குவித்துள்ளதுடன் இராணுவ தளபாடங்களையும், இராணுவ வீரர்களையும் நிலை நிறுத்தியுள்ளது. (7)

கள் விபத்து!

ுவர் மாயம்



...னொன்று மோதி விபத்திற்குள்ளாகியுள்ளது.

விபத்தில் நால்வர் உயிரிழந்ததுடன், இருவர் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்திற்குள்ளான ஒரு விமானத்தில் 11 பயணிகளும், மற்றையதில் ஐந்து பேரும் பயணித்திருந்ததாகக் கூறப்படுகிறது.

பத்து பேர் விபத்தில் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், இது தொடர்பாக விசாரணை நடத்துவதற்கென வோஷிங்டனிலுள்ள தேசிய போக்குவரத்து சபையின் விசாரணை அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு விஜயம் செய்துள்ளனர். (7)

ாது வீதியில்

ந்த விமானம்



...யிருந்த 3 பேரையும் பாதுகாப்பாக மீட்டார். அவர்கள் மீட்கப்பட்ட சில நொடிகளில் விமானம் தீப்பற்றி எரிந்தது. இதில் விமானம் முற்றிலுமாக எரிந்து நாசமானது. ஜோயல் ஸ்நாரின் துரித நடவடிக்கையால் அவர்கள் 3 பேரும் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர். எனினும் படுகாயம் அடைந்த அவர்கள் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (7)

# மசூதி அருகே குண்டு வெடிப்பு 4 பொலிஸார் உடல் சிதறிப் பலி!





11 பேர் படுகாயம்

(கராச்சி)

பாகிஸ்தானில் உள்ள மசூதி அருகே ஏற்பட்ட குண்டு வெடிப்பில் சிக்கி 4 பொலிஸார் பரிதாபமாக பலியாகியுள்ளனர். மேலும் பலர் படுகாயம் அடைந்துள்ளனர்.

பாகிஸ்தானில் பலுசிஸ்தான் மாநிலம் தலைநகரான குவெட்டாவில் உள்ள சாட்டிலைட் நகரில் உள்ள தொழுகைக்காக கூடியிருந்த மசூதி அருகே நேற்று முன்தினம் இரவு சக்திவாய்ந்த குண்டு வெடித்தது. இதனால் அங்கு பதற்றமும் பரபரப்பும் ஏற்பட்டது. குண்டுவெடிப்பில் சுற்றியிருந்த கடைகள், கட்டடங்கள் சேதமடைந்தன.

இச்சம்பவத்தில் 4 பொலிஸார் உடல்சிதறி பலியாகினர். மேலும் 11 பேர் படுகாயம் அடைந்தனர்.

தகவலறிந்து இராணுவத்தினரும் பொலிஸாரும் சம்பவ இடத்திற்கு விரைந்தனர். படுகாயமடைந்தவர்களை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர். அவர்களுக்கு தீவிர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (7)

# எப்.21 விமானங்களை இந்தியா வாங்கினால் வேறு யாருக்கும் விற்பனை செய்ய் மாட்டோம்

(வோஷிங்டன்)

எப். 21 விமானங்களை இந்தியா வாங்கினால் வேறு யாருக்கும் விற்பனை செய்ய மாட்டோம் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்காவில் போர் விமானங்கள் தயாரிக்கும் நிறுவனமான லாக்ஹீட் மார்டின் நிறுவனம், புதியதாக வெளியாகியுள்ள எப்.21 ரக விமானத்தில் 114 விமானங்களை வாங்க இந்தியா ஒப்பந்தம் செய்து கொண்டால், நாங்கள் வேறு யாருக்கும் இவ் வகை விமானங்களை விற்பனை செய்ய மாட்டோம் எனக் கூறியுள்ளது.

இந்திய விமானப்படைக்கு 114 போர் விமானங்களை வாங்க இந்திய விமானப்படை டெண்டர் கோரியுள்ளது. 18 பில்லியன் டொலர் மதிப்பிலான இந்த ஒப்பந்தம் அண்மைய காலங்களில் மேற்கொள்ளப்படும் மிகவும் அதிகமான தொகையில் மேற்கொள்ளப்படுவதாகும். இந்த ஒப்பந்தத்தை வாங்க அமெரிக்கா, ரஷ்யா, ஐரோப்பிய நாடுகள் போட்டியிடுகின்றன.

போட்டியில் முன்வரிசையில் இருப்பது லாக்ஹீட் மார்டின் நிறுவனத்தின் எப்.21 விமானங்கள், போயிங் நிறுவனத்தின் F/A-18 விமானங்கள், பிரான்சின் டசால்ட் ஏவியேஷன்ஸ் நிறுவனத்தின் ரபேல், யூரோபைட்டர் டைப்பூன், ரஷ்யாவின் மிக் 35 மற்றும் சுவீடனின் சாப் 35 கிரிப்பன் விமானங்கள் உள்ளன. இந்நிலையில் புதிய அறிவிப்புடன் அமெரிக்காவின் லாக்ஹீட் மார்டின் நிறுவனம் முன்வந்துள்ளது. அதாவது இந்தியாவிற்கு விற்பனை செய்தால் அந்த தொழில்நுட்பத்தையும் விமானத்தையும் வேறு நாடுகளுக்கு விற்பனை செய்ய மாட்டோம் என்று கூறியுள்ளது.



அமெரிக்கா அறிவிப்பு

லாக்ஹீட் மார்டின் நிறுவனத்தின் வியாபார வியூக மற்றும் அபிவிருத்தி துறையின் துணைத் தலைவர் விவேக் லால் தெரிவிக்கையில், இந்தியாவில் 60 விமான நிலையங்களில் செயற்படும் வகையில் புதிய போர் விமானம் வடிவமைக்கப்பட்டுள்ளது. அதன் முக்கிய அம்சங்களில் உயர்தர இயந்திரம், மின்னணு போர் திறன் கட்டமைப்பு, ஆயுதங்களை ஏந்திச் செல்லும் திறன் ஆகியவை அடங்கும். இந்தியா எங்களிடம் வாங்க ஒப்பந்தம் செய்தால் விமானத்தின் கட்டமைப்பு மற்றும் தொழில்நுட்பத்தை உலகில் யாருக்கும் வழங்கமாட்டோம். இது இந்தியாவின் முக்கியத்துவம் மற்றும் இந்தியாவின் தனித்துவமான தேவையின் முக்கியத்துவத்தை காட்டுகிறது எனக் கூறியுள்ளார்.

மேலும் இந்தியா வாங்கினால் விலையும் குறைவாக கிடைக்கும் எனத் தெரிவித்துள்ளார். (7)

## மம்தா பானர்ஜி விவகாரம்

# பா.ஜ.க. நிர்வாகி மன்னிப்பு கேட்க வேண்டும்

## உயர் நீதிமன்றம் உத்தரவு

(சென்னை)

மேற்கு வங்காள மாநில முதலமைச்சர் மம்தா பானர்ஜியை விகாரமாக சித்திரிக்கும் ஒளிப்படத்தை வெளியிட்ட பா.ஜ.க நிர்வாகியான பிரியங்கா சர்மாவிற்கு உயர்நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.

அத்துடன் மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜியிடம் அவர் எழுத்துபூர்வமாக மன்னிப்புக் கேட்க வேண்டும் என்றும் உயர்நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

இது குறித்த விசாரணை நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற நிலையில், குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் இடம்பெற்ற மெட்காலா நிகழ்வில் ஹிந்தி நடிகை பிரியங்கா சோப்ரா அவரது கணவர் நிக் ஜோன்ஸுடன் கலந்து கொண்டார்.





இதன் போது எடுக்கப்பட்ட ஒளிப்படம் சமூக வலைத் தளங்களில் வைரலாகிய நிலையில், பலரால் விமர்சிக்கப் பட்டது.

அந்த ஒளிப்படத்தில் மம்தா பானர்ஜியின் முகத்தை பதிவேற்றம் செய்து பா.ஜ.க நிர்வாகியான பிரியங்கா சர்மா வெளியிட்டிருந்தார்.

இதனையடுத்து அவர் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (7)

# அமைச்சை துறப்பது தொடர்பில் எந்த முடிவும் எடுக்கவில்லை

## சம்பிக்க தெரிவிப்பு



(கொழும்பு)

**அரசாங்கத்தில் இருந்து வெளியேறவோ அல்லது அமைச்சைத் துறக்கவோ எந்த முடிவும் எடுக்கவில்லை என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.**

அமைச்சர் சம்பிக்க ரணவக்க அமைச்சர் பதவியை துறக்கவுள்ளதாகவும் புதிய அரசியல் பயணமொன்று உருவாக்கவுள்ளதாக சில தகவல்கள் வெளிவருகின்ற நிலையில் அது குறித்து அவரிடம் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் தெளிவுபடுத்துகையில்,

அரசாங்கத்தில் இருந்து வெளியேறவோ அல்லது அமைச்சை துறக்கவோ எந்த முடிவும் எடுக்கவில்லை. எனினும் சில விசேடமான திட்டங்களை வகுத்து அதற்கமைய ஒரு இயக்கமாக உருவாகும் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. தற்போது நாட்டின் நிலவிவரும் பாதுகாப்பு அச்சுறுத்தலான நிலையில் பயங்கரவாதமற்ற தேசத்தை கட்டியெழுப்ப வேண்டிய தேவையுள்ளது.

அதற்கான புதிய அமைப்பு ஒன்று உருவாக்க வேண்டியுள்ளது.

இது அரசியல் மாற்றத்தை உருவாக்க ஏற்படுத்தும் கூட்டணி அல்ல. பயங்கரவாதமற்ற நாட்டைக் கட்டியெழுப்ப அணி திரளும் அனைவருக்கும் தேசத்திற்கான வழி என்ற இந்த மக்கள் இயக்கத்தில் இணைந்துகொள்ள முடியும்.

அதேபோல் இந்த செயற்பாடுகளை தடுக்கும் அனைவரையும் அரசியலில் இருந்து ஓரங்கட்டும் நடவடிக்கையும் முன்னெடுப்போம் என மேலும் தெரிவித்தார். (7)

# அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் இராணுவத் தளபதியுடன் சந்திப்பு



(கொழும்பு)

புதிதாக நியமிக்கப்பட்ட இலங்கைக்கான அவுஸ்திரேலியா உயர்ஸ்தானிகர் டேவிட் ஹொலி நேற்று முன்தினம் இராணுவ தளபதியை அவரது பணிமனையில் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின் போது இலங்கை இராணுவ அதிகாரிகளுக்காக அவுஸ்திரேலியாவில் வழங்கப்படக்கூடிய பயிற்சிகள் மற்றும் பங்களிப்புகள் தொடர்பான சாத்தியக்கூறுகளை அடிப்படையாகக் கொண்ட விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

சகல பங்குதாரர்களுக்கும் சமுதாயத்தின் "தீவிரமயமாக்கலுக்கு" பயன்படுத்தப்படும் ஒரு பொறிமுறையை அமுல்படுத்துவது தொடர்பாகவும் இளைஞர்களை வன்முறை சுழற்சியில் இருந்து அகற்றுவதற்கான தேவையைச் சுட்டிக்காட்டியும், இலங்கைக்கு உதவ அவுஸ்திரேலியாவின் ஒத்துழைப்பை தருமாறு இராணுவத் தளபதி இச் சந்திப்பின் போது வலியுறுத்தினார்.



உயிர்த்த ஞாயிறு அன்று ஏற்பட்ட அசம்பாவிதத்திற்கு கவலை தெரிவித்ததோடு நாட்டின் பாதுகாப்பான வளர்ச்சிக்கு தனது ஒத்துழைப்பை வழங்குவதாகவும் உயர்ஸ்தானிகர் தெரிவித்தார்.

இச்சந்திப்பின் இறுதியில் இராணுவத் தளபதியால் உயர்ஸ்தானிகருக்கு நினைவுச் சின்னமும் பரிசாக வழங்கப்பட்டது. பின்னர் உயர்ஸ்தானிகரால் பிரமுகர்களின் வருகையை முன்னிட்டு கையொப்பமிடும் புத்தகத்திலும் கையொப்பமிடப்பட்டது. (7)

# இலங்கையில் முதன்முறையாக முடக்கப்பட்டது டுவிட்டர் தளம்

(கொழும்பு)

இலங்கையில் முதன்முறையாக சமூக வலைத்தளங்களில் ஒன்றான டுவிட்டர் நேற்று முதன்முறையாக தற்காலிகமாக முடக்கப்பட்டுள்ளது.

சமூக வலைத்தளங்களின் ஊடாக தவறான மற்றும் இனங்களுக்கு இடையில் முறுகலை ஏற்படுத்தும் வகையில் கருத்துக்களை பகிர்வதை தடுப்பதற்காகவே இவ்வாறு முடக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று முன்தினம் பேஸ்புக், வட்ஸ் அப், வைபர், ஐ.எம்.ஓ.,ஸ்னப்சட், இன்ஸ்டாகிராம்,யூடியூப் ஆகிய சமூக ஊடகங்களின் செயற்பாடுகளை மறு அறிவித்தல் வரை தொலைத்தொடர்புகளை ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு முடக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

# 164 மில்லியன் டொலரை வழங்க சர்வதேச நாணய நிதியம் இணக்கம்

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியமானது இலங்கைக்கு வழங்கத் தீர்மானித்திருந்த 5 ஆம் தவணைக் கடன் தொகையான 164 டொலர் மில்லியனை வழங்க குறித்த நிதியத்தின் நிறைவேற்று சபை அனுமதி வழங்கியுள்ளது.

2016 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 3 வருட வேலைத் திட்டத்தின் கீழ் சர்வதேச நாணய நிதியமானது 1.5 பில்லியன் டொலர்களை இலங்கைக்கு வழங்க இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

இதற்கமைய இந்த வேலைத் திட்டத்தின் இறுதித் தவணை கடன் தொகையானது கடந்த ஆண்டு நவம்பர் மாதம் வழங்க தீர்மானிக்கப்பட்ட போதும் நாட்டில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடி காரணமாக ஒரு வருடத்தால் அதன் கால எல்லை நீடிக்கப்பட்டது.

இந் நிலையில் நேற்று முன்தினம் கூடிய சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபையானது இலங்கைக்கு 164 மில்லியன் டொலர்களை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளது. (7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## வயிற்றிற்குள் ஒரு பயணம்

கடைத்தெரு பக்கத்தில் ஒரு கூட்டம். யாரோ வித்தை காட்டிக் கொண்டு இருக்கின்றார்கள் போல் இருக்கின்றது. நானும் போய் எட்டிப் பார்த்தேன். நினைத்தது சரி தான்.

ஒரு ஆள் பாம்பைப் பிடித்து முழுங்கிக் கொண்டிருந்தார். அந்த பாம்பு உயிரோடு வெளியே வந்து விட்டது. ஆச்சரியம் தான். அவருக்கு துணிச்சல் அதிகம். அந்த பாம்பிற்கும் துணிச்சல் அதிகம். மனிதன் உடம்பிற்குள்ளே இவ்வளவு தைரியமாக போய் வருகின்றதே! மனிதன் இதுபோன்ற வேலைகள் எல்லாம் சும்மா ஒரு வித்தைக்காக செய்து கொண்டு இருக்கின்றான்.

ஆனால் இயற்கை சில இடங்களில் இது போன்ற வித்தையை நிஜமாக செய்து கொண்டு இருக்கின்றது. சில நத்தைகள் உயிரோடு மீன் வயிற்றுக்குள் போய் மறுபடியும் உயிரோடு வெளியில் வந்து விடுகின்றது.

நண்டு-நத்தை-லாப்ஸ்டர் இதற்கெல்லாம் ஓடு உறுதியாக இருப்பது எதற்காக? எதிரிகள் கடித்தால் தப்பித்துக் கொள்வதற்காகத்தான்!

கடலில் இருக்கின்ற சில வகை மீன்கள் அப்படியே பிடித்து விழுங்கி விடும். அந்த நத்தைகள் எல்லாம் இயற்கை ஒரு வசதியைச் செய்து கொடுத்திருக்கும்.

அந்த நத்தை ஓடுகளில் ஒரு கதவு இருக்கும். இந்த கடல் நத்தை ஒரு மீன் வயிற்றுக்குள்ளே போய்விட்டது என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்தக் கதவு உடனே கெட்டியாக மூடிக் கொள்ளும். மீனின் ஜீரண நீர் தன் உடம்பில் படாமல் பார்த்துக் கொள்ளும். அது உடம்பில் பட்டால் கரைந்து விடும். உடம்பில் படவில்லை என்றால் ஒன்றும் ஆகாது.

அந்த நத்தை எந்த விதமான சேதமும் இல்லாமல் மீனுடைய ஜீரணப் பாதை வழியாக பயணம் செய்து சௌகரியமாக வெளியே வந்து விடும். ஆச்சரியமான இந்த விடயத்தை அமெரிக்க ஆராய்ச்சியாளர் ஒருவர் கண்டுபிடித்திருக்கின்றார்.

இயற்கை இது போன்று நத்தைக்கு மட்டும் தான் தப்பித்துப் போக உதவி செய்கின்றது என்று நினைக்கின்றீர்களா? இது தப்பித்துப் போக முடியாதவாறு சில வகை மீன்களுக்கும் உதவி செய்கின்றது. பிள்ளையையும் கிள்ளி விட்டு தொட்டிலையும் ஆட்டி விடுவது என்று சொல்லுவார்களே அது போன்று!

எல்லா வகை மீன்களாலும் நத்தையை விழுங்கி ஜீரணிக்க முடியாது. ஆனால் சில சின்ன வகை மீன்கள் மட்டும் நத்தையை விழுங்கி ஜீரணித்து விடுகின்றது. அது எப்படி முடியும் என்பது பல நாள் வரைக்கும் விஞ்ஞானிகளுக்கும் பெரிய அதிசயமாக இருந்தது. அதன் பிறகு தான் அந்த இரகசியம் என்ன என்பதனை கண்டு பிடித்தார்கள்.

இந்த வகை மீன்களெல்லாம் தாடை வலுவாக இருக்கும். விஷேடமாக பல் அமைப்பு இருக்காம். சிலவற்றுக்கு அலாதியான எலும்பு அமைப்பு இருக்கின்றது.

இந்த மீன்கள் எல்லாம் நத்தையை வாயில் போட்டு ஒரு அழுத்து அழுத்துகின்றது. நத்தை ஓட்டில் ஓட்டை விழுந்தது. அந்த துளை வழியாக மீன் வயிற்றில் உள்ள ஜீரண அமிலம் நத்தை உடம்பிற்கு போய் விடுகின்றது. அதன் பின் அவ்வளவு தான் நத்தை ஜீரணமாகி விடும்.

சில நத்தைகள் ஓட்டில் சரியாக விழுவதில்லை. அது எல்லாம் சேதமில்லாமல் தப்பித்து வெளியே வந்து விடும்! அதிர்ஷ்டசாலிகள் அதுகளிலும் உண்டு.

இப்படி மீன் வயிற்றுக்குள்ளேயும் நத்தைகள் போய் வருவதிலும் இன்னொரு சௌகரியமும் இருக்கின்றது. ஒரு நத்தையை ஒரு மீனோ அல்லது பறவையோ விழுங்கி விடுகின்றது என்று வைத்துக் கொள்ளுங்கள். அதன்பின் அந்த மீன் அல்லது பறவை மிகவும் தூரத்திற்கு பல மைல் தூரம் சுட தள்ளி போய்விடும்.

அங்கே போனதற்கு பின் நத்தை சௌகரியமாக வெளியே வந்து விடுகின்றது. புது இடத்தில் குடியேறி இனத்தை பெருக்க ஆரம்பித்தது.

செலவில்லாமல் டிக்கட் வாங்க வேண்டிய அவசியம் இல்லாமல் ஓசியிலே பிரயாணம் செய்ய விடுவதே இது ஒரு பெரிய விடயம் இல்லையா?

நத்தை அதுவாக நகர்ந்து போகின்றது என்றால் எந்தக் காலத்திலே போய்ச் சேருகின்றது!

மனிதர்களிலும் சில பேருக்கு சில problem உண்டு. எதைச் சாப்பிட்டாலும் சரியாக ஜீரணம் ஆவதில்லை. அவர்களைப் பொறுத்தவரைக்கும் எல்லாமே அந்த நத்தை போல் தான்.

அப்படிப்பட்ட ஒருவர் ஒரு டாக்டரைத் தேடிப்போனார்.

டாக்டர் எனக்கு எதுவும் ஜீரணமாகின்றதில்லை என்றார். டாக்டர் சிரித்து மாத்திரை மருந்தை கொடுத்து அனுப்பினார்.

மறுநாளும் அவர் டாக்டரை தேடி வந்து ஜீரணமாவதற்கு ஏதாவது மாத்திரை கொடுங்கள் என்றார்.

நேற்றுத் தான் கொடுத்தேன்! என்றார் டாக்டர்.

அப்படி இல்லை டாக்டர்! நேற்று நீங்கள் கொடுத்தது ஆகாரம் ஜீரணமாவதற்கு! இன்றைக்கு நான் கேட்பது நீங்கள் கொடுத்த மாத்திரை ஜீரணமாவதற்கு! என்றார் அந்த ஆள்!

# தனியாரின் காணிப் பிரச்சினைகளும் அவற்றைத் தீர்க்க எடுக்கவேண்டிய நடவடிக்கைகளும்

கலாநிதி க.தவலிங்கம், தவிசாளர் –எல்லை நிர்ணய ஆணைக்குழு
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

03



நில அளவையாளர் நீதிமன்றத்தின் கட்டளையை அமுல்படுத்துவதற்கான ஒரு அலுவலராக தொழிற்படுவதால் அவர் சுதந்திரமாகவும் நேர்மையாகவும் வெளிபடையாகவும், பக்கம் சாராமலும் பொறுப்புக் கூறக்கூடியவராகவும் நடக்க வேண்டும்.

நில அளவையாளர் படத்துடன் ஒரு அறிக்கையும் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும். நில அள்வையாளர் நீதிமன்றத்தின் கட்டளையை அமுல்படுத்துவதற்கான ஒரு அலுவலராக தொழிற்படுவதால் அவர் சுதந்திரமாகவும் நேர்மையாகவும் வெளிப்படையாகவும் பக்கம் சாராமலும் பொறுப்புக் கூறக்கூடியவராகவும் நடக்கவேண்டும்.

● காணி சம்பந்தமான "P" வழக்குகளின் நில அளவையும் படம் வரைதலும்.

நில அளவையாளருக்கு மிக முக்கியத்துவமுள்ள ஓரிடம் பிரிவிடுதல் சட்டம் (**Partition law**) 1977,இன் இலக்கம் 21- இன் கீழ் கொடுக்கப்பட்டுள்ளது. இச் சட்டம் 1981 ஆம் ஆண்டின் இல.5, 1987 ஆம் ஆண்டின் இல.6, 1987 ஆம் ஆண்டின் இல.32, 1997 ஆம் ஆண்டின் இல.17 ஆகிய சட்டங்களின் மூலம் திருத்தம் செய்யப்பட்டது.

● பிரிவிடுதல் சட்டம் (**Partition law**) என்றால் என்ன?

முதலில் பிரிவிடுதல் சட்டம் (Partition law) என்றால்என்ன என சுருக்கமாகப் பார்ப்போம். இலங்கைச் சட்டத்தின்படி, ஒருவர் மரணசாதனம் எழுதாது இறப்பாரானால் அவரது சகல ஆதனங்களினதும் பங்கு உரிமையை அவரது சட்டபூர்வமான உரித்தாளர்கள் பெறுவர். மரண சாதனம் மூலமும் ஓர் ஆதனத்தின் உரிமையை இரண்டோ அல்லது பலருக்கோ அளிக்கலாம். இப்பேற்பட்ட ஆதனத்தின் சொந்தக்காரர்கள் "சொரியற் பங்காளர்கள்" என்றழைக்கப்படுவர். இதே போன்று இருவரோ அல்லது பலரோ ஒன்றுசேர்ந்து ஓராதனத்தை விலைக்கு வாங்கினாரானால் அவர்கள் அவ் ஆதனத்தின் சொரியற் பங்காளர்களாகின்றனர்.

ஒருவர் மரணசாதனம் எழுதாது இறப்பாரானால், அவரது சகல ஆதனங்களினதும் பங்கு உரிமைகளை அவரது சட்டபூர்வமான உரித்தாளர்கள் பெறுவர். மரணசாதனம் மூலமும் ஓர் ஆதனத்தின் உரிமையை இரண்டோ அல்லது பலருக்கோ அளிக்கலாம். இப்பேற்பட்ட ஆதனத்தின் சொந்தக்காரர்கள் "சொரியற் பங்காளர்கள்" என்றழைக்கப்படுவர்.

சொரியற் பங்காளர்கள் ஒற்றுமையாக இருக்காவிட்டால் அவர்களுக்கிடையில் ஆதனத்தின் பயன், ஆட்சி சம்பந்தமான பிணக்குகள் எழும். அப்பொழுது கூட்டுரித்துடைமை முறிய வேண்டிய நிலையேற்படும். சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுத்து அவர்கள் தமக்குரிய கூட்டுரித்துடைமையை அழிக்கலாம். அவர்கள் தமக்குரிய காணித்துண்டைப் பிரித்துக் காட்டும் காணிப் படமொன்றை நில அளவையாளரைக் கொண்டு தயாரித்து அப்பிரிவுகளுக்குச் சம்மதம் தெரிவித்துக் கையொப்பமிடல் வேண்டும். அதன்பின்பு தத்தமக்குரிய காணித்துண்டுகளை ஆளலாம்.

அப்படிப் பத்து ஆண்டுகள் ஆண்ட பின்பு (ஆட்சியுரிமைச் சட்டத்தின்படி) ஒவ்வொருவரும் தனித்தனியான காணித் துண்டுகளின் ஆட்சியுரிமையுடையவராகின்றனர். கூட்டுரித்துடைமையை மிகக்குறைந்த செலவுடன் அழித்தலே இச்செய்கையின் அனுகூலமாகும். ஆனால் இம் முறையின் பாரதூரமான தடை என்னவென்றால் 10 வருடங்கள் முடியும்வரை கூட்டுரித்துடைமை அறவே அழியாது. இப்,பத்து வருடகாலத்துள் சொரியற் பங்காளிகளுளொருவர் தான் செய்துகொண்ட ஒப்பந்தத்தை வாபஸ் வாங்கக்கூடும். அப்படியானால் நிலைமை பழையபடியாகிவிடும்.

கூட்டுரித்துடைமையை முறிக்கும் அடுத்த வழி, கூட்டுரித்துடையவர்கள் ஒத்த குறுக்கு மாற்றமாகும். அதாவது காணித் துண்டைப் பிரித்துக்காட்டும் படமொன்று வரையப்பட்ட பின்பு ஓர் உறுதி எழுதப்படும். அதன்படி ஒரு துண்டின் சொரியற் பங்காளர்கள் தமது அத்துண்டில் உள்ள அக்கறையை அத்துண்டைப் பெறும் கூட்டுடைமையாளருக்கு கையளிப்பார்கள். இப்படியே எல்லாத் துண்டுகள் குறித்தும் செய்யப்படும். இவ்வித காணிப் பிரிவினை, உறுதியில் ஒப்பமிட்டதும் இறுதியாகின்றது. இம் முறை முன் குறிப்பிட்டதிலும் பார்க்கக் கூடிய செலவுடையதென்றாலும் உறுதி முடித்த கையுடன் பிரிவினை இறுதியாகின்றது என்னும் அனுகூலத்தையுடையதாகும்.

இவ்விரு முறைகளும் சொரியற் பங்காளர்கள் சிநேகமாக இருந்து, பிரிவுகளுக்குச் சம்மதித்தால் மட்டுமே கைக்கொள்ளப்படலாம். இவை பொது "நல்லிணக்கப் பிரிவினை" என அழைக்கப்படும்.

"குடும்ப இணக்கம்" அல்லது "குடும்ப ஒழுங்கு" என்றழைக்கப்படும் இன்னொரு முறையும் உள்ளது. ஒரு குடும்ப அங்கத்தவர்கள் குடும்ப ஆதனத்தை இணங்கிப் பிரிக்கும்போது இம் முறை கையாளப்படும். உதாரணமாக ஒருவர் மற்ற ஆதனங்களிலுள்ள தமது அக்கறையை விலக்கிவிட்டு ஓர் ஆதனத்தின் உரிமையைப் பெறுவர். இப்படியே ஒவ்வொருவரும் செய்து குடும்ப ஆதனங்கள் பிரிவிடப்படும். பல ஆதனங்களுக்கு கூட்டுரிமையைப் பெற்றவர்களுக்கிடையேயே இவ்வொழுங்கு முறை நிகழ்கின்றது.

சொரியற் பங்குகளுள்ள ஓர் ஆதனத்தை பிரித்துக் கூட்டுரிமையை அழிக்கும் மிகப் பொதுவழி பிரிவிடுதல் வழக்காகும் (**Partition Case**). இது பூதல் வழக்கு என்றும் பாகப்பிரிவினை வழக்கு என்றும் சிலரால் அழைக்கப்படுகிறது.

சொரியற் பங்காளர்கள் சிநேகமாக இருந்து, பிரிவிடல் செய்வது "நல்லிணக்கப் பிரிவினை" என அழைக்கப்படும்.

குடும்ப இணக்கம்" அல்லது "குடும்ப ஒழுங்கு" என்றழைக்கப்படும் இன்னொரு முறையும் உள்ளது. ஒரு குடும்ப அங்கத்தவர்கள் குடும்ப ஆதனங்களை இணங்கிப் பிரிக்கும்போது இம் முறை கையாளப்படும். இம் முறை பொதுவாக பல ஆதனங்கள் சொரியற் பங்குகளாக இருக்கும் போது கையாளப்படும்.

சொரியற் பங்குகளுள்ள ஓர் ஆதனத்தை பிரித்துக் கூட்டுரிமையை அழிக்கும் மிகப் பொதுவழி பிரிவிடுதல் வழக்காகும் (**Partition Case**). இது பூதல் வழக்கு என்றும் பாகப்பிரிவினை வழக்கு என்றும் சிலரால் அழைக்கப்படுகிறது.

ஆரம்ப காலத்தில் பிரிவிடல் வழக்கைத் தாக்கல் செய்பவர் தனது பங்குக்காணியில் உடைமை செய்து கொண்டு இருக்கவேண்டும் என்று கூறப்பட்டது. ஆனால் சிஞ்சி எதிர் விஜயகுணசேகர என்ற வழக்கில் உயர் நீதிமன்ற மூன்று நீதியரசர்கள் மேற்படி உடைமை தேவைதானா என்று ஆராய்ந்து பின்வருமாறு கூறினர். ஆதனச்சட்டப்படி பொதுக் காணியிலோ அல்லது தனிப்பட்ட காணியிலோ உரித்துள்ளவர் அக்காணியை உடைமையையும் செய்கிறார் என்று சட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதால் காணியில் உரித்துள்ள ஒருவர் உடைமையில் இல்லாவிட்டாலும் பிரிவிடல் வழக்கை தாக்கல் செய்யலாம் எனத் தீர்ப்பளித்தனர். பங்குதாரர் ஒருவர் ஏனைய பங்குத்தாரரை புறந்தள்ளிவிட்டு பிரிவிடல் வழக்கைத் தாக்கல் செய்துவிட்டு வெற்றி பெறுவது கஷ்டம்.

ஏனெனில் பிரிவிடல் வழக்கின் இறுதி முடிவு பங்குதாரர் அனைவரும் வழக்கில் பங்கு பற்றினார்களா? அவர்களது பங்குகளைப் பெற்றுக் கொண்டார்களா? என்பதிலேயே தங்கியுள்ளது.

வழக்கை தாக்கல் செய்யும் வழக்காளி அக்காணியில் பங்குள்ள அனைவரையும் கட்சிக்காரராக சேர்க்கவேண்டும். அவரது அறிவுக்கு எட்டியவர்களையே கட்சிக்காரராக்க வேண்டும். ஏனெனில், கிராமப்புறங்களில் பலர் தமக்கும் அக்காணியில் வழியுரிமையில் பங்குண்டு என்று கூறுவது வழக்கம். எல்லோரையும் சேர்க்கத்தேவையில்லை. அவ்வாறு தமக்கும் பங்குண்டு என்று கூறுபவர்கள் அவர்களாகவே நீதிமன்றத்திற்கு வந்து தம்மையும் சேர்க்கவேண்டும் என்று கேட்க சட்டத்தில் இடமுண்டு. மற்றும் நில அளவையாளர் ஆரம்ப நில அளவையை செய்யும் பொழுது பங்குக்காரர் அவரிடம் சென்று தமக்கும் பங்குண்டு என்று கூறவும் அவ்வாறு கூறினால் நில அளவையாளர் அவர்களின் விபரங்களை தனது அறிக்கையில் குறிப்பிட்டு நீதிமன்றத்திற்கு அறிவிக்கவேண்டும் என்றும் சட்டம் கூறுகிறது.

மேலும் வழக்கின் எதிராளிகள் தமக்குத் தெரிந்தவரையில் யார்யார் சேர்க்கப்படல் வேண்டும் என்று நீதிமன்றத்திற்கு கூறலாம். மேலும் நீதிமன்றமே கட்சிக்காரரின் உறுதிகளை படித்துவிட்டு பங்குள்ள யாராவது விடுபட்டு இருந்தால் அவர்களை வழக்கில் சேர்க்குமாறு வழக்காளிக்குக் கட்டளையிட சட்டத்தில் இடமுண்டு. ஆகவே, இத்தகைய பல வழிகளில் உண்மையான பங்குதாரர்கள் வழக்கில் பங்குபற்ற இடமிருப்பதால் வழக்காளியே சகலரையும் கட்சிக்காரராக்க வேண்டுமென்று பிரிவிடல் சட்டம் எதிர்பாக்கவில்லை, தான் அறிந்தவரை பங்குதாரர்களைச் சேர்த்தால் போதுமானது.

பிரிவிடல் வழக்கின் எதிராளிகள் தமக்குத் தெரிந்த வரையில் பங்காளிகளாக யார் யாரை வழக்கில் சேர்க்கப்பட வேண்டும் என்று நீதிமன்றத்திற்கு கூறலாம். மேலும் நீதிமன்றமே கட்சிக்காரரின் உறுதிகளை படித்துவிட்டு பங்குள்ள யாராவது விடுபட்டு இருந்தால் அவர்களை வழக்கில் சேர்க்குமாறு வழக்காளிக்குக் கட்டளையிடவும் சட்டத்தில் இடமுண்டு.

மிக முக்கியமான இன்னும் ஒரு அம்சம் என்னவெனில் பிரிவிடல் செய்யவிருக்கும் ஒரு காணியின் சிறியதொரு பகுதியை மட்டும் பிரிவிடல் செய்யுமாறு கோர முடியாது பிரிவிடல் செய்ததன் பின்னர் மேலும் காணி மிகுதி இருக்க முடியாது என சட்டம் கூறுகின்றது.

பிரிவிடல் வழக்கின் 12(1) ஆம் பிரிவின் படி வழக்கைத் தாக்கல் செய்பவரின் சட்டத்தரணி கட்டாயமாக அக்காணி அமைந்துள்ள மாவட்ட காணிப் பதிவுக்காரியாலயத்திற்குச் சென்று அங்குள்ள காணிப்பதிவுப் புத்தகத்தைப் பார்த்து பிரிவிடல் வழக்கில் சம்பந்தப்பட வேண்டியவர்களின் பெயர்களையும் விலாசத்தையும் நீதிமன்றத்திற்கு அறிவிக்க வேண்டும். இது கட்டாயம் செய்யப்பட வேண்டும்.

பிரிவிடல் வழக்கு ஒரு விசேட பார்வைகொண்டது. வழக்காளி எதிராளியாகவும் எதிராளி வழக்காளியாகவும் மாறி வழக்கை கொண்டு நடத்த இச் சட்டம் இடம் அளிக்கிறது. அதாவது எதிராளி வழக்காளி என்ற வேறுபாடு பிரிவிடல் வழக்கில் இல்லை. வழக்காளி வழக்கை தொடர்ந்து நடத்த முடியாமல் இருந்தால் நீதிமன்றம் வழக்கை தள்ளுபடி செய்ய முடியாது. அதற்கு மாறாக, எதிராளிகளில் ஒருவரை 'வழக்கை ஏற்று மேற்கொண்டு செல்லுமாறு கட்டளையிடலாம். மேலும், ஒருமுறை தள்ளுபடி செய்யப்பட்ட வழக்கு முடிவுற்ற வழக்கு (**Resjudicata**) என்ற தத்துவத்தின் கீழ் வழக்குடைய சந்தர்ப்பம் பிரிவிடல் வழக்கிற்கில்லை.

மிக முக்கியமான இன்னும் ஒரு அம்சம் என்னவெனில் பிரிவிடல் செய்யவிருக்கும் ஒரு காணியின் சிறியதொரு பகுதியை மட்டும் பிரிவிடல் செய்யுமாறு கோர முடியாது. பிரிவிடல் செய்ததன் பின்னர் மேலும் காணி மிகுதி இருக்க முடியாது என சட்டம் கூறுகின்றது.


பிரிவிடல் வழக்கு ஒரு விசேட பார்வை கொண்டது. வழக்காளி எதிராளியாகவும் எதிராளி வழக்காளியாகவும் மாறி வழக்கை கொண்டு நடத்த இச் சட்டம் இடம் அளிக்கிறது. அதாவது எதிராளி வழக்காளி என்ற வேறுபாடு பிரிவிடல் வழக்கில் இல்லை.

இவ் வழக்கின்போது நில அளவையாளர் மிக முக்கியமான பங்காற்றும்படி அழைக்கப்படுவார். ஒரு பிரிவிடுதல் வழக்கின்போது காணி இருமுறை அளக்கப்படுகின்றது. அவை பூர்வாங்க அளவை அல்லது தொடக்க அளவை (**Preliminary Survey**) மற்றும் இறுதி அளவை (**Final Survey**) எனப்படும். பூர்வாங்க அளவையின் அடிப்படைக்காரணம் அவ்வாதனத்தின் அயலிலுள்ள மக்களுக்கு அக்காணி பிரிவினை வழக்கு நடைமுறைகளுக்கு உட்பட்டது என்று தெரியப்படுத்துதலாகும். அப்பொழுதுதான் அவர்களுக்கு உரிமைகள் ஏதுமிருப்பின் அவற்றைத் தெரியப்படுத்த வாய்ப்பு ஏற்படும்.

ஒருவரால் வழக்குத் தொடரப்பட்டு, வாதி காணிப்பிரிப்புச் சம்பந்தமாக ஓராணையை (**Commission**) வழங்கும்படி நீதிமன்றத்திற்கு மனுச்செய்து ஆணையாளருக்குரிய (அதாவது அளக்கப்போகும் நில அளவையாளருக்குரிய) செலவுகளை வைப்புப்பணமாகக் கட்டியபின்பு ஆணை வழங்கப்படும். இவ்வாணையின் கீழ் செய்யப்படும் நில அளவை நீதிமன்ற அளவை (**COURT COMMISSION SURVEY**) எனப்படும்.

பிரிவிடுதல் சட்டத்தின் (**Partition law**) பிரிவுகள் 8உம் 9உம், பூர்வாங்க அளவைக்குரிய மதிப்பிடப்பட்ட செலவு தொகைகள் உரிய திகதியிலோ அல்லது அதற்கு முன்போ கட்டுப்படாவிட்டால் வழக்கு நிராகரிக்கப்படும் எனக் கூறுகின்றது. மேலும் பூர்வாங்க அளவைக்குரிய மதிப்பிடப்பட்ட செலவுகளை வைப்புப்பணமாகக் கட்ட வேண்டுமென்பது, பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை அனுப்ப முன்பு செயலாற்ற வேண்டிய நிபந்தனைகளுள் ஒன்றாகும். பூர்வாங்க அளவைக்குரிய மதிப்பிடப்பட்ட செலவுத்தொகைகள் கட்டப்பட்டு மற்ற நடைமுறை ஒழுங்குகளில் இணக்கமேற்பட்டதும் நீதிமன்றம் அழைப்பாணைகளை அனுப்பும்படி ஆணையிடும். அழைப்பாணைகள் அனுப்பப்படும்போதே நில அளவையாளருக்கும் தொடக்க அளவையை நிறைவேற்றும்படி ஆணை அனுப்பப்படும். அவருக்கு இவ்வாணையுடன் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் பிரதியும் அனுப்பப்படும். அளவிடுதலுக்கு ஏற்பட்ட சரியான செலவுத்தொகை பிரிவிடுதல் சட்டத்தின் பிரிவு 10 இன் படி அறவிடப்படும்.

(தொடரும்...)



**வடமேல் மாகாணத்தில் பல பகுதிகளில் நேற்று முன்தினம் சில குழுக்களால் பொதுமக்களின் சொத்துக்கள் சேதமாக்கப்பட்டுள்ளன. இவ் வன்முறை செயல்களால் நாடு முழுவதும் பதற்றமான சூழல் நிலவியுள்ளது.**

## மோ.சைக்கிள்-ஹன்டர் விபத்து; காயமடைந்த நபர் உயிரிழப்பு!

(கடவத்த)

கடவத்த பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கடவத்த - ராகம வீதியில் பயணித்த ஹன்டர் ரக வாகனம் ஒன்றை மோட்டார் சைக்கிள் ஒன்று முந்திச் செல்ல முற்பட்ட போது இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த மோட்டார் சைக்கிள் சறுக்கிச் சென்று ஹன்டருடன் மோதியதில் குறித்த விபத்து சம்பவித்துள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த விபத்தில் படுகாயமடைந்த நபர் ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் ஹன்டர் வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் கடவத்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (7)

## அரசாங்கம் இனவாதத்துடன் விளையாடுவதை அரசியல் சக்தியாக மாற்றிக் கொண்டுள்ளது

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கம் இனவாதத்துடன் விளையாடுவதை தனது அரசியல் சக்தியாக மாற்றிக் கொண்டுள்ளது என முன்னிலை சோசலிசக் கட்சியின் பிரசார செயலாளர் துமிந்த நாகமுவ தெரிவித்துள்ளார்.

அடிப்படைவாதம், ஏகாதிபத்தியம் மற்றும் அரச அடக்குறை என்ற தலைப்பில் கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



இனவாதத்தைத் தூண்டி வாக்குகளைப் பெற்றுக்கொள்வது தற்போது ஆட்சியாளர்களின் நடைமுறையாக உள்ளதுடன் ஒரு கெட்டதை நிறுத்த மற்றுமொரு கெட்டதைக் கொண்டு வருவது தற்போதைய அரசியல் நிகழ்ச்சி நிரலாக மாறியுள்ளது எனத் தெரிவித்தார்.

உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கு அமைய அனைத்து அரசியல் செயற்பாடுகளும் பயங்கரவாதச் செயலாகக் கருதி செயற்பட அரசாங்கத்திற்கு முடியும் எனவும் துமிந்த நாகமுவ மேலும் தெரிவித்தார். (7)

## விபத்தில் ஒருவர் பலி

கிரிஉல்ல பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் ஒருவர் படுகாயங்களுக்கு ள்ளாகியுள்ளார். இவ் விபத்து சம்பவம் நேற்று இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கிரிஉல்ல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட களனியமுல்ல - கிரிஉல்ல வீதியில் கிரிஉல்ல நோக்கி இருவருடன் சென்ற மோட்டார் சைக்கிள் முன்னால் சென்ற ஆட்டோவை முந்திச் செல்ல முற்பட்ட போது எதிர்த்திசையில் வந்த டிப்பர் வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. இதன்போது படுகாயங்களுக்குள்ளான மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் நம்பதெனிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் ஒருவர் உயிரிழந்துள்ளார். (7)

## சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபட்ட 14 பேர் கைது

(திருமலை)

திருகோணமலை பகுதியில் சட்டவிரோதமான மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட 14 சந்தேகநபர்களை நேற்று கைது செய்ததாக கடற்படையினர் தெரிவித்தனர். கடற்படையினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது, 14 பேரும் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது 3 டிங்கி படகு, இயந்திரம், 3 டகிஸ் பொருத்தப்படும் எரிபொருள் இயந்திரம், 4 சட்டவிரோதமான மீன்பிடி வலைகள், சட்டவிரோதமாக பிடிக்கப்பட்ட 85 கிலோ மீன்கள் என்பன கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன. மேற்படி கைப்பற்றப்பட்டவை மேலதிக விசாரணைக்காக திருகோணமலை உதவி மீன்பிடி பணிப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (7)





## இலங்கையில் புகைத்தலால் வாரத்திற்கு 400பேர் மரணம்

### ராஜித தகவல்

(கொழும்பு)

இலங்கையில் புகைத்தலினால் வாரமொன்றுக்கு சுமார் 400 பேர் உயிரிழப்பதாக சுகாதார அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். இவர்களில் பெரும்பாலானோர் குறைந்த வருமானம் பெறுபவர்களாவர்.

தற்பொழுது புகைத்தலினால் உயிரிழப்போரின் எண்ணிக்கை வாகன விபத்து, தற்கொலை, எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டு இறப்போரின் எண்ணிக்கையிலும் பார்க்க கூடுதலானதாகும் எனவும் சிகரெட்டுகளுக்காக உலகில் ஆகக்கூடுதலான வரிசை



அறவிடும் நாடு இலங்கையாகும் எனவும் தெரிவித்தார்.

புகைத்தலால் உயிரிழக்கும் மற்றும் நோய்களுக்கு உள்ளாகும் நபர்களுக்காக சுமார் 300 பில்லியன் ரூபாய் வருடாந்தம் செலவிடப்படுகின்றது என மேலும் தெரிவித்தார். (7)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

இவர்களின் கீழே மேற்படி 10 முக்கிய பிரிவுகளும் அரசாங்க சபையின் ஆதரவுடன் அலுவல்க்ளைக் கவனிக்க ஒழுங்குகள் செய்யப்பட்டன.

மேலும் பொதுச்சேவைப் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கும் அவர்களுக்குப் பதவியுயர்வு அளிப்பதற்குமென சுதந்திரமானதும் நிரந்தரமுமானதொரு பொதுச்சேவை ஆணைக்குழுவும் டொனமூர் அரசியல் திட்டத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டது.

டொனமூர் அரசியல் திட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட அரசாங்க சபைச்சட்டம், நிர்வாகம் ஆகிய இரு கடமைகளையும் நிறைவேற்றுவதற்காக அமைக்கப்பட்டது.

இச்சபை 61 அங்கத்தவரைக் கொண்டிருந்தது. இவர்களுள் 50 அங்கத்தவர் சர்வஜன வாக்குரிமை மூலம் பிரதேச அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட தேர்தல் தொகுதிகளிலிருந்து தெரிவு செய்யப்பட்டனர்.

8 பேர் சிறுபான்மையோரின் நல உரிமைகளைப் பாதுகாப்பதற்காகத் தேசாதிபதியால் நியமிக்கப்பட்டனர். இவர்களுள் 4 ஐரோப்பியர், 2 பறங்கியர், ஒரு மலேயர், ஒரு இந்திய வர்த்தக வகுப்பைச் சேர்ந்தவர் அடங்குவர்.

இவர்களோடு பிரதம காரியதரிசி, சட்டத்துறைக் காரியதரிசி, நிதிக் காரியதரிசி ஆகிய மூவரும் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

இந்த மூன்று காரியதரிசிகளுக்கும் ஏனைய 58 உறுப்பினர்களைப் போன்று அரசாங்க சபையில் வாக்களிக்கும் உரிமை இருக்கவில்லை. ஆனால் ஆலோசனை கூறுவதற்கு உரிமை வழங்கப்பட்டிருந்தது.

1924 ஆம் ஆண்டு அரசியல் திட்டத்தின் கீழ் வாக்களிக்கத் தகுதியானோர் தொகை 2,04,996 ஆகவிருந்தது. புதிய அரசியல் திட்டத்தின்கீழ் இத்தொகை 18,50,000 ஆக அதிகரித்தது.

வாக்காளர் 50 தேர்தல் தொகுதிகளிலிருந்து அங்கத்தவரைத் தெரிவு செய்தனர். அத்தொகுதிகள் பின்வருமாறு பிரிக்கப்பட்டிருந்தன.

மேற்கு மாகாணம்-14, மத்திய மாகாணம்-8, தெற்கு மாகாணம்-7, வடமாகாணம்-4, கிழக்கு மாகாணம்-2, வடமேல் மாகாணம்-6, வடமத்தி மாகாணம்-1, ஊவா மாகாணம்-3, சப்ரகமுவ மாகாணம்-5 என மொத்தமாக 50 பிரிவுகள்.




ஹன்டி பேரின்பநாயகம்

## பிரித்தானியர் அதிகாரமும் தமிழரின் ஆட்சியுரிமை நிராகரிப்பும் (கி.பி. 1833-கி.பி. 1948)

மேற்கூறப்பட்ட 50 தொகுதிகளிலிருந்து 50 பிரதிநிதிகள் மக்களால் தெரிவு செய்யப்படுவதற்கான விதிமுறைகளை டொனமூர் அரசியல் திட்டம் கொண்டிருந்தது.

1931 ஆம் ஆண்டு 50 தொகுதிகளுக்கான தேர்தலில் 38 சிங்களப் பிரதிநிதிகளும் 3 தமிழ்ப் பிரதிநிதிகளும் 2 பிரித்தானியர், 2 இந்தியத் தமிழர், 1 முஸ்லிம் எனப் பிரதிநிதிகள் மக்களால் தெரிவு செய்யப்பட்டனர்.

வடமாகாணத்திற்கு 7 பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டிருந்தும் 1931 ஆம் ஆண்டுத் தேர்தல் பகிஷ்கரிக்கப்பட்டதன் விளைவாக தமிழர் பிரதிநிதித்துவம் 4 ஆகக் குறைந்தது.

ஆனால் வடமாகாணத் தமிழரால் ஹன்டி பேரின்பநாயகத்தைத் தலைவராகக் கொண்ட யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் (Jaffna Youth Congress) தேர்தலைப் பகிஷ்கரித்தமை தவறானது என்றும் வடமாகாணத் தேர்தலை மீண்டும் நடத்தும்படியும் 4500 தமிழ் மக்கள் கையெழுத்திட்ட மனு ஒன்று 14 ஜூலை 1932 இலும் பின்னர் 13 மார்ச் 1933 இலும் அனுப்பி வைக்கப்பட்டன.

தமிழரின் கோரிக்கையை ஏற்று தேசாதிபதி வடமாகாணத்திற்கான 4 தேர்தல் தொகுதிகளில் 1934 ஆம் ஆண்டு தேர்தல் நடத்த அனுமதித்ததன் பேரில் 4 பிரதிநிதிகள் அரசசபைக்குத் தெரிவு செய்யப்பட்டனர்.

அரசாங்க சபைக்கான இரண்டாவது தேர்தல் மார்ச் 1936 ஆம் ஆண்டில் நடைபெற்றது.

இத்தேர்தலில் 38 சிங்களப் பிரதிநிதிகளும் 7 தமிழ்ப் பிரதிநிதிகளும் 2 இந்தியத் தமிழ்ப் பிரதிநிதிகளும் 2 ஐரோப்பிய பிரதிநிதிகளும் ஒரு முஸ்லிம் பிரதிநிதியுமாக 50 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

1931 ஆம் ஆண்டு டொனமூர் அரசியல் சீர்திருத்தம் அமுலுக்கு வந்த காலத்தில் சிங்கள அரசியல் பிரதிநிதிகளுக்கும் தமிழ் அரசியல் பிரதிநிதிகளுக்குமிடையில் இப்புதிய அரசியல் திட்டம் குறித்துப் பல்வேறுபட்ட பிரச்சினைகளும் கருத்து முரண்பாடுகளும் இனக்குமுறல்களும் பிளவுகளும் எழுச்சி பெறத் தொடங்கின.

இந்நிலைமைக்கு டொனமூர் அரசியல் சீர்திருத்தமே வழிகோலியது என்று கொள்ளமுடிகிறது. அத்தோடு தமிழரின் அரசியல் எதிர்காலம் அல்லது அவர்களுடைய அரசியல் அந்தஸ்து எவ்வாறு டொனமூர் அரசியல் சீர்திருத்தத்தின் விளைவாகச் சீர்குலைந்தது என்று ஆராய்வது இச்சந்தர்ப்பத்தில் அவசியமாகின்றது.

சட்ட நிருபண சபையில் அங்கத்துவம் வகித்த சிங்களப் பிரதிநிதிகளில் பெரும்பான்மையானோர் இனவாரிப் பிரதிநிதித்துவம் நீக்கப்பட்டு பிரதேசவாரிப் பிரதிநிதித்து வம் நடைமுறைப்படுத்த வேண்டுமெனத் தேசாதிபதியிடத்தும் பிரித்தானிய அரசிடத்தும் கோரிக்கைகளை முன் வைத்தனர்.

இவ்வாறு பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம் அமுலுக்கு வந்தால் சபையில் சிங்களப் பிரதிநிதிகள் பெரும்பான்மைப் பலம் பெறுவார்கள் என்பது அவர்களுக்கு நன்கு தெரிந்திருந்தது.

அதேவேளை சர்வஜன வாக்குரிமையின் அறிமுகத்தின் விளைவாக ஏற்படக்கூடிய நிரந்தர சிங்கள ஆதிக்கத்தையிட்டும் அதனால் சிறுபான் மையினரின் நலன்களுக்கு நிகழக்கூடிய பாதகத்தையிட்டும் தமிழ்த் தலைவர்கள் மிகவும் அச்சமும் பதற்றமும் அடைந்திருந்தனர்.

பிரதேசவாரியான பிரதிநிதித்துவத்தை ஆதரிக்கும் டொனமூர் அறிக்கையின் மேல் அவர்கள் கசப்பும் விரோதமும் கொண்டிருந்தனர்.

(தொடரும்)

# நாட்டில் இனவாதக்கலவரங்களை ஏற்படுத்த முயல்வது பயங்கரவாதிகளின் நோக்கத்தை நிறைவேற்ற வழிவகுக்கும்

## அமைச்சர் சஜித் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

**நாட்டில் இனவாத மற்றும் மதவாத கலவரங்களை இச்சந்தர்ப்பத்தில் ஏற்படுத்துவதன் மூலம் நாட்டை அழிக்கும் ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகளின நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ள வழிவகுக்குமென அமைச்சர் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டியுள்ளார்.**

நேற்று முன்தினம் 700 இலட்சம் ரூபா செலவில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் திஸ்ஸமாராம வீரவில இளைஞர் மத்திய நிலையத்திற்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்கொலைத் தாக்குதலை மேற்கொண்ட ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகளின் நோக்கம் தமது ஏனைய நாடுகளின் தமது ஷரியா சட்டத்துடன் கூடிய பிராந்தியங்களை அமைத்து கெலிபெட் இராச்சியம் ஒன்றை உருவாக்குவதாகும் என அமைச்சர் தெரிவித்தார்.

பயங்கரவாதிகள் தமது நோக்கங்களை தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை மேற்கொள்வதால் மாத்திரமல்ல நாட்டின் இன, மத பேதங்களை ஏற்படுத்தி நாட்டை பாதிப்புக்கு உள்ளாக் குவதன் மூலம் நிறைவேற்ற முயற்சி செய்கின்றரர்கள்.

கடந்த சில நாட்களாக உலகின் பல நாடுகளிலும் முஸ்லிம் பள்ளிவாசல்கள் மீது குண்டுத் தாக்குதல்களை நடத்தி இனங்களிடையே கலவரத்தை ஏற்படுத்த இந்த பயங்கரவாதிகள் முயற்சிக்கின்றார்கள்.

வதந்திகளை நம்பி கலவரங்களை ஏற்படுத்தி அவர்களின் நோக்கங்களை நிறைவேற்ற நாட்டு மக்கள் ஒத்துழைப்பை வழங்க வேண்டுமா என மக்கள் முடிவு செய்ய வேண்டும்.

நாட்டிலிருந்து பயங்கரவாதத்தை ஒழிக்க இன. மத, கட்சி பேதமின்றி அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என மேலும் தெரிவித்தார். (7)

---

## வடமேல் மாகாணத்திலுள்ள அரச நிறுவனங்களுக்கு விடுமுறை

(கொழும்பு)

வட மேல் மாகாணத்திலுள்ள அனைத்து அரச நிறுவனங்களுக்கும் நேற்றுச் செவ்வாய்க் கிழமை விடுமுறை அறிவிக்கப் பட்டுள்ளது.

வட மேல் மாகாண ஆளுநர் பேஷல ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

பொலிஸ் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளமை காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தொழிலுக்குச் செல்வதற்கு அரச அதிகாரிகள் எதிர்நோக்கியுள்ள சிக்கல் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு மக்கள் வருகை தராமை ஆகியவற்றை கருத்திற்கொண்டு அரச அதிகாரிகளுக்கு விடுமுறை வழங்குவதற்குத் தீர்மானித்ததாகவும் மேலும் தெரிவித்துள்ளார்.

வட மேல் மாகாணத்தில் நிலவும் பாதுகாப்பு நிலைமை தொடர்பாக இதன்போது கவனம் செலுத்தப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

## அமித் வீரசிங்க கைது

மகாசோன் பலகாய அமைப்பின் தலைவர் அமித் வீரசிங்க கைது செய்யப்பட்டுள்ளார். நேற்றுக் கண்டி - தெல்தெனிய பிரதேசத்தில் வைத்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார். விசேட பொலிஸ்குழுவினால் அவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

வடமேல் மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் இனவாதத் தாக்குதல் சம்பவம் தொடர்பிலே இவர் கைது செய்யப்பட்டு ள்ளார். கடந்த வருடம் கண்டி திகனயில் இடம்பெற்ற இனவன்முறை தாக்குதல்கள் அமித் வீரசிங்கவால் ஒழுங்குபடுத்தப் பட்டிருந்தன என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (7)

---

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1720

### அபிரன்

வாழ்க்கையில் வலிகளும் உண்டு, வழிகளும் உண்டு. எனவே தைரியமாய் நகரு...



### சிவசனா

எப்படி வாழவேண்டும் என்பதைவிட எப்படி வாழக்கூடாது என்பதை அறிந்தாலே போதும் வாழ்க்கை சொர்க்கமே...



### திலோஜன்

எப்படிப் போனால் என்ன என எண்ணுபவர்களை விட தன்னால் வருந்தி விடக்கூடாதே என நினைப்போர்தான் இங்கு அதிகமாக வருத்தத்திற்கு ஆளாகின்றனர்



### பிரதாகினி

ஒரு உயிரை நீ நேசிப்பது நிஜம் என்றால் அதை பறவை போல பறக்கவிடு... அது உன்னை நேசிப்பது நிஜம் என்றால் மீண்டும் உன்னை தேடி வரும்



### மதுசன்

கவர்னருக்கும் கணவருக்கும் என்ன ஒற்றுமை பதவி உண்டு, பவர் இல்லை



### செரோன்

இறைவா! எனக்கு மட்டும் ஏன் பசிச்சிக்கிட்டே இருக்கு!



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# மூன்று பயங்கரவாத அமைப்புக்களை தடை செய்யும் வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

பயங்கரவாத செயற்பாடுகளுடன் தொடர்புடைய தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பு, வில்லயத் அஸ் ஸெய்லானி மற்றும் ஜமேதுல் மில்லாது இப்ராஹிம் அமைப்பு ஆகியவற்றை தடைசெய்யும் வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த அமைப்புகளையும் தடைசெய்து, அவற்றின் சொத்துக்களை முடக்கும் அறிவிப்பை கடந்த ஏப்ரல் 27ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடுத்திருந்தபோதும், அதற்கான வர்த்தமானி வெளியிடப்படாமல் காணப்பட்டது. இந்நிலையில், பாதுகாப்புச் செயலாளர் சாந்த கோட்டேகொடவின் ஒப்புதலுடன் தற்போது இவற்றிற்கான வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் 21ஆம் திகதி நடத்தப்பட்ட தொடர் தற்கொலைக் குண்டுத்தாக்குதலின் பிரதான சூத்திரதாரியான மொஹமட் சஹ்ரான் தௌஹீத் ஜமாத் அமைப்புடன் இணைந்து செயற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அத்தோடு, இந்த அமைப்பின் அலுவலகங்களாக வணக்கஸ்தலங்கள் பயன்படுத்தப்பட்டு வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், நாட்டின் தேசிய பாதுகாப்பை கருத்திற்கொண்டு இந்த அமைப்புகளுக்கு தடை விதிக்கப்பட்டது. (7)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சந்தேக நபர் குறித்த விபரங்களை வழங்கக் கோரிக்கை



பொலிஸ் திணைக்களத் தலைமையகமானது உயிர்த்த ஞாயிறு தினத்தன்று ஏற்பட்ட தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் தொடர்பான விபரங்களை தமக்கு வழங்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

மேற்படி விடயம் தொடர்பாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அதிகாரியான ருவன் குணசேகரவிடம் இத் தொலைபேசி எண்ணின் மூலம் 011-242 2176 / 011-239 2900 தொடர்பு கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (7)

# தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட வெடிபொருட்கள் தொடர்பில் ஆராயும் நடவடிக்கை ஆரம்பம்

இலங்கையில் தற்கொலைதாரிகளால் பயன்படுத்தப்பட்ட வெடிபொருட்கள் மற்றும் வெடிமருந்துகள் குறித்து ஆராயும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என அரச இரசாயன பகுப்பாய்வாளர் ஏ.வெலி அங்ச தெரிவித்துள்ளார்.

இந்த விசாரணைகளுக்காக வெடிப்புச்சம்பவம் இடம்பெற்ற இடங்களிலிருந்து மாதிரிகள் சேகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதற்கிணங்க, பயங்கரவாத வெடிப்புக்களுக்காக பயன்படுத்தப்பட்ட வெடிபொருள் தொடர்பாக இந்த வாரத்துக்குள் விசாரணைக்குழுவிடம் அறிக்கை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் கடந்த 21ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதல்களுக்கு பயன்படுத்தப்பட்ட வெடிபொருள் தொடர்பாக பரவிவரும் பல்வேறு வதந்திகள் காரணமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் அரச இரசாயன பகுப்பாய்வாளர் மேலும் தெரிவித்துள்ளார். (7)

# நாமல் குமார குற்றப்புலனாய்வுப் பிரிவால் கைது

(கொழும்பு)

நாமல் குமார குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை வரகாபொல பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றை செய்வதற்காக சென்றபோதே அவர், கைது செய்யப்பட்டுள்ளார்.

எனினும் அவர் கைது செய்யப்பட்டமைக்கான காரணம் எதுவும் வெளியாகவில்லை.

இதேவேளை, ஹெட்டிபொல நகரில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற அமைதியின்மையின் போது, நாமல் குமாரவிற்கும், நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகரவுக்குமிடையில் வாக்குவாதங்கள் இடம்பெற்ற காட்சிகள் ஊடகங்களில் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)



# இலங்கையில் இடம்பெறும் வன்முறைகளால் வெளிநாட்டு சக்திகளுக்கு மட்டுமே இலாபம்

## அஸ்கிரிய பீடம் விசேட வேண்டுகோள்



வன்முறைச் செயற்பாடுகளால் அரசியல்வாதிகளும் வெளிநாட்டுச் சக்திகளும் இலாபமடைவது மாத்திரமே இடம்பெறுவதாக அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரர் சங்கைக்குரிய வரகாகொட ஞானரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

அதனால் அனைவரும் அமைதியாகவும் சமாதானமாகவும் செயற்பட வேண்டுமென சங்கைக்குரிய வரகாகொட ஞானரத்ன தேரர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-7)

# செய்தித்துளிகள்

## வெசாக் வாரம் இன்று ஆரம்பம்!

(கொழும்பு)

வெசாக் வாரம் இன்று புதன்கிழமை ஆரம்பமாகவுள்ளது. வெசாக் வாரத்தில் பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், ஆசிரிய கலாசாலைகளில் கல்வி வெசாக் வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்த வேண்டுமென கல்வி அமைச்சு ஆலோசனை வழங்கியுள்ளது.

பாடசாலை முகாமைத்துவ குழுவும் மற்றும் பிரிவெனா நிர்வாக சபையும் இணைந்து இதனை மேற்கொள்ள வேண்டியது அவசியமென அமைச்சின் சமய அபிவிருத்தி பணிப்பாளர் நிமல் தர்மசிறி தெரிவித்துள்ளார். (7)

## நைஜீரியப் பிரஜைகள் மூன்று பேர் கைது

(கொழும்பு)

குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டத்தை மீறி நாட்டில் தங்கியிருந்த நைஜீரிய நாட்டுப் பிரஜைகள் மூன்று பேர் தெகிவளை மேம்பாலத்திற்கு அருகில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

கல்கிஸ்ஸை வலய குற்ற விசாரணைப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். தெஹிவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (7)

## வடமேல் மாகாண பாடசாலைகள் மூடல்

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக நேற்று முன்தினம் நாடு முழுவதுமாக பொலிஸ் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. இந்நிலையில், நேற்றுக் காலை வடமேல் மாகாணம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் ஊரடங்கு தளர்த்தப்பட்டது.

இருந்தபோதும், மாணவர்களின் பாதுகாப்பு நிமித்தம் வடமேல் மாகாண பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. (7)

## வன்முறை தொடர்பில் 13 பேர் கைது



(மினுவாங்கொடை)

மினுவாங்கொடை நகரில் இனவாத கும்பலினால் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் தொடர்பில் 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக மேல் மாகாண வடக்கு பிரிவுக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

இனவாத கும்பலினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் முஸ்லிம்களின் வர்த்தக நிலையங்கள்.பள்ளிவாயல்கள் மற்றும் வீடுகள் பல தாக்கப்பட்டு பல சொத்துக்கள் சேதமாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)


## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 100 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 110 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 80 | 100 | 110 | 180 | 120 |
| தக்காளி | 120 | 90 | 130 | 120 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 150 | 160 | 150 | 140 | 80 |
| கோவா | 80 | 80 | 90 | 80 | 100 |
| கரட் | 120 | 100 | 110 | 80 | 160 |
| பூசணி | 50 | 50 | 40 | 40 | 60 |
| புடோல் | 60 | 80 | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 40 | 60 | 40 | 65 | 80 |
| சின்ன வெங்காயம் | 120 | 100 | 80-150 | 120 | 140 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 70 | 70 | 80 |
| பாகற்காய் | 160 | 160 | 160 | 180 | 160 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 80 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 60 | 50 | 80 |
| பயற்றங்காய் | 100 | 160 | 120 | 90 | 80 |
| லீக்ஸ் | 100 | 100 | 100 | 70 | 120 |
| பீற்றூட் | 120 | 100 | 120 | 80 | 120 |
| கறிமிளகாய் | 100 | 100 | 120 | 80 | 120 |
| முருங்கைக்காய் | 180 | 250 | 70 | 70 | 80 |
| போஞ்சி | 180 | 250 | 250 | 300 | 300 |
| கத்தரித்தம்புள்ள | 60 | 70 | — | 90 | 100 |
| கீரை - 1பிடி | 30 | 30 | 30 | 20 | 40 |
| தேசிக்காய் | 300 | 350 | 350 | 300 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 50 | 20-40 | 35 | 30-50 |
| இராசவள்ளி | 180 | 160 | 150 | 110 | 160 |
| வெங்காயப்பூ | 200 | 300 | 250 | 150 | — |
| முள்ளங்கி | 60 | 80 | 80 | 40 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 40 | 40 |
| வல்லாரை | 15 | 30 | 30 | 20 | 20 |
| ஈரப்பலா | — | — | 60 | 110 | — |

# வைகாசி மாத இராசி பலன்கள்

## 15.05.2019- 15.06.2019

## பண மழையில் நனையும் யோகம்



விகாரி வருட வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய், சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். அவரோடு சர்ப்ப கிரகமான இராகுவும் இணைந்திருக்கிறார். அதே சமயத்தில் 9 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் குரு பகவான் உங்கள் இராசிநாதனைப் பார்த்துக் குரு மங்கள யோகத்தை உருவாக்குகிறார்.

குரு பகவான் அதிசாரமாக சஞ்சரித்தாலும், அதன் பார்வைக்கு அதிக பலன் உண்டு. எனவே இந்த மாதம் இனிய மாதமாகவே உங்களுக்கு அமையப்போகிறது. பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். புதிய பாதை புலப்படும். தொழிலில் எதிர்பார்த்ததை விட கூடுதல் இலாபம் கிடைக்கும். பண மழையிலும், உறவினர்களின் பாச மழையிலும் நனையும் நேரம் இது.

இராசியிலேயே தனாதிபதி சுக்கிரன் சஞ்சரிக்கிறார். அவர் சப்தமாதிபதியாகவும் விளங்குபவர் என்பதால், கல்யாண முயற்சிகளில் காட்டும் அக்கறைக்கு பலன் கிடைக்கும். சென்ற மாதத்தில் வாசல் தேடி வந்து விட்டுப்போன வரன்கள் கூட, இப்பொழுது மீண்டும் வந்து மகிழ்ச்சியை வரவழைக்கும். பிள்ளைகளுக்கான கடமைகளைச் செய்யக்கூடிய நேரம் இது. காதுகுத்து, கல்யாணம், சீமந்தம், வெளிநாடு செல்லும் முயற்சி போன்றவை உங்களுக்கு அனுகூலமாக நடைபெறும்.

பஞ்சம ஸ்தானாதிபதி சூரியன், புதனோடு இணைந்து புத ஆதித்ய யோகத்தை உருவாக்குகிறார். எனவே பிள்ளைகளின் படிப்பு சம்பந்தமாக எடுக்கும் முயற்சி வெற்றியாகும். அவர்கள் எந்தத் துறையில் படிக்க விரும்புகிறார்களோ அந்தத் துறை கிடைப்பதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கும். பெரும் சிரமம் இன்றி, பட்டப் படிப்பையோ, பட்ட மேற்படிப்பையோ முடிப்பீர்கள்.

சனி, செவ்வாய் பார்வை இருப்பதால் ஆரோக்கியத்தில் கொஞ்சம் அக்கறை காட்ட வேண்டியதிருக்கும். உங்களுக்கோ, உங்கள் குடும்பத்தில் உள்ளவர்களுக்கோ மருத்துவச் செலவு இருந்து கொண்டே இருக்கும்.

இம்மாதம் விசாகத் திருநாள் வருகிறது. அன்றைய தினம் உங்கள் இராசிநாதன் செவ்வாய்க்குரிய, தெய்வமான முருகப் பெருமானை வழிபட்டால் முன்னேற்றப் பாதையில் ஏற்பட்ட தடைகள் அகலும்.

விருச்சிக குருவின் சஞ்சாரம்

மே 18 ஆம் திகதி விருச்சிக இராசிக்கு குரு வருகிறார். அப்பொழுது அதன் பார்வை, உங்கள் இராசிக்கு 2, 4, 12 ஆகிய இடங்களில் பதிகிறது. எனவே குடும்பத்தில் மாங்கல ஓசை கேட்கும். தாய்வழி ஆதரவு கூடும். இடம், வீடு வாங்கும் அமைப்பும் ஒரு சிலருக்கு உண்டு. வெளிநாட்டில் இருந்து வரும் அழைப்புகள் மகிழ்ச்சி தருவதாக இருக்கும். இக்காலத்தில் குரு வக்கிர இயக்கத்தில் இருப்பதால், குரு பீடங்களுக்குச் சென்று வழிபட்டு வாருங்கள்.

மிதுன புதனின் சஞ்சாரம்

மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிக்கு 2 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த புதன், மே 29 ஆம் திகதி 3 ஆம் இடத்திற்குச் செல்கிறார். மிதுன இராசி புதனுக்கு சொந்த வீடாகும். எனவே சகாய ஸ்தானாதிபதி புதன்




சகாய ஸ்தானத்தில் பலம் பெறும்பொழுது, மிக அற்புதமான பலன்கள் வந்து சேரும். குறிப்பாக ஆரோக்கியத் தொல்லை அகலும். செயற்பாடுகளில் வெற்றி கிடைக்கும். எந்தக் காரியத்தையும் உடனடியாக செய்து முடிப்பீர்கள். ஜூன் 15 ஆம் திகதி மிதுனத்திற்கு சூரியனும் வருவதால் பொதுநலம் மற்றும் அரசியலில் இருப்பவர்களுக்கு புதிய வாய்ப்புகள் வந்து சேரும்.

ரிஷப சுக்கிரனின் சஞ்சாரம்

ஜூன் 4 ஆம் திகதி ரிஷபத்திற்கு வரும் சுக்கிரனால், உங்களின் செல்வநிலை உயரும். தெளிந்த சிந்தனையோடு செயற்படுவீர்கள். குடும்ப முன்னேற்றம் கூடும். கொடுக்கல் - வாங்கல் ஒழுங்காகும். அடிப்படை வசதிகளைப் பெருக்கிக் கொள்வீர்கள்.

இம்மாதம் செவ்வாய்க்கிழமை முருகப் பெருமானையும், சனிக்கிழமை அனுமனையும் வழிபடுவது நல்லது.

பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் உங்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பெற்றோர்களின் ஆதரவு கிடைக்கும். உற்றார், உறவினர்கள் உறுதுணையாக இருப்பார்கள். குடும்பத்தினர், உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். பிள்ளைகளின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருப்பீர்கள். அவர்களின் மேற்படிப்பு சம்பந்தமாக எடுத்த முயற்சி வெற்றி தரும். 'இடம் வாங்கியும் வீடுகட்ட முடியவில்லையே' என்று கவலைப் பட்டவர்களுக்கு, இப்போது அந்த யோகம் வாய்க்கும். பணிபுரியும் பெண்களுக்கு, அலுவலகத்தில் கேட்ட சலுகைகள் கிடைக்கும். பதவி உயர்வு பற்றிய நல்ல தகவல் வரலாம். குலதெய்வ வழிபாடும், வைகாசி விசாக நாளில் சண்முகநாதர் வழிபாடும் சந்தோஷமான வாய்ப்புகளை வரவழைத்துக் கொடுக்கும்.

**ஜோதிடக் கலாமணி**
**சிவஸ்ரீ சிங்காரம்**

## பொது வாழ்வில் புகழ் கூடும் நேரம்



விகாரி வருட வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்கிரன், விரய ஸ்தானத்தில் இருக்கிறார். இருப்பினும் தனாதிபதி புதனும், சுகாதிபதி சூரியனும் இணைந்து உங்கள் இராசியிலேயே சஞ்சரிப்பதால், செலவுக்கேற்ற வரவு வந்து கொண்டே இருக்கும். திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடியே நடைபெறும்.

அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கமும், அஷ்டமத்து குரு, கேது ஆகியவற்றின் ஆதிக்கமும் இருப்பதால், வரும் விரயங்களை சுப விரயங்களாக மாற்றி அமைத்துக் கொள்வது உங்களுடைய சாமர்த்தியம். இதுபோன்ற காலங்களில் வீட்டை பழுது பார்ப்பது, வீடு வாங்குவது போன்ற காரியங்களைச் செய்யலாம். பணத் தேவையானது, பணிபுரியும் இடம் வாயிலாகவும், பக்கபலமாக இருக்கும் நண்பர்கள் வாயிலாகவும் கிடைக்கும். பிள்ளைகளின் எதிர்கால நலன்கருதி சில முக்கிய முடிவுகளை எடுக்கும் நேரம் இது. பிள்ளைகளின் படிப்பு சம்பந்தமாகவோ, வேலை விடயமாகவோ வெளிநாடு செல்லும் முயற்சி செய்திருந்தால், அதில் வெற்றி கிடைக்கும்.

பலம் பொருந்திய ராகு - கேதுக்கள் 2 ஆம் இடத்திலும், 8ஆம் இடத்திலுமாக அமர்ந்திருக்கின்றன. அஷ்டமத்தில் கேது இருக்கும் இடம், குருவின் வீடாகவும் இருப்பதால் நீங்கள் பெரிதும் கவலைப்பட வேண்டியதில்லை. 'குரு பார்த்தாலும், குரு சேர்ந்திருந்தாலும் கோடிதோஷ நிவர்த்தி' என்பது ஜோதிட நியதி. எனவே ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். இல்லறம் நல்லறமாக அமையும். இதுபோன்ற காலங்களில் அதிகமான வழிபாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

இம்மாதம் வைகாசி விசாகத் திருநாள் வருவதால், அன்றைய தினம் விரதம் இருந்து முருகப்பெருமானை வழிபடுங்கள். மேலும் பிரதோஷ காலத்தில் நந்திக்குரிய பதிகம் பாடி நந்தியையும், சிவபெருமானையும், உமாதேவியையும் வழிபட்டால் நினைத்தது நடைபெறும்.

விருச்சிக குருவின் சஞ்சாரம்

குரு பகவான் மாதத் தொடக்கத்தில் அதிசார கதியில் தனுசு இராசிக்குள் சஞ்சரிக்கிறார். அவர் மே 18 ஆம் திகதி வக்கிர இயக்கத்தில் விருச்சிக இராசிக்கு செல்கிறார். அங்கு சென்றதும் உங்கள் இராசியை சப்தம பார்வையாகப் பார்க்கிறார். என்னதான் உங்களின் இராசிநாதன் சுக்கிரனுக்கு பகை கிரகமாக குரு விளங்கினாலும், அவரது பார்வையால் ஏற்படும் பலனில் குறை வைக்க மாட்டார். எனவே ஆரோக்கியத் தொல்லை அகலும். அதிர்ஷ்ட வாய்ப்புகள் அலைமோதும். குடும்பத்தில் இருந்த சிரமங்கள் விலகும். தாராளமாக செலவு செய்ய முன்வருவீர்கள். தடுமாற்றங்கள் அகலும். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு, பலவிதமான பொறுப்புகள் கிடைக்கப் போகிறது. 3, 11 ஆகிய இடங்களையும் குரு பார்ப்பதால் முன்னேற்றம் கூடும். வெளிநாட்டில் இருந்து அனுகூலமான தகவல் வந்து சேரும்.

மிதுன புதனின் சஞ்சாரம்

மே 29 ஆம் திகதி மிதுன இராசிக்கு புதன் செல்கிறார். இக்காலத்தில் உங்கள் தன ஸ்தானம் வலுவடைகிறது. எனவே பொருளாதார நிலை உயரும். பொன், பொருள் மற்றும் விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் விருப்பம் நிறைவேறும்.




புதிய பங்குதாரர்கள் தொழிலில் வந்திணைவர். அதிக வருமானம் வருவது மட்டுமல்ல, ஆட்களின் பழக்கங்களும் அதிகரிக்கும். மாதக் கடைசியில் மிதுன சூரியனின் சஞ்சாரத்தால், புதிய வாகனம் வாங்கி மகிழும் யோகம் உண்டு.

ரிஷப சுக்கிரனின் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கும், எதிர்ப்பு, வியாதி, கடன் ஆகியவற்றை குறிக்கும் 6 ஆம் இடத்திற்கும் சுக்கிரனே அதிபதியாவார். அப்படிப்பட்ட சுக்கிரன் உங்கள் இராசியில் சஞ்சரிக்கும் பொழுது, தனக்குத் தானே எதிரியாகும் சூழ்நிலை உண்டாகும். உறவினர் பகை அதிகரிக்கும். உற்சாகமும், தன்னம்பிக்கையும் குறையாமல் பார்த்துக்கொள்வது நல்லது.

'வேலை தேடி, பல இடங்களில் அலைந்தும் இது வரை கிடைக்கவில்லையே' என்று கவலைப்பட்டவர்களுக்கு, வேலை கிடைப்பதற்கான அறிகுறி தென்படும். ஒரு சிலருக்கு உத்தியோக மாற்றம், வீடு மாற்றம், இலாகா மாற்றம் வரும். வரும் மாற்றங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

இம்மாதம் சனிக்கிழமை தோறும் வாலில் மணிகட்டிய ஆஞ்சநேயரை வழிபடுவது நல்லது.

பெண்களுக்கான பலன்கள்

இந்த மாதத்தின் முற்பகுதியில் விரயங்களும், பிற்பகுதியில் வருமானங்களும் உண்டு. நினைத்த காரியத்தை நினைத்தபடியே செய்ய அருகில் இருப்பவர்களின் ஆதரவு கிடைக்கும்.

கணவன் - மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. பிள்ளைகளின் எதிர்காலக் கனவுகளை நனவாக்குவீர்கள். தாய்வழி ஆதரவு திருப்திகரமாக இருக்கும். சொத்துக்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். வேலை தேடி அலைந்தவர்களுக்கு, நல்ல சம்பளத்துடன் வேலை கிடைக்கும். ஏற்கனவே பணியில் இருக்கும் பெண்களுக்கு எதிர்பார்த்தபடியே அலுவலகத்தில் இருந்து சலுகைகள் கிடைக்கலாம். வாகனம், வீடு போன்றவை வாங்குவதற்கு உதவி கேட்டு, மேலதிகாரிகளுக்கு விண்ணப்பித்திருந்தால் அது கைகூடும். குல தெய்வ வழிபாடும், முருகப் பெருமான் வழிபாடும் குடும்ப முன்னேற்றத்திற்கு வித்திடும்.

(தொடரும்)

வாழ்க்கை என்பது நீ சாகும் வரை அல்ல
மற்றவர் மனதில் நீ வாழும்வரை.
~ அன்னை திரேசா

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சிங்கள - முஸ்லிம் மக்கள் ஓர் உண்மையை உணர்ந்திருப்பர்

இந்த நாட்டில் தமிழ் மக்கள் பட்ட துன்பங்களும் துயரங்களும் கொஞ்சமல்ல.

தமிழ் மக்களை எப்படித் துன்பப்படுத்த முடியுமோ அப்படியெல்லாம் துன்பப்படுத்திய வரலாறு என்றும் மறக்கக் கூடியதுமல்ல.

கோட்டையில், பலாலியில் இருந்து ஏவப்பட்ட ஷெல் தாக்குதல்கள், விமானக் குண்டு வீச்சுகள் அப்பாவித் தமிழ் மக்களை அழித்தன.

போதாக்குறைக்கு தமிழ் மக்களின் பூர்வீக இடங்களான தீவகத்தையும் வலிகாமம் வடக்கையும் இதர பிரதேசங்களையும் படையினர் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்ததுடன் அங்கிருந்த மக்கள் மீளவும் அங்கு சென்று குடியமர்வதற்குக் கூட அனுமதிக்கவில்லை.

சொந்த நாட்டில் சொந்த மண்ணை இழந்து அகதி என்ற அந்தஸ்துடன் வாழ்ந்த தமிழ் மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்தனர்.

இதுதான் என்றால் இல்லை. வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த நிட்டூரம் சொல்லி மாளா. பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களைக் கொன்று குவித்ததும் இலட்சக்கணக்கான தமிழ் மக்களை முட்கம்பி வேலிக்குள் அடைத்து வைத்ததும் உலகில் எங்கும் நடக்காத கொடுமை.

எல்லாக் கொடுமைகளையும் தமிழ் மக்கள் தாங்கிக் கொண்டனர்.

இருந்தும் சுமார் முப்பது வருட கால அனுபவிப்புகள் எந்த முடிவும் விடிவும் இல்லாமல் போகுமளவுக்கு சர்வதேச சமூகமும் தமிழ் மக்களுக்கு வஞ்சகம் செய்தது.

இதுதான் என்பதோடு ஆறுதலடையலாமென்றால் அதுவும் இல்லை. இப்போது தமிழ் அரசியல் தலைமையை தனக்கான சக்தியாக இலங்கை அரசு மாற்றிக் கொண்டு, தான் நினைத்ததை நிறைவேற்றுவதில் அரசாங்கம் வெற்றியும் கண்டுள்ளது.

புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தம் வரும் என்று கூறிக் கூறியே தமிழ் மக்களை ஏமாற்றிய நிலையில், இப்போது இலங்கையின் கள நிலைமை வேறாகிவிட்டது.

விடுதலைப் புலிகளை தோற்கடித்து; தமிழ் மக்களின் நியாயபூர்வமான கோரிக்கைகளை மழுங்கடித்துவிட்டால் இலங்கையில் அமைதி ஏற்படும் என்று நம்பியிருந்த சிங்களப் பேரினவாதம் இப்போது இஸ்லாமியத் தீவிரவாதத்தின் பூதாகரம் கண்டு திகைத்து நிற்கிறது.

வருடா வருடம் மே மாதத்தில் வெற்றி விழாவும் வெசாக் பண்டிகையும் கொண்டாடுவதைத் தவிர நமக்கு வேறு என்ன தேவை என்றிருந்தவர்கள் இப்போது வெசாக் பண்டிகையைக் கொண்டாடாதீர்கள். புலிகளை வென்ற வெற்றி விழா இருக்கட்டும் என்று கூறுமளவுக்கு காலம் பகையாகிப் போயிற்று.

பரவாயில்லை, தமிழ் மக்களும் அவர்கள் சார்ந்த சமயமும் அன்பு மயப்பட்டது. இறைவனையும் அன்பையும் ஒன்றெனக் கருதுவது.

ஆகையால்தான் சிறுபான்மை முஸ்லிம் மக்கள் சரி, பெரும்பான்மை சிங்கள மக்கள் சரி யாரும் பாதிக்கப்படாமல்; எவருக்கும் எந்தத் துன்பமும் ஏற்படாமல் இருக்க வேண்டும் என மனம், மெய், மொழியால் நினைக்கின்றனர்.

இந்த சூழ்நிலையில், தமிழ் மக்களின் நிலைப்பாடு சிங்கள முஸ்லிம் மக்களுக்கு ஓர் உண்மையை எடுத்துரைக்கும். அந்த உண்மை **தமிழ் மக்கள் நல்லவர்கள்** என்பதாக இருக்கும். இனி இயற்கையும் இறைவனும் விட்ட வழி.

## முன்னாள் போராளிகளை சந்தேகிப்பதை அரசாங்கம் நிறுத்திக்கொள்ள வேண்டும்

(ஏறாவூர்)

நாட்டில் நடைபெறும் எந்தவொரு அசம்பாவிதச் செயற்பாடுகளுக்கும் முன்னாள் போராளிகளைக் குற்றம் சுமத்துவதை அரசாங்கம் நிறுத்திக்கொள்ள வேண்டுமென தேசத்தின் வேர்கள் அமைப்பின் தலைவர் க.பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"நாட்டில் இடம்பெறும் அசம்பாவிதங்கள் அனைத்திற்கும் முன்னாள் போராளிகளை மாத்திரம் குற்றம் சாட்டுவதை அரசாங்கமும் அரசியல்வாதிகளும் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

அண்மையில் நாட்டில் இடம்பெற்ற தொடர் குண்டுத் தாக்குதலுக்கு ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. மேலும் இவ்வாறான கொடூரமான செயற்பாடுகளை முன்னாள் போராளிகள் ஒருபோதும் செய்யமாட்டார்கள்.

இதேவேளை வவுணதீவில் இரண்டு பொலிஸாரின் படுகொலையில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட அஜந்தன் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இவர் எவ்வித குற்றமும் செய்யாத சூழலில் சிறையில் அடைக்கப்பட்டபோது அவரின் மனைவி இவரை விடுதலை செய்யக் கோரி வீதியில் போராட்டங்களை மேற்கொண்டார். ஆனால் எந்தவொரு அமைப்போ அரசியல்வாதிகளோ ஆதரவு தெரிவிக்கவில்லை.

தற்போது எவ்வித நிபந்தனையுமின்றி பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். இவர் மீது குற்றம் இல்லையென உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே பலரும் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் செயலாளருக்கு கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## ஊடரங்கு அமுலில் நடமாடிய இருவர் பொலிஸாரால் கைது

ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த வேளையில் நடமாடியதாக தெரிவித்து ஒரு முஸ்லிம் நபர் உட்பட இருவர் கைது செய்யப்பட்டதாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு 9.00 மணியில இருந்து மறுநாள் காலை 4.00 மணிவரை நாடு பூராகவும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது.

இந்நேரமான நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 1.00 மணியளவில் வீதிச் சோதனையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் முச்சக்கரவண்டிஒன்றை மறித்த போது அவர்கள் கொடிகாமத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கி சென்றமை தெரியவந்தது.

அதில் பயணித்தவர் மட்டக்களப்பு, காத்தான்குடி பகுதியைச் சேர்ந்த முஸ்லிமாவார்.

அவர் கொடிகாமத்தில் இருந்து முச்சக்கரவண்டி ஒன்றை வாடகைக்கு அமர்த்தியே பருத்தித்துறை வந்துள்ளார்.

அவர்கள் இருவரும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்த வேளை நடமாடியதாக இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை பொலிஸில் பாரப்படுத்தப்பட்டுள்ளனர். (ம-50)

## புலிகள் போல இஸ்லாமிய அமைப்பும் பலம்பெறுமோ என சந்தேகம் எழுகின்றது - பொது பல சேனா

(கொழும்பு)

இனக் கலவரங்கள் ஒரு கறுப்பு ஜூலை கலவரமாக மாற்றமடைந்து எவ்வாறு விடுதலைப் புலிகள் அமைப்பு உருவாக்கம் அடைந்ததோ அதேபோன்று இஸ்லாமிய அடிப்படைவாதிகளின் அமைப்பும் பலம்பெறுமா என்ற சந்தேகம் எழுவதாக தெரிவித்த பொது பல சேனா, இனங்களுக்கிடையில் விரிசலை ஏற்படுத்தி அதில் அரசியல் இலாபம் தேடிக் கொள்வோம் என்ற குறுகிய நோக்கங்களை கொண்டுள்ள அரசியல்வாதிகளின் சூழ்ச்சிக்கு பொது மக்கள் அடிபணியக் கூடாது எனவும் குறிப்பிட்டுள்ளது.

பொது பல சேனா அமைப்பின் தலைமை காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அதன் தேசிய ஒருங்கிணைப்பாளர் விதாரந்தெனிய நந்த தேரர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர்,

இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புக்கள் இலங்கையில் பலம் வாய்ந்த அமைப்பாக உருவாகுவதற்கு நாம் வழிகளை ஏற்படுத்திக் கொடுக்கக் கூடாது. இன வன்முறைகளின் ஊடாக தமது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளவே அடிப்படைவாதிகள் முயற்சிக்கின்றனர்.

ஆகவே பௌத்த மதத்தை சர்வதேசத்தில் கேள்விகளுக்குட்படுத்தும் செயற்பாடுகளை இலங்கை மக்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

அடிப்படைவாதிகளின் மிலேட்சத்தனமான தாக்குதலை தொடர்ந்து கடந்த மூன்று வார காலமாக நாடு பாரிய சவால்களை எதிர் கொண்டுள்ளது. தேசிய பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என்பது கேள்விக் குறியாகவே உள்ளது.

தாக்குதல் சம்பவத்தை ஆளும் தரப்பினரும், எதிர் தரப்பினரும் முழுமையாகவே தமது அரசியல் தேவைகளுக்காக பயன்படுத்திக் கொள்கின்றார்கள். தேசிய பாதுகாப்பும் தேசிய நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்ப புதிய எவ்வித வழிமுறைகளும் பின்பற்றவில்லை எனவும் குறிப்பிட்டார். (ம-3)

## ரெலோ அலுவலகத்திற்குள் இனந்தெரியாத நபர்கள் நுழைவு

### யாழ். பொலிஸில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

ரெலோ அலுவலகத்திற்குள் இனந்தெரியாத நபர்கள் உள்நுழைந்ததாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

ரெலோவின் அமைப்பாளர் நேற்று இந்த முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளார்.

யாழ்ப்பாணம் கோவில் வீதியில் அமைந்துள்ள ரெலோ கட்சியின் அலுவலகத்திற்குள் நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத மூவர் மதில் பாய்ந்து சென்றதாக, அலுவலகத்தின் அருகாமையில் இருப்பவர்கள் கண்டு, கட்சி உறுப்பினர்களுக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

அந்தத் தகவலின் பிரகாரம், ரெலோ கட்சியின் அமைப்பாளர் யாழ்ப்பாணம் பொலிஸ நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

அந்த முறைப்பாட்டின் பிரகாரம், யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ-101)

## பொறுப்புக்கூறலிலிருந்து ஜனாதிபதியும் பிரதமரும் தப்பிக்க முடியாது - சொய்ஷா

(கொழும்பு)

இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புக்களை முஸ்லிம் அரசியல்வாதிகள் ஆதரித்தமையைக் கண்டு கொள்ளாமல் தமது அதிகாரத்தை தக்க வைத்துக்கொள்ளும் நோக்கத்தில் செயற்பட்ட ஜனாதிபதியும், பிரதமரும் பொறுப்புக்கூறலில் இருந்து ஒருபோதும் தப்பிக்க முடியாது என மஹிந்த அணி பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் டி சொய்ஷா தெரிவித்தார்.

அத்துடன் அமைச்சர் றிசாத் பதியுதீனுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவரும் தகைமை பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரருக்கு கிடையாது.

நல்லாட்சி என்ற பெயரில் அறிமுகமாகிய அரசாங்கத்தால் இதுவரையில் மக்கள் நெருக்கடிகளுக்கே முகம் கொடுத்து வருகின்றார்கள். 30 வருட கால யுத்தத்தின் போது ஏற்படாத அச்ச நிலை இன்று மக்கள் மத்தியில் காணப்படுகின்றது.

தேசிய பாதுகாப்பு தொடர்பில் மக்கள் எந்தவித நம்பிக்கையையும் கொள்ளவில்லை. இதன் காரணமாகவே இன்று மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## ஆன்மீகச் சிந்தனைகள்

### இறைவன் விரும்பும் நைவேத்தியம்

✦ உயர்ந்த வழிபாட்டை "சமாராதனை" என்று குறிப்பிடுவர். "சம்" என்றால் "நல்ல", "ஆராதனை" என்றால் "வழிபாடு" என்பது பொருள். ஏழைக்குச் சேவை செய்வது சமாராதனை எனப்படும்.

✦ கோயிலில் ஆடம்பரத்துடன் படைக்கும் பொங்கலை இறைவன் ஏற்கிறானா என்பது சந்தேகமே. ஆனால், ஏழைகளுக்காக தானம் செய்வதற்காக தயாரிக்கப்படும் பொங்கலை, இறைவன் மிக விருப்பத்தோடு உகந்து ஏற்பான்.

✦ நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த திருமூலர் என்னும் சித்தர், கோயிலில் இருக்கும் இறைவனை "படமாடும் கோயில்" (சிற்பம்) என்றும், ஏழை எளியவர்களை "நடமாடும் கோயில்" என்றும் குறிப்பிடுகிறார்.

✦ தபால்களை நேரே தபால் நிலையத்தில் சேர்த்தால், வீதிகளில் இருக்கும் தபால் பெட்டிகளுக்கு அவை வரத் தேவையில்லை. ஆனால், வீதிகளில் உள்ள தபால் பெட்டிகளில் இட்ட தபால் தலைமை தபால் அலுவலகத்திற்கு வர வேண்டியது அவசியம். தபால் பெட்டி ஏழை எளியவர்களைப் போன்றது. அஞ்சல் நிலையம் ஆண்டவன் வாழும் கோயில்.

✦ ஆலயங்களில் செய்யப்படும் வழிபாட்டைக் காட்டிலும் ஏழைகளுக்குச் செய்யும் தொண்டுகள் மூலம் இறைவனை அடைவது சிறந்தது. அதனால் தான் இறைவழிபாட்டை "ஆராதனை" என்றும், ஏழைகளுக்குத் தானம் செய்வதை "சமாராதனை" என்றும் குறிப்பிடுகிறார்கள்.

# ஹர்பஜனை களமிறக்காததே தோல்விக்கான முதல் காரணம்

## ரசிகர்கள் அதிருப்தி



ஐ.பி.எல். இறுதிப்போட்டியில் அனுபவ வீரர் ஹர்பஜன் சிங்கை கடைசி ஓவரில் டோனி ஏன் களமிறக்கவில்லை என்ற கேள்வி ரசிகர்களிடையே நிலவி வருகிறது.

12 ஆவது ஐ.பி.எல். தொடரின் இறுதிப் போட்டியில் மும்பை அணி ஒரு ஓட்ட வித்தியாசத்தில் சென்னை அணியை வீழ்த்தி கோப்பையை கைப்பற்றியது.


முன்னதாக, சென்னை அணி துடுப்பாட்டம் செய்து கொண்டிருந்தபோது, சிறப்பாக விளையாடிக் கொண்டிருந்த வாட்சன் (80) கடைசி ஓவரில் ரன்-அவுட் ஆனார்.

அதன் பின்னர், அனுபவ வீரர் ஹர்பஜன் சிங் தான் களமிறங்குவார் என்று அனைவரும் எதிர்பார்த்த நிலையில், தாக்கூரை களமிறக்கினார் டோனி.

ஆனால், கடைசி பந்தில் 2 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில் தாக்கூர் ஆட்டமிழந்தார். இதனால் ஒரு ஓட்டம் வித்தியாசத்தில் மும்பை அணி வெற்றி பெற்றது. ஒருவேளை ஹர்பஜன் சிங் களமிறங்கியிருந்தால் போட்டியின் முடிவே மாறியிருக்கும் என்று பரவலாக ரசிகர்களிடையே பேசப்படுகிறது.

அத்துடன் டோனி ஏன் ஹர்பஜனை கடைசி ஓவரில் களமிறக்கவில்லை என்ற கேள்வியும் ரசிகர்களிடையே எழுந்துள்ளது. (க)

# காலில் இரத்தம் வழிந்தோடிய போதும் போராட்டத்தை நிறுத்தாத வோட்சன்



ஐ.பி.எல்.இறுதிப் போட்டியின் போது காலில் இரத்தம் வழிந்தபடியே சென்னை அணியின் ஷேன் வோட்சன் கிரிக்கெட் விளையாடியிருக்கிறார்.

இந்தப் போட்டியின் போது சென்னை அணிக்காக விளையாடிய ஷேன் வோட்சன் 59 பந்துகளில் 80 ஓட்டங்கள் குவித்திருந்தார்.

அவரை தவிர மற்ற வீரர்கள் அனைவரும் பெரியளவிற்கு ஓட்டங்கள் ஏதும் அடிக்கத் தவறிவிட்டனர்.

ஆரம்பத்தில் இருந்தே ஷேன் வோட்சன் சரியாக விளையாடுவதில்லை என ரசிகர்கள் பலரும் குறை கூறிக்கொண்டே இருந்தனர். ஆனால் அணியின் தலைவர் டோனி, தொடர்ந்து அவருக்கு வாய்ப்பளித்துக் கொண்டே இருந்தார்.

பலரின் விமர்சனங்களுக்கு தன்னுடைய ஆட்டத்தின் மூலம் ஷேன் வட்சன் நேற்று பதிலளித்திருந்தார்.

இந்த நிலையில் சென்னை அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங் தன்னுடைய இன்ஸ்டாகிராம் பக்கத்தில், காலில் இரத்தக்காயத்துடன் இருக்கும் ஷேன் வோட்சன் புகைப் படத்தை வெளியிட்டுள்ளார்.

அந்தப் பதிவில் இறுதிப் போட்டியின் போது வோட்சன் ஓட்டம் ஓடும் போது டைவ் அடித்ததில் அவரது காலில் காயம் ஏற்பட்டுள்ளது. இதை யாரிடமும் தெரிவிக்காமல் கடைசி வரை விளையாடியுள்ளார். போட்டிக்குப் பின்னர் காலில் ஏற்பட்ட காயத்திற்கு 6 தையல்கள் போடப் பட்டுள்ளன எனக் குறிப்பிட்டுள்ளார். (க)

# கிண்ணத்தை அதிகம் முத்தமிட்டார் மும்பையின் ரோகித் சர்மா



ஐ.பி.எல். கோப்பையை 5 முறை முத்தமிட்ட வீரர் என்ற சாதனையை மும்பை அணித் தலைவர் ரோஹித் ஷர்மா படைத்துள்ளார்.

ஐ.பி.எல். 12 ஆவது சீசனில் மும்பை இந்தியன்ஸ் கோப்பையை வென்றுள்ளது. ரோஹித் ஷர்மா தலைமையிலான மும்பை அணி. 4 ஆவது முறையாக கோப்பையை கைப்பற்றி சாதனை படைத்துள்ளது.

இதில் நான்கு முறையும் மும்பை அணியின் தலைவராக ரோஹித் ஷர்மாவே இருந்துள்ளார். இதன்மூலம் ஐ.பி.எல். கோப்பையை நான்கு முறை வென்ற ஒரே அணித்தலைவர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

அத்துடன், டெக்கான் சார்ஜர்ஸ் அணி கில்கிறிஸ்ட் தலைமையில் கோப்பையை வென்ற போது (2009) அந்த அணியில் ரோஹித் ஷர்மா இடம் பிடித்திருந்தார்.

அதன் பின்னரே மும்பை அணியின் தலைவராக 2013, 2015, 2017, 2019 ஆண்டுகளில் செயற்பட்டு கோப் பையை கைப்பற்றியுள்ளார்.

எனவே, ஐ.பி.எல். கோப்பையை 5 முறை முத்தமிட்ட ஒரே வீரர் என்ற சாதனையை ரோஹித் ஷர்மா படைத்துள்ளார். (க)

# பந்தை சேதப்படுத்தினாரா இங்கிலாந்து வீரர் ஐ.சி.சியின் அறிவிப்பால் ரசிகர்கள் நிம்மதி


பாகிஸ்தான் அணிக்கு எதிரான 2 ஆவது போட்டியில் ப்ளங்கெட் பந்தை சேதப்படுத்திய செயலில் ஈடுபடவில்லை என்று ஐ.சி.சி. உறுதிப்படுத்தியுள்ளது.

சவுத்தாம்ப்டனில் இங்கிலாந்து-பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான 2 ஆவது ஒருநாள் போட்டி நடந்தது. முதலில் ஆடிய இங்கிலாந்து அணி 373 ஓட்டங்கள் குவித்தது.

பின்னர் களமிறங்கிய பாகிஸ்தான் அணி 361 ஓட்டங்கள் எடுத்து 12 ஓட்டங்களில் தோல்வியைத் தழுவியது. அந்தப் போட்டியில் இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் ப்ளங்கெட் பந்தை நகத்தால் சுரண்டியது போன்ற வீடியோ வெளியாகி சர்ச்சையை ஏற்படுத்தியது.

அவர் பந்தை சேதப்படுத்தியதாகப் பேச்சு எழுந்த நிலையில் போட்டிக்கான அதிகாரிகள் குறித்த வீடியோவை ஆய்வு செய்தனர். அதனைத் தொடர்ந்து ப்ளங்கெட் தவறு செய்யவில்லை என்பது தெரிய வந்துள்ளது.

இந்நிலையில் இது தொடர்பாக ஐ.சி.சி. தனது டுவிட்டர் பக்கத்தில், 'ப்ளங்கெட் பந்தை சேதப்படுத்தும் விதமான எந்தவொரு செயலிலும் ஈடுபடவில்லை. பந்தை சேதப்படுத்தினாரா? என்பதை ஓவர்-பை-ஓவராக போட்டிக்கான அதிகாரிகள் பரிசோதனை செய்தனர். பின்னர் அவ்வாறு செய்யவில்லை என்பது உறுதி செய்தனர்' எனத் தெரிவித்துள்ளது.



எனவே, ப்ளங்கெட் உலகக் கோப்பைக்கான அணியில் விளையாடுவதில் எந்தச்சிக்கலும் இல்லை என தெரிய வந்துள்ளது. (க)


## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்


# சஹாருக்கு நல்ல எதிர்காலம் உண்டு சச்சின் - ஜெயவர்த்தன புகழாரம்



கிரிக்கெட்டில் உலகில் ஜாம்பவான்களான சச்சின் - ஜெயவர்த்தன மும்பை அணியில் விளையாடிய இளம் வீரர் ஒருவரை புகழ்ந்து பேசியுள்ளனர்.

சென்னைக்கு எதிரான இறுதி போட்டியில் 4 ஓவர்கள் வீசி வெறும் 14 ஓட்டங்கள் மட்டுமே விட்டுக்கொடுத்து ஒரு விக்கெட்டையும் வீழ்த்திய சுழற்பந்து வீச்சாளரான ராகுல் சஹாரை தான் அந்த புகழுக்குரியவர்.

ராகுல் சஹார் அவரது முதல் போட்டியை விளையாடுவதற்கு முன்பே, அவர் அபாரமான திறமைசாலி என்று ஜெயவர்த்தனவிடம் கூறினேன். 6 ஆவது ஓவர் முதல் 15 ஆவது ஓவர்வரையிலான மிடில் ஓவர்களில் ஸ்லிப்பை நிறுத்தி பந்து வீசுகிறார். அது சாதாரண விடயமல்ல.

முக்கியமான போட்டியில் அபாரமாக வீசியுள்ளார், எதிர்காலத்தில் சிறந்த வீரராக திகழ்வார் என இறுதிப்போட்டிக்கு பின்னர் பேசிய மும்பை அணியின் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர், ராகுல் சஹாரை பாராட்டித் தள்ளியுள்ளார்.

இந்த சீசன் முழுவதுமே ராகுல் அபாரமாக வீசினார். எதிரணிகளுக்கு நெருக்கடியை உருவாக்கி வெற்றிக்கு வழி வகுத்தார் என மும்பை அணியின் தலைமை பயிற்சியாளர் ஜெயவர்த்தன பாராட்டியுள்ளார். (க)

## சட்டமா அதிபர்...

கட்டளை மீதான சீராய்வு மனு விசாரணையை வரும் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் ஒத்திவைத்தது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் மற்றும் செயலாளருக்கு எதிரான வழக்கை தள்ளுபடி செய்யும் விண்ணப்பத்தை நிராகரித்து யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றம் வழங்கிய கட்டளை மீது யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் சீராய்வு மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

சீராய்வு மனுவின் இடைக்கால நிவாரணமாக மாணவர்கள் இருவருக்கும் பிணை வழங்குமாறு கோரப்பட்டது.

இந்த மனு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது.

மனுதாரர்கள் சார்பில் மூத்த சட்டத்தரணி வி.திருக்குமரன், சட்டத்தரணிகள் கலாநிதி கு.குருபரன், கே.சுகாஷ், வி.ரிஷிகேசன் உள்ளிட்டோர் முன்னிலையானார்கள். சட்டமா அதிபர் சார்பில் அரச சட்டவாதி மாதினி விக்னேஸ்வரன் முன்னிலையானார்.

சீராய்வு மனு இப்போது அவசியமானதா, அதற்கான காரணம் என்ன? என்று மனுதாரர்களின் சட்டத்தரணிகளிடம் மன்று கேள்வி எழுப்பியது.

மாணவர்கள் இருவரையும் பிணையில் விடுவிக்கும் கோரிக்கை அரசியல் ரீதியாக சட்டமா அதிபரிடம் முன்வைக்கப்பட்டுள்ளது. அதனால் இந்த விடயம் அரசியல் ரீதியாகவே பார்க்கப்படுகிறது.

அதனால் நீதிமன்றம் ஊடாக மாணவர்கள் இருவரின் விடுதலை தொடர்பில் நாங்கள் அணுகுகின்றோம் என்று மனுதாரர்களின் சட்டத்தரணிகள் மன்றுரைத்தனர்.

மாணவர்கள் இருவர் சார்பிலான சட்டத்தரணி என்ற வகையிலேயே சட்டமா அதிபருக்கு கடிதம் மூலம் விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது. அரசியல் ரீதியாக எந்த விண்ணப்பமும் செய்யப்படவில்லை.

சட்டமா அதிபர் திணைக்களம் நடுநிலையாக நின்று இந்த விடயத்தைக் கையாளும். பெரும்பாலும் இந்த வாரம் இந்த வழக்குத் தொடர்பான முடிவை சட்டமா திணைக்களம் எடுக்கும் என்று அரச சட்டவாதி மாதினி விக்னேஸ்வரன் மன்றுரைத்தார்.

இருதரப்பு சமர்ப்பணங்களையும் ஆராய்ந்த மன்று நீதவான் நீதிமன்றில் மாணவர்கள் இருவருக்கும் எதிரான வழக்கு நாளை வியாழக்கிழமை விசாரணைக்கு வருகிறது.

ஆகவே அன்றைய தினம் நீதவான் நீதிமன்றில் எத்தகைய தீர்மானம் எடுக்கப்படுகிறது என்பதைப் பார்த்து மேல் நீதிமன்றம் இந்தச் சீராய்வு மனுவைத் தொடர்வதா? என்ற முடிவுக்கு வரலாம். அதனால் வரும் வெள்ளிக்கிழமை இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படும் என்று சுட்டிக்காட்டிய மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர், அன்றைய தினம் வரை சீராய்வு மனுவை ஒத்திவைத்தார். (ம-3)

## கல்முனையில்...

அப்பகுதி முழுவதும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இராணுவத்தினர் கல்முனையில் உள்ள அனைத்து வீதிகளிலும் தற்போது ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

நேற்று மாலை கல்முனையில் இளைஞர்கள் தங்களது பிரதேசத்தில் நின்று கொண்டிருந்தபோது அங்கு வீதியால் வந்த மௌலவி அந்த இளைஞர்களை விசாரித்து விட்டுச் சென்றுள்ளார்.

அதன் பின்னர் சற்று தொலைவில் சென்று ஏன் அந்த இளைஞர்கள் அங்கு நிற்கின்றனர் என பிறரிடத்தில் வினவிய போதே மௌலவி மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத்தொடர்ந்து கல்முனையில் பல வீதிகளிலும் படையினர் குவிக்கப்பட்டு பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. (ம-3)

## வன்முறையுடன்...

74 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களுள் 33 பேர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஈஸ்டர் தினத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவங்களைத் தொடர்ந்து நாட்டில் அசாதாரண சூழல் நிலவிவருகின்றது. இந்நிலையில், கடந்த சில நாட்களில் பல்வேறு இடங்களில் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

அதன் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் மினுவாங்கொட உட்பட பல பகுதிகளில் வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## மாகாண மட்டத்...

தொடர்ச்சியாக மீளாய்வுகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி அனைத்து ஆளுநர்களுக்கும் பணிப்புரை விடுத்துள்ளார்.

அத்துடன் மாவட்ட மற்றும் பிரதேச ரீதியாக உரியவாறு பாதுகாப்பு குழுக்களை ஒன்று திரட்டி தத்தமது பிரதேசங்களின் பாதுகாப்பையும் அமைதியை பேணவும் பாதுகாப்புத் துறையினருடன் ஒன்றிணைந்து தேவையான தீர்மானங்களையும் மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி அனைத்து மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

கடந்த 12ஆம் திகதி காலி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற காலி மாவட்ட பாதுகாப்புக் குழு கூட்டத்தின்போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு பணிப்புரை விடுத்துள்ளார்.

நாட்டினுள் அமைதியை பேணுவதற்கு மாகாண ரீதியில் அமுல்படுத்த வேண்டிய விசேட வேலைத்திட்டமொன்றின் தேவை குறித்தும் ஜனாதிபதி இதன்போது தெளிவுபடுத்தினார்.

பொலிஸார், முப்படையினர், அரசியல் தலைமைகள் மற்றும் மதத் தலைவர்கள் ஆகியோரையும் இந்த வேலைத்திட்டத்தோடு இணைத்துக்கொள்ள வேண்டியதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

நாட்டின் அனைத்து இனங்களுக்கிடையேயும் சமாதானத்தையும் சகவாழ்வையும் உறுதி செய்வதற்கான குறுகிய கால மற்றும் நீண்டகால செயற்திட்டத்தின் தேவையையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

பிரதேச ரீதியாக ஏற்பட்டுள்ள வன்முறை சூழலை தவிர்ப்பதற்கு இவ்வாறு பாதுகாப்பு குழு கூட்டங்களில் எடுக்கப்படும் தீர்மானங்கள் மற்றும் பாதுகாப்பு சட்டதிட்டங்களை அமுல்படுத்துதல் மிக முக்கியமானதென தெரிவித்த ஜனாதிபதி, பாதுகாப்பு வழங்க வேண்டிய இடங்கள் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் நுட்பமாக கவனம் செலுத்தப்பட வேண்டிய இடங்கள் தொடர்பில் சரியான புரிந்துணர்வு அந்த சமூகத்துடன் செயற்படுபவர்களுக்கே அதிகம் என்பதினால் உரிய வகையில் பாதுகாப்பு குழுக்களை உரியவாறு ஒன்றுகூடி தேவையான தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டியதன் முக்கியத்துவம் பற்றியும் ஜனாதிபதி மேலும் தெளிவுபடுத்தினார். (ம-3)

## காணாமல்...

வியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இவ்வாறான சம்பவங்கள் காத்தான்குடியில் இருக்கின்ற ஒரு பிரபலமான அரசியல்வாதியின் தலைமையின் கீழே இயங்கிய ஆயுதக் குழுக்களினால் இது நடைபெற்றிருப்பதாகவும், குறித்த தமிழ் மக்களின் சடலங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தின் நகர்ப்புறத்தை அண்டிய பல பகுதிகளிலே புதைக்கப்பட்டிருக்கின்றன எனும் செய்தியையும் நாங்கள் அறிவித்திருக்கின்றோம்.

குறித்த இடங்களில் சடலங்கள் புதைக்கப்பட்டுள்ள விடயங்களை அடையாளப்படுத்துவதற்குரிய சாட்சியங்கள் எம்மிடம் இருக்கின்றன என்பதையும் மிகவும் உறுதியாகவும், தெளிவாகவும் கூறியிருக்கின்றோம். இவ்விடத்தில் இலங்கை இராணுவத்தினரின் மீது நம்பிக்கை வைத்து, நாங்கள் இந்த தகவலை வழங்கியிருக்கின்றோம்.

சம்பந்தப்பட்ட இடங்களைத் தோண்டி சடலங்கள் கண்டறியப்பட்டால், ஏராளமான உண்மைகள் வெளிவரும் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

மிக முக்கியமாக காணாமல்போன பிரபலங்கள், அரசியல் காரணங்களுக்காக அன்றி பொருளாதார மற்றும் தனிப்பட்ட தொழில் போட்டி காரணங்களுக்காகவும் காணாமல் போயிருக்கின்றார்கள். அவ்வாறானவர்களின் சடலங்கள் மட்டக்களப்பிலே பல இடங்களில் புதைக்கப்பட்டிருக்கின்றன. அந்த இடங்களை எமது சாட்சியங்களைக் கொண்டு, தோண்டியெடுக்கப்பட்டு, சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்பட வேண்டும் என நாங்கள் கோரிக்கையை விடுத்திருக்கின்றோம்.

இந்த விடயம் கடந்த மூன்று நாட்களுக்குள்ளேதான் நாங்கள் அறிந்தோம், அதற்கிணங்க நாங்கள் எமது கோரிக்கையை அனுப்பியுள்ளோம். இந்த விடயம் மூடி மறைக்கப்படக் கூடும் என்பதற்காக நாங்கள் ஊடகங்களுக்குத் தெரிவிக்கின்றோம். பாதுகாப்புக் காரணங்களுக்காக உடல்கள் புதைக்கப்பட்டுள்ள இடங்களை நாம் வெளியிடவில்லை. நிச்சயமாக எமது சாட்சியாளர் இராணுவத்தினருக்கு உரிய இடங்களை அடையாளப்படுத்துவார்.

இவ்வாறான சம்பவங்கள் காத்தான்குடியில் இருக்கின்ற பிரபல அரசியல்வாதியின் கீழ் இயங்குகின்ற ஆயுதக்குழுக்களால்தான் இடம்பெற்றிருக்கின்றன. தற்போது வரைக்கும் காத்தான்குடியில் ஆயுதங்கள் இருக்கத்தான் செய்கின்றன என அவர் தெரிவித்தார். (ம-3)

## பயங்கரவாதத்...

அவர்களிடம் உறுதியளித்துள்ளார்.

சீனாவுக்கான உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள மைத்திரிபால சிறிசேனவுக்கும் சீன ஜனாதிபதிக்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு நேற்று பிற்பகல் சீன ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள இந்த இக்கட்டான சூழ்நிலையில் பாதுகாப்புத் துறையினரின் செயற்பாடுகளுக்காக ஜனாதிபதியின் கோரிக்கைக்கு அமைய 260 கோடி ரூபாய் நிதி அன்பளிப்பினை வழங்க சீன அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அத்தோடு இலங்கை பொலிஸ் திணைக்களத்திற்கு 150 கோடி ரூபாய் பெறுமதி வாய்ந்த 100 ஜீப் வண்டிகள் உள்ளிட்ட வசதிகளை வழங்குவதற்கு சீன ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார்.

இருநாட்டு அரச தலைவர்களின் சந்திப்பினைத் தொடர்ந்து இருநாட்டு பாதுகாப்பு துறையினரின் ஒத்துழைப்பிற்கான புதிய புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றும் கைச்சாத்திடப்பட்டது. இரு தரப்பு கலந்துரையாடலுக்காக சீன ஜனாதிபதி மாளிகைக்கு வருகை தந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு சீன ஜனாதிபதி உற்சாக வரவேற்பளித்தார்.

உலகில் எந்த இடத்தில் கொடிய பயங்கரவாத சம்பவங்கள் தலைதூக்கினாலும் தான் அதனை வன்மையாக கண்டிப்பதாக சீன ஜனாதிபதி தெரிவித்தார். கடந்த ஏப்ரல் 21 ஆம் திகதி இலங்கையில் இடம்பெற்ற கொடிய பயங்கரவாத தாக்குதல் தொடர்பில் அதிருப்தி தெரிவித்த சீன ஜனாதிபதி, தாக்குதலினால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு தனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்தார்.

பயங்கரவாத சவாலை வெற்றிகொண்டு மீளெழும் இலங்கை மக்களுடன் சீன அரசு அனைத்து சந்தர்ப்பங்களிலும் கைகோர்த்து நிற்கும் என்று தெளிவுபடுத்திய சீன ஜனாதிபதி, அதற்காக அனைத்து சந்தர்ப்பத்திலும் தேவையான உதவிகளை வழங்குவதற்கு தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார். கடந்த ஏப்ரல் 21ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதல் மற்றும் அதன்பின் மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்பு செயற்பாடுகள் தொடர்பிலும் இருநாட்டு ஜனாதிபதிகளும் பல்வேறு விடயங்களை கலந்துரையாடினர். (ம-3)

## மாணவர்களின்...

கழக வளாக முன்றலில் இந்தக் கவனயீர்ப்புப் போராட்டம் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

மாணவர்கள் உள்ளிட்ட மூவருக்கும் இடையிலான வழக்கு நாளை வியாழக்கிழமை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் இடம்பெறவுள்ள நிலையில் சட்டமா அதிபர் மூவரின் விடுதலை தொடர்பில் உரிய அறிவுறுத்தலை வழங்கவேண்டும் என்று இந்தப் போராட்டத்தில் மாணவர்கள் வலியுறுத்தவுள்ளனர். (ம-3)

## கொடிகாமத்தில்...

வர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம் நேற்றிரவு 10 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் பாலாவி தெற்கைச் சேர்ந்த தங்கராசா நிரோஸ் (வயது28), அருணாசலம் பொன்னையா (வயது62) ஆகிய இருவரும் யாழ். போதனா வைத்தியசாலையிலும் மயூரன் நிரோஜனி (வயது32), தங்கராசா ரஜீபன் (வயது27) ஆகியோர் சாவகச்சேரி வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் அமுலிலிருக்கும் போது இவ்வாறு வாள்வெட்டுச் சம்பவம் இடம்பெற்றிருப்பது அப்பகுதியிலுள்ள மக்களிடையே பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3-10-114)

## பயன்படுத்தாத...

முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளன என்றும் இவற்றை, இலங்கை இராணுவமோ அல்லது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமோ பயன்படுத்தியிருக்கவில்லை என்றும் கண்டறியப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பல்வேறு இரசாயனப் பதார்த்தங்களை உருக்கியே, இந்தக் குண்டுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்தக் குண்டுகளை வெடிக்க வைப்பதற்காக, மின்குமிழ்களில் பயன்படுத்தும் நுண்ணிழைகளையே பயன்படுத்தியுள்ளனர். குண்டுதாரிகளின் முதுகுப் பொதியில், இவ்வாறான குண்டு இருந்துள்ளமை தொடர்பில், விசாரணைகளின் போதும் இது வரையில் கண்டறியப்படவில்லை என்றும் இராணுவ தரத்திலான வெடிபொருள்களை இவர்கள் பயன்படுத்தியுள்ளமை நம்பமுடியாத உண்மை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

வெடிச்சம்பவம் இடம்பெற்றதை அடுத்தும் கூட, ரி.என்.ரி மற்றும் ஆர்.டி.எக்ஸ் போன்ற வெடிபொருள்களைக் கண்டறிய முடியவில்லை. ஐ.எஸ் பயங்கரவாத அமைப்பு, இவ்வாறான வெடிகுண்டுகளை, உலகின் பல இடங்களிலும் பயன்படுத்தியுள்ளனர் என்றும் வெடிகுண்டுகளில் கலக்கப்படும் இரசாயனங்கள், சரியான அளவில் கலக்கப்பட்டிருந்தால், பேரழிவு ஏற்படக்கூடும் என்றும், விசாரணைகளை மேற்கொள்ளும் தரப்பிலிருந்து தெரியவந்துள்ளது. (ம-3)


மஹஜன சம்பத
திகதி 2019/05/14
சீட்டிழுப்பு இலக்கம் 3917
ஆங்கில எழுத்து M — வெல்லப்பட்ட இலக்கங்கள் 8 5 0 8 1 1

கொவிசெத
திகதி 2019.05.14
சீட்டிழுப்பு இலக்கம் 2119
ஆங்கில எழுத்து J — வெல்லப்பட்ட இலக்கங்கள் 16 19 67 80

செவண
திகதி 2019/05/14
சீட்டிழுப்பு இலக்கம் 184
ஆங்கில எழுத்து U — வெல்லப்பட்ட இலக்கங்கள் 15 32 34 65

நீரோகா
திகதி 2019/05/14
சீட்டிழுப்பு இலக்கம் 546
லக்கினம் மிதுனம் — வெற்றி இலக்கங்கள் 12 23 43 45

## அவர்களின் அரசியல், பொருளா...

கான போராட்டத்தை சர்வதேச சமூகத்தின் உதவிகளுடன் நசுக்கியதை போல் தற்போது முஸ்லிம் மக்களை பயங்கரவாதிகளாக சித்திரித்து அவர்களின் அரசியல் மற்றும் பொருளாதார பலத்தை மழுங்கடிக்கும் கைங்கரியங்கள் நடந்தேறுவதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முஸ்லிம் மக்களுக்கு எதிராக அண்மைய நாட்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள வன்முறைகளைக் கண்டித்து நேற்று செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டு பல நாட்கள் கடந்துள்ள நிலையில் முஸ்லிம் மக்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள வன்முறைகளின் பின்னணியை ஆராய்ந்து பார்க்கும் போது இது நன்கு திட்டமிட்ட தொடர் நடவடிக்கை ஒன்றின் அங்கம் என்பதை எடுத்துக் காட்டுகிறது.

ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தவேளை வன்முறையாளர்கள் முஸ்லிம் மக்கள் மீது தாக்குதல் நடத்தியதாகவும் பொலிஸ் நிலையங்களுக்கு சில மீற்றர்கள் தொலைவில் அவர்களின் சொத்துக்களை நாசம் செய்ததாகவும் வெளிவரும் செய்திகள் 1983 ஆம் ஆண்டு தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட அரச பயங்கரவாதத்தை ஞாபகப்படுத்துகிறது.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை அரசியல் ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் பலவீனப்படுத்தி அழிப்பதற்கு மற்றொரு சிறுபான்மை இனத்தை பல்வேறு வழிகளிலும் தந்திரமாக பயன்படுத்தின. சிங்கள அரசாங்கங்களும் படையணி இயந்திரமும். கடந்த காலங்களில் எமது இரு சமூகங்களையும் மோதவிட்டு வெற்றிகரமாக இவை செயற்பட்டுள்ளன.

விடுதலைவேண்டி போராடிய தமிழ் மக்களை இன அழிப்பு யுத்தத்தின் மூலம் பலவீனப்படுத்தியுள்ள சிங்கள பேரினவாதத்தின் பார்வை தற்போது எமது முஸ்லிம் சகோதரர்களின் மீது திரும்பியிருக்கின்றது. எவ்வாறு ஆரம்ப காலங்களில் தமிழ் மக்களின் பொருளாதார, சமூக கட்டமைப்புக்கள் இலக்கு வைக்கப்பட்டனவோ அதேபோல, இன்று முஸ்லிம் மக்களின் பொருளாதார, சமூக கட்டமைப்புக்கள் இன வன்முறை என்ற போர்வையில் இலக்கு வைக்கப்பட்டுள்ளன.

கடந்த கால அரசாங்கங்களின் அனுசரணையுடன் வளர்க்கப்பட்ட முஸ்லிம் பயங்கரவாத சக்திகளே உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களில் ஈடுபட்டன என்பதை அரசாங்க அமைச்சர்களே வெளிப்படையாக கூறியுள்ளனர்.

இந்த உள்நாட்டு பயங்கரவாத அமைப்புக்களுக்கு வெளிநாட்டு பயங்கரவாத சக்திகளுடன் ஏற்பட்டுள்ள தொடர்புகளை முடிந்தளவுக்கு பயன்படுத்தி ஏனைய சமூகங்களை அடக்கி ஆள்வதற்கும் சர்வதேச அனுகூலங்களை பெற்றுக்கொள்வதற்கும் முயலும் பேரினவாதத்தின் திட்டங்களுக்கு நாம் மீண்டும் பலியாகிவிடக்கூடாது.

இந்த சந்தர்ப்பத்தில் தமிழ் மற்றும் முஸ்லிம் புத்திஜீவிகளும் அரசியல்வாதிகளும் கடந்த கால கசப்புணர்வுகளை மறந்து எதிர்காலத்தை கருத்திற் கொண்டு சமயோசிதமாக செயற்பட வேண்டும்.

இராணுவம் மூலமாக சிறுபான்மையினரை இருந்த இடம் தெரியாமல் அழிக்க முற்பட்டால் அதனை முறியடிக்க நாம் யாவரும் தயாராக வேண்டும் என்று அவர் அந்த அறிக்கையில் கூறியுள்ளார். (ம-3)

## அப்பாவி முஸ்...

நாட்டு மக்களிடம் சபாநாயகர் கரு ஜயசூரிய வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாட்டின் பல பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் முஸ்லிம் மக்கள் மீதான வன்முறைகள் மற்றும் இவற்றினால் ஏற்பட கூடிய விளைவுகளை கருத்திற் கொண்டு.

அரசியல் வாதிகள் பொதுமக்களை அமைதிப்படுத்தும் வகையில் செயற்படுமாறும், மதத்தலைவர்கள் தற்போது மூண்டிருக்கும் நெருப்பை அணைக்க முன்வருமாறும் கேட்டுக் கொண்டார். (ம-3)

## நாடு முழுவதும் இன்று...

கப் பிரிவு தெரிவித்துள்ளது.

கம்பஹா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளுக்கு நேற்று இரவு 7.00 மணியிலிருந்து இன்று காலை 6.00 மணிவரையும் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, நேற்று முன்தினம் மாலை தொடக்கம் வட.மேல் மாகாணத்தில் நடைமுறையில் இருந்த ஊரடங்குச் சட்டம் நேற்று மாலை 4.00 மணிக்கு நீக்கப்பட்டது.

எனினும் மாலை 6.00 மணி தொடக்கம் இன்று காலை 6.00 மணி வரையில் மீண்டும் அங்கு பொலிஸ் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக, பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

பல பகுதிகளில் இன்னமும் இயல்பு நிலை ஏற்படாததால், தொடர்ந்தும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. (ம-3)


# வேலைவாய்ப்பு



சர்வதேச தரத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் The Inner Circle (PVT) LTD நிறுவனத்தில் கீழ்க்காணும் பதவி வெற்றிடங்கள் உள்ளன.

1. காரியாலய உதவியாளர்
2. மேற்பார்வையாளர்
3. உதவி முகாமையாளர்
4. நிர்வாக அதிகாரி

பயிற்சியின் போது அடிப்படை சம்பளம் 24,550/= + E.P.F, E.T.F பின்னர் 45,000/= மேல் (பதவிக்கேற்ப தீர்மானிக்கப்படும்.)

வயதெல்லை 18 - 26

தகைமை O/L, A/L

(8781)

**076 770 7759, 077 999 4807**

# வேலைவாய்ப்பு

- அலுவலகப் பணியாளர் (தகைமை A/L வணிகத்துறை)
- கமரா பொருத்துநர்
- கமரா பொருத்தும் பயிற்சி பெற விரும்புவோர்.

**தொடர்பு : 077 552 7099**

SST சன்சக்தி ரேடர்ஸ் பிறைவேற் லிமிட்டட்

தகவல் தொழில்நுட்பம் & பாதுகாப்பு கருவிகள் வழங்குனர்

# 651, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்

021 221 7994 077 5527099 / 0703999388

sunsakthy.com info@sunsakthy.com sunsakthy traders

(8784)



## கணக்கீடு விசேட கருத்தரங்கு

(அலகு ரீதியானது)

"முழு அலகுகளும் ஆராயப்படும்"

ஒவ்வொரு வியாழக்கிழமை தோறும்

ஆரம்பம் 16.05.2019

நேரம் : 3.00 - 6.00 P.M

S.தவா


DCM யாழ்நகர்

T.P : 077 239 5858

(8782)


# மரண அறிவித்தல்

## உயர்திரு சிறீரங்கம் சின்னப்பு ஜேம்ஸ்



புதுமடம், உடுவில் தெற்கு, மானிப்பாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட உயர்திரு. சிறீரங்கம் சின்னப்பு ஜேம்ஸ் அவர்கள் நேற்று 14.05.2019 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பு - கனகம்மாவின் பாசமிகு மகனும், மரியசஞ்சீவியின் அன்புக் கணவரும், யோசப்மேரி (ஜோசித்தன் - ஆசிரியர், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி) அவர்களின் தந்தையும், தமிழினி வலன்ரீனா (ஆசிரியர், காரைநகர் யாழ்ரன் கல்லூரி) அன்பு மாமனாரும், ஹரிநந்தனன், ஹரிநிருத்திகன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.05.2019) புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு புதுமடம் கர்த்தர் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்பட்டு நல்லடக்கத்திற்காக மல்வம் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C-6377) **தகவல் : ஜோசப்மேரி (ஜோசித்தன்) 077 285 0405**






வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: **றாஜ் - 077 679 6623** (8783)



## பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை

பாதுகாப்பு உத்தியோகத்தராகக் கடமையாற்றுவதற்குத் தகுதியானவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

30 வயதுக்கு மேற்பட்ட, யாழ் நகரத்திற்கு அண்மையில் குடியிருப்பவர்கள் சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்துடன் வலம்புரி பத்திரிகை அலுவலகத்திற்கு நேரில் வருகைதரவும்.

— முகாமையாளர்



வெளிநாடு-உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

WESTERN UNION **070 330 5500** WESTERN UNION

அண்ணா பொதிகள் சேவை

976, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி

021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.

3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்

வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்

கரணவாய் – மீசாலை – கிளிநொச்சி – கனகராயன்குளம்

முல்லைத்தீவு – மன்னார் – வவுனியா – திருகோணமலை

(C-6367)



## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு



DELIVERY IN 3-5 DAYS

| | |
|---|---|
| UK - 550 | /-Kg |
| கனடா - 900 | /-Kg |
| ஜேர்மனி - 700 | /-Kg |
| நெதர்லாந்து - 700 | /-Kg |

0768226240

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

V2 TRAVELS

(C-6322)